# கிட்ஸ்ஹப்ஸ்

## ஒளிப்பட ஊடகம் பாகம் 1 - 10



# ஒளிப்பட கையேடு

### புத்தகம் 1 பாகம் 1

# கிட்ஸ்ஹப்ஸ்

கிட்ஸ்ஹப்ஸ் என்பது குழந்தைகளையும் இளம் வாலிபர்களையும் அனுகி அவர்களுக்கு சீஷத்துவ பயிற்சி அளிப்பதற்கு உதவிடும் உலகளாவிய இலவச நிகழ்வாகும். இத்திட்டத்தை ஒரு சபையிலோ, குழுவிலோ, பள்ளியிலோ அல்லது முகாமிலோ நடைமுறையில் உள்ள நிகழ்வுகளில் ஒன்றாக பயன்படுத்தலாம். அல்லது ஒரு சமூகத்தில் புதிய குழு துவங்கிட பயன்படுத்தலாம். கிட்ஸ்ஹப்ஸ் என்பது பிள்ளைகள் இயேசுவை பின்பற்றுவது எப்படி என்பதை வேதப்புத்தகத்திலிருந்து கற்றுக்கொள்ளவும் அத்துடன் வாழ்வுக்கு பயனுள்ள புதிய அறிவுத்திறனை கற்றுக் கொள்ளவும் உதவும். பெரியவர்கள் மற்றும் வாலிபர்களுக்கு பிள்ளைகளிடம் உறவாடிடவும் அவர்களை பயிற்சிவிக்கவும் இத்திட்டம் உதவும். விளையாட்டு, ஊடகம், படப்பிடிப்பு, நாடகம், சமையல், விவசாயம், சதுரங்கம், இசை இது போன்று நம்மை சுழ்ந்த எதை சார்ந்தும் கிட்ஸ்ஹப்ஸ் இருக்கலாம். கிட்ஸ்ஹப்ஸ் ஒரு சங்கம் அல்ல மாறாக இது ஒரு இலவச ஆலோசனை மற்றும் இயக்கம். உங்களால் உருவாக்கப்படும் எதுவானாலும் அதை www.kidshubs.org இணையத்தளத்திலும், www.max7.org என்ற திறந்த நிலை இணையத்தளம் மூலமும் மற்றவர்களிடம் பறிமாறிக்கொள்ளலாம். கிட்ஸ்ஹப்ஸ் நடத்துவதற்கான தேவை என்னவென்றால் அதின் தலைவர்கள் உண்மை உள்ளவர்களாகவும் எந்நேரமும், எப்போதும், பிள்ளைகளுக்கு உதவவும், அவர்களை பாதுகாப்பதும் அவசியம். பிள்ளைகளுக்கு மகிழ்ச்சியூட்டுவதாகவும், விருவிருப்பாகவும் பாதுகாப்பான முறையில் கற்று கொள்ளும் திட்டமாகவும் இருக்க வழிவகுத்திட வேண்டும். இயேசுவையும், வேதாகமமும் வாழ்கையின் எல்லா அங்கத்தையும் உள்ளடங்கியது என்று கற்றுக்கொள்வார்கள;.








## இந்த கிட்ஸ்ஹப்ஸ் திரைக்கையேடு எங்கிருந்து வந்தது?

இக்கையேடு இந்தியா கிட்ஸ்ஹப்ஸ், கொல்கத்தாவில் மிகவும் ஏழ்மையான பகுதியில் 44 பிள்ளைகளை கொண்டு முதலில் நடத்தபட்டதிலிருந்து கிடைக்க பெற்றது. இது பள்ளியில் கிட்ஸ்ஹப்ஸ் நடைப்பெற்று முடிந்ததும் தொடர்ந்து கற்றுக் கொள்ள விரும்பிய குழுவுடன் ஒரு வார காலம் நடத்தப்பட்ட திரை ஊடக பயிற்சியாகும். இந்த பிள்ளைகளுக்கு உபயோகப்படுத்தப்பட்ட நிகழ்வுகள் இக்கையேட்டில் உள்ளது. இதை உங்கள் சூழலிற்கு ஏற்றபடி மாற்றி அமைத்து கொள்ளலாம். கொல்கத்தாவில் பயின்ற பிள்ளைகளில் ஒருவர் கூட கிட்ஸ்ஹப்ஸ் வருவதற்கு முன்பு நிழற்படக் கருவியை (கேமராவை) கையாண்டதில்லை. நான்காவது நாளில், அவர்களே வேதாகம கதைளை படப்பிடிப்பு செய்ய துவங்கினார்கள். இதன் விளைவுகள் ஆச்சரியப்பட செய்தது. www.kidshubs.org இணையத்தளத்தில் "கொல்கத்தா" என்று தேடி காணலாம்.

கொல்கத்தாவில் நடத்திய கிட்ஸ்ஹப்ஸ் மாதிரியில் வந்த குழந்தைகளை 3 முதல் 4 நபர்களை கொண்ட மொத்தம் 14 குழுவாக பிரிக்கப்பட்டு, குழுவிற்கு ஓர் நிழற்படக் கருவியும் (கேமரா) கொடுக்கப்பட்டது. அவர்கள் சிறிய "பிளே ஸ்போட்ஸ்" கோடாக் கேமராக்களை பயன்படுத்தினார்கள். சோனிப் பிளோகி அல்லது ஸ்மாட் அலைப்பேசியில் உள்ள நிழற்படக் கருவியையும் பயன்படுத்தலாம்.

ஔப்படக் கருவியில் (கேமரா) குறிப்பு சீட்டு ஒட்டி அடையாளங்கள் வைத்து கொள்வதின் மூலம் எந்த கருவி எந்த குழுக்களுடையது என்ற குழப்பத்தை தவிற்கலாம்.

இந்த ஒரு வார கால ஒளிப்பட பயிற்சி நிகழ்வில் பிள்ளைகளுக்கு இந்த படங்களை, தொகுத்து (எடிட்) கற்றுக் கொடுக்கும் அளவிற்கு நேரம் போதவில்லை. கிட்ஸ்ஹப்ஸ் தலைவர்களால் ஒவ்வொரு மாலையிலும் இவை தொகுத்தமைக்கப்பட்டவை. உங்கள் கிட்ஸ்ஹப் பல வாரங்கள் தொடாச்சியாக நடைப்பெற்றால் இதை பிள்ளைகளே ஐமூவி அல்லது வின்டோஸ் மூவி மேக்கர் அல்லது சீர்செய்ய பயன்படுத்தும் வேறு மென்பொருள் பயன்படுத்தி செய்யலாம்.

உற்சாகமாயிருங்கள். தலைவர்களுக்கு ஊடகத்தை குறித்தான அதிக அனுபவம் இல்லாவிட்டாலும் இப்பாடங்கள் போதிப்பதற்கு மிகவும் எளிதாக வரையறுக்கப்பட்டுள்ளது.

## நிழற்பட வகுப்புகளின் உள்ளடக்கம்

**நிழற்படம் தயாரித்தலை குறித்து முன்னனுபவம் இல்லாவிட்டாலும் நீங்கள் பிள்ளைகளை வழிநடத்தும் அளவிற்கு இதில் உள்ள ஒவ்வொரு பாடங்களும் அமைக்கப்பட்டுள்ளது பிள்ளைகளுக்கு கற்றுகொடுக்கும் முன் ஒவ்வொரு பாடத்தையும் கூர்ந்து படிக்கவும். இதில் உள்ள பல்வேறு உதாரணங்களை முயற்சி செய்து பாருங்கள்.** www.max7.org **இணையத்தளத்திலிருந்து நிழற்பட உதாரணங்களை எடுத்துக்கொள்ளவும்.**


| எண் | பாட தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 1 | உருவரைப்படுத்தல் மற்றும் காலம் | 5 |
| 2 | ஒளிப்பட கருவியை பயன்படுத்துவது எப்படி? | 10 |
| 3 | ஒறுங்கிணைத்தல் மற்றும் 3ஆம் விதி | 17 |
| 4 | ஒளி அமைப்பு | 22 |
| 5 | செயல் திட்டம் #1 (காணாமல் போன காசு உவமை) | 25 |
| 6 | செயல் திட்டம #2அ (கதைத்தளம்) | 29 |
| 7 | தொகுப்பு என்றால் என்ன? | 33 |
| 8 | ஒலி | 36 |
| 9 | செயல் திட்டம் #2b (படப்பிடிப்பும், நடித்தலும்) | 39 |
| 10 | திரையிட்டு காட்டுதல் | 41 |








| **பாடத்தின் பொருட் சுருக்கம்**<br>இதில் உள்ள பகுதிகள் ஒவ்வொரு கிட்ஸ்ஹப்ஸ் பாடத்திலும் பயன்படுத்தபடும் ஆனால் எல்லா பாடமும் இந்த வரிசையில் இருந்தாக வேண்டிய அவசியமில்லை. | |
|---|---|
| **கற்பனையை செயல்படுத்துதல்** | மகிழ்யூட்டும் மற்றும் ஈடுபடுத்தும்படியான செயற்பாடுகள்கொன்ட பாட அமைப்பு. என்ன கற்றுக்கொடுக்கிறோமோ அதில் ஆர்வமூட்டி பின் பாடத்தின் பின் பகுதியில் பயன்படும் சில சாதாரண திறன்களை கற்பித்தல். |
| **வேதாகம கருத்தை பகிர்தல்** | நிழற்பட திறனில் என்ன கற்றுக்கொள்கிறோமோ அவை வேதாகமத்தில் கண்டுகொள்வதற்கு ஒப்பனையாக உள்ளது என்று அராய்வதற்கான நேரம்.. |
| **ஊடகத்தை ஆராய்தல்** | இந்த பாடத்திற்கான நிழற்பட திறனை கற்றுக்கொடுக்கும் நேரம். |
| **திறனை அப்பியாசபடுத்தல்** | கற்றுக்கொடுக்கும் பாடத்தை பிள்ளைகள் அனுபவிக்கும நடைமுறை செயல்முறைக்கான நேரம்.. |
| **மறுசீர்ராய்வு செய்** | அடுத்தமுறை அவர்கள் நினைவில் கொள்ளும் வகையில் கற்றுக் கொடுத்ததை பிள்ளைகளிடம் மறு ஆய்வு செய்வதாக பாடத்தின் முடிவு இருக்க வேண்டும். |

| **இந்த கையேட்டில் பயன் படுத்தப்பட்ட அருஞ்சொல்லின் விளக்கப் பட்டியல்** | |
|---|---|
| ஒளிப்பட கருவி இயக்குபவர் | படம் தயாரிக்கும் நோக்கில் பட காட்சியை பதிவு செய்ய ஒளிப்பட கருவியை கையாளுபவர். |
| கதா பாத்திரம் | 1. நாடகத்தில் அல்லது கதையில் வரும் ஒரு நபர்<br>2. படத்தில் அல்லது நாடகத்தில் வரும் பகுதி |
| ஒறுங்கிணைத்தல் | காட்சி சாந்த பொருள், நடிகர்கள் மற்றும் விளிம்பிற்குள் காணப்படுவது |
| இயக்குனர் | ஒளிப்பட கருவியின் படப்பிடிப்பையும் ஒளிப்பட அசைவையும், நடிகர்களின் ஆற்றலை வழிநடத்தி படம் வெளிவருவதற்கு காரணமானவர். |
| உருவரைச் சட்டம் | 1. ஒளிப்பட கருவி பதிவு செய்வதே உருவரைச் சட்டமாகும். நிழற்படத்தை சுற்றிலும் வட்மிடுதல் போன்றது. ஒளிப்பட கருவி செவ்வக உருவப்படம் பதிவு செய்யும். உருவரைச் சட்டதிற்கு வெளியில் இருக்கும் எதையும் பதிவு செய்வதில்லை.<br>2. உருவரைப் படுத்தல் என்பது ஒளிப்பட கருவியை காட்சிப் பிடிப்பதற்கு, காட்சி சார்ந்த மூலக் கூறுகளை ஒறுங்கிணைத்தல் |
| படக்காட்சி | படம் எடுக்கப்பட்ட பொருட்களின் அளவையும் ஒளிவிழுந்த நீளத்தையும் அடியளவில் அளப்பதின் பழமையான வார்தையாகும். ஒளிப்பதிவு செய்த குறிப்பிட்ட நிகழ்வைக் காட்டும் திரைப்படப் பகுதி. |
| தலை-மேற்பகுதி இடவெளி | திரையில் காணப்படும் பொருளில் தலைக்கும் ஒளிப்பட கருவியின் சட்டதின் தலைக்கும் உள்ள இடவெளி. |
| முந்துநிலை அளவு | பொருளின் அல்லது நபரை வழி நடத்துவதற்காக அவர்கள் முன்பாக உள்ள இடைவழி. எடுத்து காட்டு ஒருவர் இருசக்கர வாகனத்தில் திரையின் இடது பக்கம் இருக்க வலது பக்கம் உள்ள இடைவழி முந்து நிலை அளவாகும். |
| வீச்செடுப்பு | ஒரே ஒளிப்பட கருவியில் எவ்வித இடையூரும் இல்லாமல் நடிப்பினை பதிவு செய்தல். திரைப்படத்தின் ஒரு வீச்செடுப்பு கதை உருவெடுக்க முக்கிய அம்சமாகும். இப்படி எடுக்கப்பட்ட ஒவ்வொரு உருப்படமும் பின்னர் அதை மொத்தமாக தொகுத்து திரைக்கதையாக உருவாக்கப்படும். |
| திரைக்கதை | கதை உருவாக ஒளிப்பட கருவி எதை படமாக்க வேண்டும் என்ற வரைபடம் போன்று தாளில் எழுதுவது. |
| பொருள் | fijapy; cs;s Kf;fpa egh;> tpsq;F> nghUs; Nghd;wit. |
| நேரம் | ஓர் உருப்படம் எடுக்க ஏற்படும் நேரம். அதிகபட்சமான குறைந்த நேரமே எடுக்கும். |

பாடம் : 1

## உருவரைப்படுத்தல், காட்சி எடுத்தல் மற்றும் நேரம்

**நேர அளவு : 60-90 நிமிடங்கள்**

**வேதாகம பகுதியும் செய்தியும்**

மத்தேயு **18:10-14** – தேவன் காணாமல் போன சிறிய ஆடு கூட காப்பாற்ற பட வேண்டும் என பார்கிறார். லூக்கா 15: 3-7

முக்கிய யோசனை

- **உருவரைப்படுத்தல் -** இந்த பாடத்தின் முடிவில் பிள்ளைகள் ஒளிப்பட கருவியின் சட்டத்தில் உள்ளது என்ன என்பதை புரிந்து கொள்வார்கள்.
- **உருப்படம்-** பல படப்பிடிப்பு காட்சிகள் கொண்டதே ஒளிப்படம் அல்லது பல சிறிய உருப்படங்கள் இனைய பெற்றால் தான் பெரிய கதை உருவாகும் என்று புரிந்து கொள்வார்கள். .
- நேரம் - பிள்ளைகள் உருப்படம் சிறிய நேரம் கொண்டது என்று புரிந்து கொள்வார்கள்.
- ஆயத்தம்
- பிள்ளைகள் வருவதற்கு முன்பே பாடத்தில் உள்ளவற்றை நன்கு அறிந்து கொள்ளுகள்.
- "காணாமல் போன" ஆடு என்ற நகலை www.max7.org எடுத்துக்கொள்ளவும்.

தேவையான கைவேளை பொருள்கள்

ஒளிப்பட கருவி, வரைப்படம், ஒளி எறிவுக் கருவி (Projector) அல்லது தொலைக்காட்சி பெட்டி(பட காட்சியை பார்க), கனிணி, குறிப்பேடு மற்றும் எழுதுகோல் (ஒவ்வொரு பிள்ளைகளுக்கும்) எழுதுப் பலகை (படம் வரைய) ஏற்ற ஒளிப்பட நகலை ஆயத்தம் செய்து கொள், நிறுத்தக் கடிகாரம் மற்றும் அட்டைப் பலகை (தேவைப்பட்டால்)

## பாடம் 1 பொருட் சுருக்கம்

### கற்பனையை செயல்படுத்து 15 நிமிடம்

பிள்ளைகளை வரவேற்றல் 5 நிமிடம்

| செயல்பாடு 1 | செயல்பாடு 2 ___ உணவை எண்ணு |
|---|---|
| பிள்ளைகளை வரவேற்க இணைப்பு பகுதியில் (இக்கையேடின் பின்புறத்தில்) உள்ள ஆயத்த செயல்பாட்டிலிருந்து ஒன்றை தெரிந்து கொள்ளுங்கள்.இது பிள்ளைகள் ஒருவருக்கொருவர் அறிந்து கொள்ள உதவிடும். மகிழ்வூட்டும் விளையாட்டை விளையாடலாம். எ.கா. மக்களுக்கு மக்கள் விளையாட்டு | எல்லோருக்கும் கிடைக்கும் அளவிற்கு இனிப்பு அல்லது பழங்கள் உள்ளது என்று பிள்ளைகளிடம் கூறுங்கள். அதற்கு முன் பிள்ளைகளின் எண்ணிக்கையில் ஒரு இனிப்பு குறைச்சலாக இருக்கிறதா என்பதை உறுதி செய்து கொள்ளுங்கள். ஒரு குழந்தையை பிள்ளைகள் எத்தனை என்பதை எண்ண சொல்லுங்கள் அதே வேளையில் மற்றொரு குழந்தையிடம் எத்தனை இனிப்புகள் என்பதை எண்ண சொல்லுங்கள். அவர்களிடம் பதிலை கேளுங்கள். இந்த கேள்விகளை குழுக்களிடம் கேட்கலாம்.<br>▪ இதில் எதேனும் பிரச்சனை உள்ளதா? (ஆமாம் ஒன்று குறைகிறது.)<br>▪ நாம் என்ன செய்யலாம்?<br>▪ நாம் இந்த பிரச்சனையை பின்னர் தீர்வு செய்யலாம். |

நடிப்பு வார்தைகள் "நடிப்பு" மற்றும் "நிறுத்து" 5 நிமிடம்

"நடிப்பு சார்ந்த வார்த்தைகளை" பல பாடங்களில் நாம் கற்று கொடுப்போம். இது பிள்ளைகளை அமைதிப்படுத்தும் ஓர் மகிழ்வூட்டும் செயல்பாடகவும் அதே நேரத்தில் மைய கருத்தை கற்று கொடுக்க உதவியாகவும் இருக்கும். அதின் வார்த்தையும் நடிப்பையும் பிள்ளைகளுக்கு கற்று கொடுங்கள்

"நடி" என்று நீங்கள் சத்தம் இடும்போது பிள்ளைகள் சுற்றி ஓடவோ அல்லது குதிப்பது, பேசுவது, நடனமாடுவது அல்லது அவர்கள் என்ன செய்ய விரும்புகிறார்களோ அதை செய்யலாம். "நிறுத்து" என்று நீங்கள் சொல்லும் போது அவர்கள் நிறுத்தி அமைதி காக்க வேண்டும். மகிழ்வூட்டும் விதமாக நடத்தி அவர்கள் கரு பொருளை புரிந்து கொள்ளும் வரை 2 அல்லது 3 முறை முயற்சி செய்து பாருங்கள்.

உருவரைச் சட்டம் குறித்தான விளையாட்டு (உருவரைச் சட்டம்/ காட்சி/நேரம்)

*நிழற்பட கருவி "பார்பது" என்ன என்பதையும் உருவரை சட்டம் என்ன என்பதையும் பிள்ளைகள் புரிந்து கொள்வதற்கு இந்த செயல்பாடு உதவிடும்.. 2 மீட்டர் இடைவெளியில் ஒருவர் எதிரே மற்றொருவர் என நேர் கோட்டில் பிள்ளைகளை நிற்க சொல்லுங்கள். அவர்கள் கரங்களை உயர தூக்க சொல்லுங்கள் (அவர்கள் கட்ட விரலையும் ஆள்காட்டி விரலையும் சேர்த்து வைக்க சொல்லவும்) செங்கோணம் போன்ற சட்டம் உருவாக்க சொல்லவும். இது சுவரில் உள்ள வரைப்பட சட்டம் போன்றது மற்றும் ஒளிப்பட கருவி நாம் பயன்படுத்தும் போது அது பார்பது போன்றது என்று பிள்ளைகளுக்கு விளக்கி சொல்லுங்கள். அவர்களை அந்த செங்கோண சட்டத்தின் ஊடாக எதிரில் உள்ள நபரை பாக்க சொல்லுங்கள்..*

பகுதி 1: ஒவ்வொரு வரிசையில் நிற்கும் பிள்ளைகளும் வாய்ப்பு எடுத்து கொள்ள வேண்டும். — ஒருவரிசை ஒளிப்பட கருவி கையாளுபவராகவும் மற்றொரு வரிசையில் உள்ளோர் நடிகர்கள். ஒளிபட கருவியை கையாளுபவர் தங்கள் கைகளால் உருவரைச் சட்டம் போன்று செய்யும் போது எதிரில் உள்ள நடிகர்கள் நகைச்சுவை செய்து காட்ட வேண்டும். (எ.கா.)சிரிப்பு, சோகமான முகம், கேளிக்கையான முகத்தை காட்டலாம்.) ஒவ்வொரு நிமிடத்திற்கும் முகபாவனையை மாற்றி கொண்டே இருக்கலாம்.

விளக்கம்: உங்கள் விரல் ஊடாலாக நீங்கள் பார்ப்பது திரைபடம் பதிவு செய்யும் போது ஒளிப்பட கருவி பார்பது போன்று ஆகும். செங்கோண சட்டத்திற்குள் என்ன இருக்கிறது என்றும் அதற்கு வெளியில் என்ன இருக்கிறது என்றும் நீங்கள் உங்கள் விரல்களை வைத்து பலமுறை பயிற்சி செய்ய வேண்டும். ஒளிப்பட கருவி பார்க்கும் பகுதிதான் உருவரைச் சட்டம் என்பதை பிள்ளைகள் புரிந்து கொண்டார்களா என்பதை சோதித்து பாருங்கள்.

பகுதி 2: உருவரை சட்டத்தின் அளவை மாற்ற தங்கள் உருவரை சட்டத்தை (விரல்களை) தூரத்திற்கோ அல்லது தங்கள் கண்களின் அருகாமைகோ நகர்த்த பிள்ளைகளை உற்சாகப்படுத்துங்கள் அவர்கள் உருவரை சட்டத்தை (விரல்களை) கண்களுக்கு அருகிலோ ( நிறைய பொருள்களை பார்கிறார்கள்) தூரத்திலோ (குறைந்த பொருட்களை பார்கிறார்கள்) நகர்தும்போது கவனிப்பது என்ன என்று கேளுங்கள்.

குழந்தைகள் பேசுகிறார்கள் 4 நிமிடம்

உங்களுக்கு அருகாமையில் பிள்ளைகளை அமர செய்யுங்கள். ஓர் கலந்துரையாடல் துவங்கும் வகையில் பின்வரும் கேள்விகளை பிள்ளைகளிடம் கேளுங்கள். நீங்கள் முதல் முறையாக ஒளிப்பட கருவியை பயன்படுத்திய போது உங்கள் உணர்வுகளை அவர்களிடம் கூறுங்கள்

ஒளிப்பட கருவியை யார் பயன்படுத்தி உள்ளீர்கள்? (எப்பொழுது கடைசியாக ஒளிப்பட கருவியை உபயோகப்படுத்தினீர்கள்?)

- ஒளிப்பட கருவியை பயன்படுத்துவதில் நீங்கள் மகிழ்ந்தது என்ன?
- ஒளிப்பட கருவியை ஏன் மக்கள் பயன்படுத்துகிறார்கள்?

## வேதாகம கருத்துப் பரிமாற்றம். 20 நிமிடம்

ஒளிப்படத்தை பாருங்கள் 3 நிமிடம்



அகலத்திலும், நடுத்தரத்திலும் மற்றும் அருகிலும் எடுக்கப்பட்ட உருப்படம் அடங்கிய காட்சிகளுடைய, சிறு ஒளிப்படத்தை காண்பிக்கவும். படத்தில் காணப்படும், காணாமல் போன ஆடு உவமையையுடைய ஒளிப்படம் ஓர் நல்ல உதாரனம் ஆகும். (நகலை www.max7.org இருந்து எடுத்துக்கொள்ளவும்.)

செயல்பாடு - நடித்து காட்டு ( தேவைபட்டால் 5 நிமிடம்)

நீண்ட பகுதியாக இருப்பின், கதையில் வரும் மேய்ப்பன், 99 ஆடுகள் மற்றும் காணாமல் போன ஆடு போன்று நடிக்க சொல்லி, பிள்ளைகள் சில நிமிடத்திற்குள் புரிந்து கொள்ளும் வகையில் பங்கு பெற செய்யலாம்

கலந்துரையாடல் (லூக்கா 15: 3-7) (7 நிமிடம்)

லூக்கா 15: 3-7 உள்ள வேதாகம கதையை பிள்ளைகளுடன் அமர்ந்து பின்வரும் கேள்விகளை கலந்துரையாடவும். வேதாகமத்தை திறந்து வைத்துப் பேசுவதன் மூலம் ஒளிப்பட கதை வேதத்திலிருந்து எடுக்கப்பட்டது என்பதை பிள்ளைகள் புரிந்து கொள்வார்கள். பிள்ளைகளுக்கென்று வேதாகமம் இருந்தால் அவர்களையும் திறந்து வைத்துக்கொள்ள சொல்லவும். லூக்கா 15: 3-7 சேர்ந்து வாசிக்கவும்.

- இந்த கதையில் உங்களுக்கு பிடித்தது என்ன?
- இந்த கதையில் ஆச்சரியப்பட கூடியது என்ன?
- மேய்பன் நீயாக இருந்தால் என்ன செய்திருப்பாய்?
- 99 ஆடு இருக்கிறதே என்று திருப்தி அடைந்திருப்பாயா அல்லது காணமல் போன ஒன்றை நினைத்து கவலைப்படுவாயா?

இயேசு சாதாரன மக்களுடனும் தெருவில் வாழும் மக்களிடமும் கலந்து பழகுகிறார் என்று சில மத தலைவர்கள் (பரிசேயர் மற்றும் சதுசேயர்) நினைத்ததால் இயேசு இந்த கதையை கூறினார் என்பதை புரியவையுங்கள். அவர்கள், இயேசு போன்ற ஒருவர் மதிக்கதக்கதும் முக்கிய நபர்களிடம் மாத்திரமே சேரவேண்டும் என்று நினைத்தார்கள். எலலோரிடமும், எவ்வளவு எளிமையானவர்களானாலும், முக்கியமானவர்கள் அல்லாதவர்களானாலும் அவர்களிடம் இயேசு விருப்பமுள்ளவர்ராய் இருக்கிறார் என்பதை புரிய வைக்கவே இந்த கதையை கூறினார். தேவனுக்கு யாவரும் முக்கியமானவர்களே.

- இயேசு விவரிப்பது போல மேய்பன் தேவனை போன்றவர் என்றால் நமக்கு கடவுளை பற்றி இந்த கதை கூறுவது என்ன?
- காட்டில் காணாமல் போன ஆடு போல நீ உணருகிறாயா அல்லது பத்திரமாய் உள்ள 99 ஆடுகள் போன்று உணருகிறாயா?
- காணாமல் போன எல்லா ஆடுகளையும் கண்டுப்பிடிக்க விரும்புகிறார். இந்த கதை முடிந்த சில பக்கங்களில் லூக்கா 19:10யில் "இழந்து போனதை தேடவும் இரட்சிகவும்" உலகத்திற்கு வந்தார் என்று இயேசு சொன்னார். இயேசு உன்னை நேசிக்கிறார். உன்மேல் கருசனை உள்ளவரார் இருக்கிறார்.
- மேலும் இதை குறித்து யாரிடத்திலாகிலும் பிள்ளைகள் பேச விரும்பினால் அவர்களுக்கு வாய்ப்பு கொடுங்கள்.

## ஊடகத்தை ஆராய்தல் 25 - 30 நிமடம்

செயல்பாடு: ஒன்று சேர்தல் 12 நிமிடம்

***ஒளிப்பட கதை எப்படி இனைக்கப்படுகிறகு என்ற அடிப்படையை பிள்ளைகளுக்கு கற்றுக்கொடுப்பதாக இந்த செயல்பாடு அமையும்.***

ஒளிப்படம் எப்படி இனைக்கப்படுகிறது என்பதை புரிய வைக்க இந்த ஒளிப்பட கதையை பயன்படுத்துகிறோம் என்பதை பிள்ளைகளுக்கு புரியவைக்கவும். பின் வரும் பகுதியில் பிள்ளைகள் தங்கள் சொந்த வேதாகம கதையை படமாக்க போகிறபடியால் இது முக்கியமானவை ஆகும்.

பகுதி 1 கீழ்வரும் கேள்விகளை கேளுங்கள் (இப்பகுதிக்கு குறைந்த அளவு நேரம் எடுத்துக்கொள்ளவும்)

| | |
|---|---|
| ▪ நீங்கள் உண்மையான நபர்களை கொண்டு இதே ஒளிப்பட கதையை எடுக்க வேண்டுமானால், உங்களின் தேவை என்ன? | பதில்: நடிகர்கள், ஆடு, ஒளிப்பட கருவி, ஒளிப்பட கருவி இயக்குபவர், கதை, பாறைகள், மரங்கள், இசை, மற்றும் பல. |
| ▪ இந்த கதையில் நீங்கள் ஏதேனும் நடிகராயிருந்தால், நீங்கள் எப்படி நடிப்பீர்கள் என்று காட்டுங்கள். எல்லோரும் ஒரே நேரத்தில் செய்யவும். | *அவரவரது பாகத்தை பிள்ளைகள் ஒரே நேரத்தில் நடிக்க ஆரம்பிக்க வேண்டும். - சிலர் ஆடாகவும், சிலர் மேய்ப்பர்களாகவும்.* |
| ▪ ஒளிப்பட கருவி இயக்குபவர் நீங்களாக இருந்தால், என்ன செய்வீர்கள். எல்லோரும் ஒரே நேரத்தில் செய்ய வேண்டும். | *ஒளிப்பட கருவி போன்ற உருவத்தில் பிள்ளைகள் தங்கள் விரல்களை காட்டி நடிப்பை பதிவு செய்.* |

பகுதி 2 **ஒளிப்பட கருவி இயக்குபவராவது எப்படி:**

பிள்ளைகளை நிறுத்தி, எதிருக்கு எதிர் கோட்டில் நகர்ந்து போக சொல்லவும். திரைபடத்தை உருவாக்க ஒளிப்பட கருவி இயக்குநர் செய்ய வேண்டியது என்ன என்பதை யோசனை செய்ய வேண்டும். இதை அறிந்து கொள்ள உருவரைப்படுத்தல், காட்சி எடுத்தல் மற்றும் நேரம் என்ற மூன்று வார்தைகளை புரிந்துகொள்ள வேண்டும்.

| | |
|---|---|
| மூன்று கருப்பொருளையும் புரிந்து கொள்வதற்கு கீழ்வரும் சாதாரண செய்முறைகளை செய்யவும். செயல்பாடின் ஒவ்வொரு முறையும், முதலில் ஒருவரிசையில் உள்ள பிள்ளைகள் ஒளிப்பட கருவி இயக்குநராகவும் மற்ற வரிசையில் உள்ளவர்கள் நடிகர்களாகவும் இருக்கட்டும். 30 - 40 நொடி வரை செய்தபின் மாற்றி விடவும்: | |
| 1. விளிம்பு சட்டம் (Frames) | ஒளிப்பட கருவின் விளிம்பு போன்று பிள்ளைகள் தங்கள் விரல்களை வைக்க சொல்லவும். (பாடத்தின் ஆரம்பத்தில் வரும் உருவரை சட்டம் என்ற விளையாட்டை பார்க) ஒளிப்பட கருவி இயக்குபவரை அவர் விரலினால் நடிப்பதை வேறொரு வரிசையில் நன்று பதிவு செய்ய சொல்லவும். மற்ற வரிசையில் இருப்பவரோடு மாற்றிவிட வேண்டும்.. . |
| 2. உருப்படம் (shot ) | இரண்டாவதாக, திரைப்படத்தில் காட்சி அமைப்பதை விளக்கிக்காட்ட, ஆரம்பத்தில் நாம் கற்றுக்கொண்ட வார்தைகளை பயன்படுத்தப் போகிறோம். — "நடி" மற்றும் "நிறுத்து"<br>▪ நடத்துனர் "நடி" என்று சொல்லும் போது — நடிகர்கள் நடிக்க வேண்டும் (ஆடு அல்லது மேய்பன் போன்று செய்ய வேண்டும்) நிழற்பட கருவி இயக்குபவர் நடிப்பதை பதிவு செய்ய வேண்டும்.<br>▪ நடத்துனர் "நிறுத்து" என்று சொல்லும் போது - எல்லோரும் நிறுத்திவிட வேண்டும்.<br>சிலமுறை செய்தபின் வரிசையை மாற்றிவிடவும். "நடி" மற்றும் "நிறுத்து" என்ற வாத்தையில் நடுவில் நடப்பது ஓர் உருப்படம் (shot ) ஆகும். பல உருப்படங்களை கொண்டதே திரைப்படமாகும். ஒவ்வொரு உருப்படமும் கதையில் சிறுப்பகுதியை கொண்டிருக்கும். |
| 3 நேரம் **(TIMING)** | மூன்றாவதாக, இந்த செய்முறைக்கு இருவரிசையில் உள்ள பிள்ளைகளையும் ஒளிப்பட கருவி இயக்குநர்களாக இருக்க சொல்லவும். உங்களின் கேளிக்கையான செயல்களை செய்ய தயங்காத தலைவரில் ஒருவரை நடிகராக இருக்க சொல்லுங்கள்.<br>ஒளிப்பட கருவியை இயக்குகின்றவர்களை (எல்லா பிள்ளைகளையும்) தலைவரையும் அவர் செய்கிற எல்லா செய்கைகளையும் விரலினால் ஆன விளிம்பு சட்டத்தை கொண்டு பதிவு செய்ய சொல்லுங்கள். கொடுக்கப்பட்ட நேரத்திற்குள் கீழ்வரும் மூன்று செய்முறைகளையும் செய்யுங்கள். நேரம் முக்கியமானது என்பதை நடிக்கிற தலைவர் தெரிந்திருக்க வேண்டும். "நடி" (ஆரம்பிக்க வேண்டிய நேரத்தில்) "நிறுத்து" (முடிக்க வேண்டிய நேரத்தில்) என்ற அதே வார்தைகளை பயன்படுத்தலாம்.<br>1. **நடி** - தலைவர் நடந்துகொண்டு இருக்கிறார், அப்பொழுது எதையோ கீழே தவர விடுகிறார் பின் சிறிது தூரம் சென்றயுடன் சிதாரித்து கொண்டு திரும்பி சென்று அதை எடுத்து உதருகிறார். - **நிறுத்து** (10 - 15 நொடிகள்)<br>2. **நடி** - மேலே குதித்து, சுற்றி 'ஈயா' vd;W nrhy; - **epWj;J** (3 - 4 நொடிகள்)<br>3. **நடி** -மிக ஆச்சரியமாய் பிள்ளைகளை நேராக பார்த்து சிரியுங்கள். - **epWj;J** (1 நொடி) |

ஒளிப்படத்தை மீண்டும் பாருங்கள் 10 நிமிடம்

பிள்ளைகளிடம் திருபம்ப வந்து அமர்ந்து அதே ஒளிப்படத்தை திரும்ப பார்க்க சொல்லுங்கள். இம்முறை நாம் கற்றுக் கொண்ட விளிம்பு சட்டம் (FRAME ), உருப்படம் (Shots), நேரம் (Timing) என்ற மூன்று கருப்பொருளைமனதில் வைத்து பார்க்க போகிறோம்.

**1.** உருப்படம் (Shots) - பிள்ளைகளிடம் குரும்படத்தை பார்க்க சொல்லி, இந்த கதையை உருவாக்க மொத்தம் எத்தனை உருப்படம் (Shots) எடுக்கப்பட்டுள்ளது என்று கணக்கிட சொல்லவும். படத்தை திரையிட்டு சேர்ந்து சத்தமாக எண்ணுங்கள். ஒவ்வொரு முறையும் புதிய உருப்படத்திற்கு படம் மாறும் போது அதை எண்ணுங்கள். 30 - 45 வினாடிகள் இதை செய்யுங்கள் அல்லது பிள்ளைகள் உருப்படம் என்பதை புரிந்து கொள்ளும்வரை இதை செய்து பின் நிறுத்திவிடுங்கள். *உதாரணத்திற்கு கொடுக்கப்பட்டுள்ள காணாமல் போன ஆடு படத்தின் முதல் 4 உருப்படம் ஆகும்.*






**2.** விளிம்பு சட்டம் (FRAME ) அடுத்ததாக, படத்தின் அடுத்த பகுதியை பார்ப்பதற்கு முன்பாக, விளிம்பு சட்டத்திற்குள் என்ன இருக்கிறது என்பதை கவனிக்க சொல்லவும். நிறுத்தி நிறுத்தி ஓட விட்டு என்ன பார்கிறார்கள் என்று கேளுங்கள். சில படங்கள் அதிக ஆடுகள் இருக்கிறது, சில காட்சிகள் ஒரே ஒரு ஆடுதான் உள்ளது. சில பகுதி ஒளிப்பட கருவியை நடிகர்களுக்கு மிக நெருக்கமாக வைக்கப்பட்டுள்ளது, சில காட்சிகள் ஒளிப்பட கருவியை நடிகர்களுக்கு மிக தூரமாக வைக்கப்பட்டுள்ளது. இம்முறையில் 30 வினாடிகள் படத்தை ஓட விட்டு ஒவ்வொரு காட்சியும் எவ்வாரு வித்தியாசப்படுகிறது என்று பிள்ளைகள் புரிந்து கொள்ளும்படி செய்து, பின் படத்தை நிறுத்திவிடுங்கள்

**3.** நேரம் (Timing) பிள்ளைகளை ஒரு உருப்படம் எவ்வளவு நேரம் எடுக்கிறது என்பதை கவனிக்க சொல்லவும். படத்தை திரையிட்டு சில சாட்சிகள் குறைந்த நேரம் எடுப்பதையும் சில காட்சிகள் அதிக நேரம் எடுப்பதையும் கவனிக்க சொல்லவும். *கீழ்வரும் செய்முறை விருவிருப்பான விளையாட்டுடன் இதை நன்கு விளக்கும்.*

செய்முறை : சில வினாடிகள் — 4 நிமிடம

*நேரம் என்ற கருப்பொருளை புரிந்துக் கொள்ள இந்த செய்முறை உதவும். நேரத்தை மனதில் கொண்டு ஒன்று அல்லது இரண்டு செய்முறைகளை நீங்கள் செய்யலாம்.*

5 வினாடிகளில் பிள்ளைகள் என்ன செய்ய கூடும் என்பதை கவனிக்க சொல்லுங்கள். ஒவ்வொரு செய்முறையையும் ஓர் தன்னார்வ தொண்டரை செய்ய சொல்லுங்கள்.

- எத்தனை கரங்களை நீங்கள் ஆட்ட முடியும்?
- புத்தகத்திலிருந்து எத்தனை வார்தைகளை நீங்கள் சத்தமாக படிக்க முடியும்?
- எத்தனை முறை உங்களால் குதிக்க முடியும்?

ஓர் கடிகாரத்தை பயன்படுத்தி குழுவினரை கீழ்வரும் செய்முறைகளை தலைவருடன் செய்ய சொல்லுங்கள்.

- 3 வினாடிகள் நிற்கின்ற இடத்திலேயே ஓடுங்கள்.
- 5 வினாடிகள் மேலும் கீழும் குதியுங்கள்.
- 2 வினாடிகள் மூச்சடக்கவும்.
- மூச்சு இழுத்து பின் 10 வினாடிகள் அடங்கி வைக்க சொல்லவும்.

*கதையில் உள்ள படங்கள் சில சிறிய சிறிய படங்களை கொண்டது என்று விளக்கி கூறுங்கள். சில உருப்படங்கள் 2 நொடிகள் இருக்கலாம், சில உருப்படங்கள் 3 நொடிகள் இருக்கலாம், உருப்படங்கள் 5 நொடிகள் இருக்கலாம் அல்லது அதிகமாகவும் இருக்கலாம். கண்கள் பார்ப்பது என்ன என்பதை புரிந்து கொள்ள அதிக நேரம் தேவையில்லை*

செய்முறை: அட்டையில் விளிம்பு சட்டம் உருவாக்கு (தேவைப்பட்டால்)

நேரம் இருக்குமானால் பிள்ளைகள் அட்டையை வைத்து விளிம்பு சட்டத்தை உருவாக்க வாய்ப்பளியுங்கள். சட்டத்தின் உள்பகுதி 10 செ.மீ X 6 செ.மீ இருக்க வேண்டும். விளிம்பு சட்டதை வைத்து உற்சாகமுள்ள சில படங்களை பார்க்க பிள்ளைகளுக்கு சிறிதளவு நேரம் கொடுங்கள். இந்த விளிம்பு சட்டத்தை வைத்து விளையாட எடுத்து செல்லலாம்.

## திறனை அப்பியாசப்படுத்து 10 நிமிடங்கள்

செய்முறை : கதையை எடுத்துரைப்பது. — 10 நிமிடம்

பிள்ளைகளை தங்களுக்கு ஓர் பங்காளரை தேர்ந்தெடுக்க சொல்லுங்கள். தங்களுடைய அல்லது அவர்களது பங்காளருடைய கதையை சொல்ல சொல்லுங்கள். (உதாரணத்திற்கு தங்கள் வாழ்வில் மறக்க முடியாத சம்பவம் அல்லது பள்ளிக்கு செல்லும் வழியில் நடந்த விஷயமோ அல்லது வாரமுடிவில் நடந்தவையோ) 2 நிமிடத்திற்கு பின் அவர்களுடைய பங்கை மாற்றிவிடுங்கள்.

நாம் கதை கேட்க விருப்பம் உள்ளவர்கள், நாம் கதை சொல்கிறோம், கதைகளில் இருந்து கற்றுக் கொள்கிறோம். கிட்ஸ்ஹப்ஸ் ஒளிப்பட பகுதியில் ஒளிப்படத்தில் எவ்வாறு கதை சொல்வது என்பதை கற்றுக்கொள்ள போகிறோம்.

## மறு ஆய்வு 8 நிமிடங்கள்

குழந்தைகளின் ஜெபம் — 3 நிமிடங்கள்

பிள்ளைகளை ஓர் வட்டத்திற்குள் அமர செய்யவும். முன் செய்த செய்முறைப்போல தங்கள் விரல்களினால் ஒளிப்பட சட்டம் போன்று வைத்து ஜெபிக்க சொல்லவும். அந்த விளிம்பு சட்டதின் வழியாய் பார்க்க கூடிய எல்லாவற்றிக்கும் கடவுளுக்கு நன்றி தெரிவிக்க சொல்லவும். சிறிய வரிகளினால் அவர்கள் ஜெபிக்கலாம்.

மறு ஆய்வு கேள்விகள் — 2 நிமிடங்கள்

பிள்ளைகளுக்கு அருகாமையில் அமர்ந்து இன்றைய கருப்பொருளை கலந்து பேசவும்

- விளிம்பு சட்டம் என்றால் என்ன? விளிம்பு சட்டத்திற்குள் நீங்கள் பிடிப்பது என்ன?

- உருப்படம் (Shots) - என்றால் என்ன?
- உருப்படம் எவ்வளவு நேரம் இருத்தல் வேண்டும் (நீண்ட படங்களை கொண்டது ஆனால் குறைவான நேரத்தில் எடுக்கப்பட்டது)

குழந்தைகளுக்கான சவால்கள் 2 நிமிடங்கள்

பிள்ளைகளை அவர்களை சுற்றி இருப்பதை கவணிக்க சொல்லவும். 99 ஆடுகள் பத்திரமாய் தொழுவத்தில் இருக்கையில் காணாமல் போன ஒரு ஆட்டை தேடிய மேய்பனை போன்று தேவன் ஒவ்வொருவரையும் கண்நோக்கமாய் இருக்கிறார். எல்லோரும் தேவனுடைய விளிம்பு சட்டத்திற்குள் இருக்கிறோம். அவருடைய விளிம்புச் சட்டம் இந்த உலகத்தை காட்டிலும் பெரிதானது மற்றும் ஒன்றும், ஒருவரும் கடவுளுடைய விளிம்பு சட்டத்திலிருந்து மறைக்கபட முடியாது.

இந்த வாரத்திற்கான சவால்:

- பள்ளியிலோ, தெருவிலோ, சமுதாயத்திலோ ஒருவரும் கவலைப்படாத யாரை இயேசு கவணிக்கிறார் என்று எண்ணுகிறாய்.

கலைந்து செல்லுதல் 1 நிமிடம்

இந்த செய்முறையில் கலந்து கொண்டதற்காக பிள்ளைகளுக்கு நன்றி தெரிவியுங்கள்.
நேரம் இருந்தால், மகிழ்வூட்டும் ஓர் விளையாட்டை விளையாடலாம்.

பாடம் : 2

# ஒளிப்பட கருவியை எவ்வாறு பயன்படுத்துவது

நிகழ்வு நேரம்: 90-120 நிமிடங்கள்*

*நேரம் இருந்தால், அல்லது இந்த பகுதியை 2 பகுதியாக பிரித்து நடத்த முடிந்தால், ஒளிப்பட கருவியை பிள்ளைகள் பயன்படுத்த அதிக நேரம் கிடைக்கும் அல்லது அராய்சி செய்ய அதிக நேரம் கிடைக்கும்.

**வேதாகம பகுதியும் செய்தியும்**

சங்கீதம் 8

**முக்கிய யோசனை**

- இந்த பாடத்தின் முடிவில் பிள்ளைகள் ஒளிப்பட கருவியை பயன்படுத்த முடியும்.
- ஒருப்பொருளை படம்பிடிக்கும் போது அடிப்படையாய் படம்பிடிக்க வேண்டியது என்ன என்று அறிந்துக்கொள்வார்கள்.

**முக்கிய வார்தைகள்.**

- பொருள்
- அகல படப்பிடிப்பு/நடுத்தர படப்பிடிப்பு/ தலை மற்றும் தொல்பட்டை படப்பிடிப்பு/ அருகாமை படப்பிடிப்பு.

**ஆயத்தம்**

- பிள்ளைகள் வருவதற்கு முன்பே பாடத்தில் உள்ளவற்றை நன்கு அறிந்து கொள்ளுகள்.
- "புத்தியுள்ள மற்றும் புத்தியற்ற கட்டிடகாரர்கள்" என்ற நகலை www.max7.org வின்தளத்திலிருந்து இறக்கி வைத்து கொள்ளவும் (அல்லது முதல் பாடத்தின் "காணாமல் போன ஆடு" படத்தை மீண்டும் பயன்படுத்தலாம்

**தேவையான கைவேளை பொருள்கள**

ஒளிப்பட கருவி, வரைப்படம், ஒளி எறிவுக் கருவி (Projector) அல்லது தொலைக்காட்சி பெட்டி(பட காட்சியை பார்க), கனிணி, குறிப்பேடு மற்றும் எழுதுகோல் (ஒவ்வொரு பிள்ளைகளுக்கும்) எழுதுப் பலகை (படம் வரைய) ஏற்ற ஒளிப்பட நகலை ஆயத்தம் செய்து கொள், வேதாகமம்

## பாடத்திட்டம்

### கற்பனையை செயல்படுத்து 10 நிமிடம்

**பிள்ளைகளை வரவேற்றல்** 5 நிமிடம்

பிள்ளைகளை வரவேற்க இணைப்பு பகுதியில் (இக்கையேடின் பின்புறத்தில்) உள்ள ஆயத்த செயல்பாட்டிலிருந்து ஒன்றை தெரிந்து கொள்ளுங்கள்.இது பிள்ளைகள் ஒருவருக்கொருவர் அறிந்து கொள்ள உதவிடும். மகிழ்வூட்டும் விளையாட்டை விளையாடலாம். எ.கா. மக்களுக்கு மக்கள் விளையாட்டு

**நடிப்பு வார்தைகள் "அகலம்" மற்றும் "அருகாமையில்"**

இந்த வாரத்தின் செயமுறை வார்தை "அகலம்" மற்றும் "அருகாமையில்" ("WIDE" and "CLOSE UP").

அகலம் என்று சொல்லும் போது பிள்ளைகள் வகுப்பறையின் கடைசியில் ஓடி நிற்க வேண்டும். " மற்றும் அருகாமையில் என்று சொல்லும் போது பிள்ளைகள் உங்கள் அருகே நிற்க வேண்டும். இதை சில முறை செய்யுங்கள். ஆருகாமையில் என்று சொல்லி முடியுங்கள், பிற்பாடு பிள்ளைகளை அடுத்த பகுதிக்கு அமைதியாக அமர செய்யுங்கள்.

உங்களுக்கு அருகாமையில் பிள்ளைகளை அமர செய்யுங்கள். விளிம்பு சட்டம் (Framing) மற்றும் உருப்படம் (Shots) பற்றி சென்ற பகுதியில் அவர்கள் கற்றுக்கொண்டவை என்ன என்று கேளுங்கள்.

- பாடத்தில் அவர்களுக்கு மிகவும் பிடித்தவை எது?
- பொருட்களை பார்க்கும் படி தங்களின் கைகளில் விளிம்புச் சட்டதை செய்தது யார்?
- யாரைப் பற்றியும் எதைப்பற்றியும் கவலைப்படாதவரை யாராவது கவனித்தீர்களா?
- அவர்களுக்கு உதவ உங்களால் ஏதாகிலும் செய்ய முடிந்ததா?
- துளைந்து போனவர்களுக்கு இயேசு என்ன செய்தார்?

**ஊக்கப்படுத்தும் விளையாட்டு: நடிப்பை பிடி.**

பிள்ளைகளை குதித்து பின் ஒரு வட்டமாக நிற்க சொல்லவும்.

இந்த விளையாட்டில், பிள்ளைகள் ஓர் வட்டத்தில் அமர வைத்து, செய்த செய்கையை அடுத்த நபர் செய்யும் படி பக்கத்தில் உள்ள நபரை லேசாக இடித்து செய்ய சொல்ல வேண்டும். தலைவர் கைத்தட்டி ஆரம்பத்தில் பக்கத்தில் உள்ள நபரை லேசாக இடிக்க வேண்டும். அந்த பிள்ளை கைதட்டி பின் நடுத்த நபருக்கு கொடுக்க வேண்டும். இப்படி எல்லா பிள்ளைகளும் ஒரு சுற்று முடிக்கும் வரை விளையாட வேண்டும். வேறு சில செய்கைகளை செய்து பாருங்கள். (உதாரணத்திற்கு வித்தியாசமான சத்தம், சிரிப்பு, தலையாட்டலாம்)

## ஊடகத்தை ஆராய்தல் 30 நிமடம்

### வரைப்பட செய்முறை - உருப்படம் எடுத்தல் மற்றும் பொருள்


*நாம் இன்னும் சில நேரத்தில் ஒளிப்பட கருவியை பயன்படுத்த போகிறோம், ஆனால் அதற்கு முன் நாம் கற்றுக் கொள்ள வேண்டிய இன்னும் சில விஷயங்கள் உண்டு.*

கீழ்காணும் சாதாரண படத்தை கரும்பலகையில் (அல்லது சுறுல் பலகை) வரையுங்கள். நீங்கள் வரையிம் போது பிள்ளைகளை அவர்களது கைவேலை குறப்பேடுயில் வரைய சொல்லவும். விவரித்து சொல்தும் போதே அதின் வார்தைகளையும் அதின் கருப்பொருளையும் விவரியுங்கள்.

- சுற்றுபுறத்தில் உள்ள வரம்பு தான் விளிம்பு சட்டம் என்பதை விவரி. (முன்திய பகுதியின் படித்தோம்.
- பல உருப்படங்கள் ஒன்றிணைந்ததே ஒளிப்படம் என்பதை விவரி (முன்திய பகுதியின் படித்தோம்.)
- விளிம்பு சட்டத்திற்கு கீழ் "பல உருப்படங்கள் ஒன்றிணைந்ததே ஒளிப்படம்" என்று எழுதுங்கள். ஒளிப்பட அமைப்பாளர் ஓர் புது உருப்படத்தையோ அல்லது ஓர் பொருளையோ எடுக்க ஆரம்பிக்கும் போது அது புதிய உருப்படம் என்று விவரி.

பொருள் (அல்லது கதாபாத்திரம்)

- எல்லா ஒளிப்படமுன் யாரைபற்றியோ அல்லது எதைப்பற்றியோ இருக்கும். அந்த யாரோ அல்லது ஏதோ தான் பொருள் எனப்படுவது. ஒளிப்படத்தின் முக்கிய பகுதி இதுதான் மற்றும் ஒளிப்படக் கருவி படம் பிடிப்பதும் ஆகும். பிள்ளைகள் படத்தை வரைந்தபின்பு அதை அவர்கள் இருக்கையிலே வைத்துவிட சொல்லுங்கள்.




**விளக்கி காட்டும் விளையாட்டு - ( நான்கு வித உருப்படங்ள்)**

ஒளிப்படம் எடுப்பதற்கு தேவையான நான்கு வித உருப்படங்களை கற்றுக்கொள்ள சில சாதாரண செய்கைகளை வைத்து கற்று கொடுப்பதற்காக, பிள்ளைகளை எழுந்து நின்று இந்த விளையாட்டை விளையாட சொல்லவும். அவர்கள் எளிதாக நினைவில் வைத்துக் கொள்ள இந்த நான்கு செய்கைகளையும் கற்றுக்கொடுங்கள்.

| | |
|---|---|
| **1.** அகல படப்பிடிப்பு | உள்ளங்கை முன்பாக தெரிவது போல் தங்கள் கைகளை அவர்களால் முடிந்த அளவு அகலாக காட்ட சொல்லுங்கள். |
| **2.** நடுத்தர படப்பிடிப்பு | ஒரு பெரிய பெட்டியை பிடித்திருப்பது போல கரங்களை சிறிது மடக்கி உள்ளங்கையை உள்நோக்கி வைக்க வேண்டும். |
| **3.** தலை மற்றும் தோள்பட்டை படப்பிடிப்பு | உள்ளங்கைகளை தோள்பட்டைகு சற்று வெளியில் உள்ளது போல கொண்டுவர வேண்டும். |
| **4.** நெருக்கமான படப்பிடிப்பு | உள்ளங்கைகளை முகத்தின் இரண்டு பக்கத்திற்கும் அருகில் கொண்டு வாருங்கள். |


செய்கைகளை சொல்லிக் கொடுத்தபின், அவர்கள் நினைவில் இருக்கும் படி மீண்டும் சிலமுறை செய்யுங்கள். "சைமன் சொல்கிறார்" என்ற விளையாட்டை போல இந்த செய்முறையையும் செய்யலாம். "சைமன்" சொல்கிறார் அகல படப்பிடிப்பு என்று சொல்லி அகல படப்பிடிப்புக்குறிய செய்கையை செய்யுங்கள் பின் வேறொன்றை செய்யுங்கள். இப்படி மாற்றி மாற்றி செய்யுங்கள். தவறாக செய்கை செய்கிறவர்களை அட்டத்திலிருந்து வெளியாக்கலாம். அல்லது அட்டத்திலிருந்து வெளியாக்கலாமலே தவறான செய்கையை சுட்டிக்காட்டி மகிழ்வூட்டும் விதம் செய்யலாம். நான்கு வித படப்பிடிப்பை நினைவில் வைக்கும் விதமாக இருப்பதே முக்கியம்.

**நான்கு வித உருப்படங்களை வரைக**

ஒளிப்படத்தில் இந்த உருப்படங்கள் எப்படி இருக்கும் என்பதை செய்துகாட்டவும். இதை செய்ய இந்த நான்கு உருப்படங்களளையும் கருப்பலகை அல்லது சுறும்பலகையில் வரைந்து கொள்ளவும். பின் படத்தை தரையிட்டு நான்கு வித உருப்படங்களை பிள்ளைகள் புரிந்து இருக்கிறார்களா? என்பதை சோதித்துப் பாருங்கள்.

*நான்கு உருப்படங்களளையும் கருப்பலகை அல்லது சுறும்பலகையில் வரைந்து கொள்ளவும்.*

அகல படப்பிடிப்பு நடுத்தர படப்பிடிப்பு



தலை மற்றும் தோள்பட்டை படப்பிடிப்பு நெருக்கமான படப்பிடிப்பு

நான்கு உருப்படங்களளையும் கவணியுங்கள்

பிள்ளைகளோடு இணைந்து படத்தை பார்த்து எந்த விதமான படப்பிடிப்பை பயன்படுத்தி இருக்கிறார்கள் என்பதை தேர்ந்து எடுக்க முடிகிறதா என்பதை கண்டறியுங்கள். ஒளிப்படத்தை ஆங்காங்கே நிறுத்தி அந்த படத்தில் பயன்படுத்திய எந்த வகையை தேர்ந்து எடுத்திருக்கிறார்கள் என்பதை விவரித்தால் உதவியாக இருக்கும். பிள்ளைகள் இதில் பழக்கம் ஏற்பட்டு விட்டால் நீங்கள் காட்டியவுடன் அவர்கள் படம் ஓடிக்கொண்டிருக்க சத்தம் எழுப்பி சொல்லலாம்.

**ஒளிப்படத்தை தேர்ந்து எடுங்கள்:** சென்ற பாடத்தில் பயன்படுத்திய காணாமல் போன ஆடு ஒளிப்படத்தை பயன்படுத்தலாம் அல்லது *www.max7.org*யில் இருந்து புத்தியுள்ள/ புத்தியற்ற ஒளிப்படத்தை பயன் படுத்தலாம் அல்லது இந்த நான்கை விட படம் வரக் கூடிய வேறு எதாவது படத்தை பயன்படுத்தலாம்.

புத்தியுள்ள/ புத்தியற்ற ஒளிப்படத்திலிருந்து உதாரணம்.




அகல படப்பிடிப்பு



தலை மற்றும் தோள்பட்டை படப்பிடிப்பு



நேருக்கமான படப்பிடிப்பு



நடுத்தர படப்பிடிப்பு



அகல படப்பிடிப்பு



தலை மற்றும் தோள்பட்டை படப்பிடிப்பு

ஏன் ஒளிப்பதிவாளர் வித்தியாசமான உருப்படங்களை பயன்படுத்துகிறார்கள். பிள்ளைகள் பதிலளித்தவுடன் கீழ்வரும் விளக்கத்தை கொடுக்கலாம்.

| ***படப்பிடிப்பு*** | **இதை எதற்கு பயன்படுத்தலாம்** | **கொல்கத்தா கிட்ஸ்ஹப்ஸ் இருந்து** |
|---|---|---|
| **அகல படப்பிடிப்பு** | **அகல படப்பிடிப்பு** கதை எங்கு நடகிறது என்பதை கூறும். இது தான் பொதுவாக முதல் கட்ட படப்பிடிப்பு ஆகும் ஏன்னெற்றால் பார்வையாளருக்கு இந்த கதை பட்டணத்திலா? அல்லது வீட்டிலோ அல்லது ஆப்பிரிக்கா நிலத்திலோ என்பதை தெரிவிக்கிறது. |  |
| **நடுத்தர படப்பிடிப்பு** | **நடுத்தர படப்பிடிப்பு** பொதுவாக கதாபாத்திரம் ஒர் செயலை செய்யும் போது மிக பிரயோஜனமாக இருக்கும். (நடக்கும் போது, குதிக்கும் போது, பயணிக்கும் போது) |  |
| ***தலை மற்றும் தோள்பட்டை படப்பிடிப்பு*** | ***தலை மற்றும் தோள்பட்டை படப்பிடிப்பு*** : முகத்தையும் காதாபத்திரத்தையும் காண்பிக்க இந்த படப்பிடிப்பு உதவும். இரண்டு நபர்கள் பேசும் போது அல்லது ஒருவரை ஒருவர் பார்க்கும் போது இவ்வகை படப்பிடிப்பு உதவும். |  |

| | | |
|---|---|---|
| நெருக்கமான படப்பிடிப்பு | **நேருக்கமான படப்பிடிப்பு** நீங்கள் படப்பிடிக்கும் கதாபாத்திரத்தின் அல்லது பொருளின் துள்ளியாமான அசைவுகளை படம்பிடிக்கும். நம் கண்களில் எளிதில் பட கூடிய கதாபாத்திரத்தின் உணர்வுகள் என்ன என்பதை சொல்கிறது. கதைக்கு முக்கியமான பொருளை காண்பிக்கவும் உதவும். |  |

செய்முறையை அனுபவித்தல் - நான்கு வித உருப்படங்களை கொண்ட விளையாட்டு (தேவைப்பட்டால்)

நான்கு வித உருப்படங்களையும் மறு ஆய்வு செய்ய உதவியாக இருக்கும். பிள்ளைகளுக்கு முன்பாக நில்லுங்கள். நீங்கள் தான் பொருள் என்றும் அவர்கள் ஒளிப்பட கருவி என்றும் சொல்லுங்கள்.

அகல, நடுத்தர, தலை மற்றும் தோள்பட்டை அல்லது நெருக்கமான என்ற நீங்கள் சொல்லும் போது அறையில் உள்ள சரியான இடத்திற்கு பிள்ளைகள் சென்று அவர்களது விரல்களை அதற்கு ஏற்ப வைக்க வேண்டும். உதாரணத்திற்கு அகலம் என்று நீங்கள் சொல்லும் போது முழு அறையும் தெரியும் அளவிற்கு தூரத்திற்கு செல்ல வேண்டும். நீங்கள் அருகாமை என்று சொன்னால் அவர்கள் உங்களுக்க மிக அருகாமையில் வர வேண்டும். இது நல்ல மகிழ்ச்சியாக இருக்க வேண்டுமானால், மிக வேகமாக மாற்றி மாற்றிச் சொல்ல பிள்ளைகளும் ஓர் இடத்திலிருந்து வேறொரு இடம் ஓடுவார்கள்.

கிட்ஸ்ஹப்ஸ் திட்டகுழுக்களாக பிள்ளைகளை பிரித்தெடுங்கள்.

ஒரு குழுக்கு 4 முதல் 5 பிள்ளைகள் என பிள்ளைகளை குழுக்களாக பிரித்தெடுங்கள். இவர்கள் தான் கிட்ஸ்ஹப்ஸ் திட்டக்குழு. இந்த குழுக்களில் உள்ள பிள்ளைகள் பல செய்முறைகளை சேர்ந்து செய்யக் கூடியவர்கள். ஆகையால் ஒன்றாக இனைந்து வேலை செய்யகூடிய பிள்ளைகளை வைத்து குழுக்களை அமைக்கவும்.

ஒரு குழுவிற்கு ஒரு ஒளிப்பட கருவியாவது கொடுப்பது நல்லது. உதாரணத்திற்கு 20 பிள்ளைகளுக்கு 4 அல்லது 5 கேமராக்கள் தேவை.

கிட்ஸ்ஹப்ஸ்யில் ஒளிப்பட கருவியை கையாள்வதற்கும் பயன்படுத்துவதற்கான விதிகளை, பிள்ளைகளுக்கு எடுத்துரைக்கவும்

இந்த நேரத்திலிருந்து பிள்ளைகள் ஒளிப்பட கருவியை பயன்படுத்தி படம்பிடிப்பார்கள். சற்று நேரம் எடுத்து ஒளிப்பட கருவியை பயன்படுத்துவதற்கான விதியை விளக்கவும். கிட்ஸ்ஹப்ஸ்யின் விதியாக கீழ்வருவனவற்றை உருவாக்கலாம்.

| |
|---|
| 1. ஒளிப்பட கருவியை ஒரே நேரத்தில் ஒருவர் மாத்திரம் கையாள வேண்டும். ஒளிப்பட கருவி தவறி விழுந்தால் எளிதில் உடைய கூடியதினால் ஒருவரிடமிருந்து பிடுங்க கூடாது. ஒளிப்பட கருவி வைத்திருப்பவரே ஒளிப்பட அமைப்பாளர் |
| 2. ஒளிப்பட அமைப்பாளர் ஒளிப்பட கருவியின் கயிற்றை கையை நுழைத்து கொள்வதின் மூலம் தவறி விழாமல் இருக்கும். |
| 3. கிட்ஸ்ஹப்ஸ் முடிவில் ஒளிப்பட கருவிக்கு என்ன நிகழும் என்று விவரித்து கூறுங்கள். |
| 4. ஒவ்வொரு குழுக்களுக்கும் நீங்கள் ஒரு எண் குறிப்பிட்டு ஒளிப்பட கருவிக்கும் எண் குறிட்டு அந்த எண்ணில் உள்ள குழு அதே எண்ணில் உள்ள ஒளிப்பட கருவியை ஒவ்வொரு முறையும் பயன்படுத்த அறிவுருத்தப்பட வேண்டும். |
| 5. உங்கள் குழுவிற்கு ஏற்ற வேறு ஆலோசனைகள் இருந்தால் சேர்த்து கொள்ளவும். |

ஒளிப்படக் கருவியை பயன்படுத்துவது எப்படி என்பதை விளக்குங்கள். (நேர அவகாசம் 5 -10 நிமிடம்)

இந்த நேரத்தை ஒளிப்பட கருவியை பயன்படுத்துவதை குறித்து விவரிக்கவும். ஒவ்வொரு கருவிக்கும் வித்தியாசம் இருப்பதால், விரிவான விளக்கத்தை இங்கு குறிப்பிட முடியாது. உங்கள் கருவியை பயன்படுத்துவது எப்படி என்று கற்றுக்கொண்டு அதன் பாகங்களை விளக்கி சொல்லுங்கள்.

| ஒளிப்படத்தின் முக்கிய பகுதிகள் | தெரிந்து கொள்ள வேண்டிய அம்சங்கள் |
|---|---|
| விசையாற்றல் பொத்தான் | இயக்கு அல்லது நிறுத்துவது எப்படி. |
| ஒளிப்பட கருவியின் லென்ஸ் | ஒளிபடக்கருவின் கண் போன்றது லேன்ஸ். உங்கள் விரல்களை லேன்ஸ்சை தொடாமல் இருத்தல் வேண்டும் காரணம் அது நம் ஒளிப்படத்தை கெடுத்து விடும். |
| பதிவு பொத்தான் | ஏங்கு மற்றும் எப்பொழுது நாம் படத்தை பதிவு செய்ய வேண்டும் என்பதை காட்டும். அதிகபட்ச ஒளிப்பட கருவியில் சிகப்பு நிற விளக்கு எரியும். அதை எப்படி நிறுத்துவது என்பதையும் கற்றுக்கொடுங்கள்.. |
| பின்னணி ஒளிப்படம் **Video Playback** | பதிவு செய்யப்பட்ட ஒளிப்படத்தை பார்க்கும் வசதி உங்கள் கருவியல் இருக்குமானால், அதை எப்படி பார்ப்பது என்பதை கற்றுக் கொடுங்கள். |
| அழி / delete | அழித்து விடும் பொத்தானை காட்டவும். இந்த பொத்தான் எடுத்த படத்தை அழிக்கும். நீங்கள் பயன்படுத்தாத உருப்படங்களை அழித்து விட உதவியாக இருக்கும். அழித்த படங்களை மீண்டும் எடுக்க முடியாத காரணத்தினால் உஙகளுக்கு தேவையில்லை என்பதை உறுதி செய்த பின்பே படங்களை அழிக்க வேண்டும் |
| **Battery Power** மின்கள சக்தி | மின்கள சக்தியால் தான் ஒளிபட கருவி இயங்குகிறது என்பதை விளக்கி சொல்லுங்கள். படத்தை பதிவு செய்யாத நேரத்தில் கருவியை அனைத்து வைத்தல் அவசியம், காரணம் மின்கள சக்தி துரிதமாக முடிந்து விடும். |
| **Microphone** ஒலிப்பேசி | ஒளி மற்றும் சத்ததை ஒளிப்பட கருவி பதிவு செய்வதை கூறுங்கள் |
| பிற அம்சங்கள் ***Other features*** | சில ஒளிப்பட கருவி பிற அமசங்கள் உள்ளவைகள். ஒளிப்பட கருவியை பயன்படுத்த வேண்டிய இது அவசியமாக இருந்தால் சுட்டிக்காட்டவும். |

செய்முறை: 5 நகைச்சுவை முகங்களை படம்பிடியுங்கள் (5 - 10 நமிடங்கள்)

ஒளிப்பட கருவியை பயன்படுத்த கற்றுக்கொண்ட பின், எல்லா பிள்ளைகளும் படம் பிடிக்கும் வாய்ப்பு கிடைக்கும்படியான செய்முறை ஒன்றைக் கொடுக்கவும். இந்த செய்முறைக்கான நேரம் எத்தனை பிள்ளைகள் மற்றும் ஒளிப்படக் கருவிகளின் எண்ணிக்கையை பொருத்தே கணக்கிடப்படும். குரு படப்பிடிப்பிற்கான போதுமான நேரத்தை பிள்ளைகளுக்கு தரவேண்டும்.

கீழ்வரும் சாதாரண மற்றும் மகிழ்வூட்டும் செய்முறையை செய்ய சொல்லவும்.

அவர்களுடைய கிட்ஸ்ஹப்ஸ் குழுக்களில், வெளியே போக சொல்லவும் ( அல்லது உள்ளே வேறு வழியில்லாவிட்டால். ஒவ்வொரு பிள்ளைகளும் அவர்கள் கற்றுக் கொண்ட அகலமான, நடுத்தரமான, தலை மற்றும் தோள்பட்டை மற்றும் நெருக்கமான உருப்படங்களை பயன்படுத்தி திட்டக் குழுக்களில் உள்ள மற்றவர்களை படம்பிடிக்கும் வாய்ப்பு கொடுக்கப்பட வேண்டும். குழுக்களில் உள்ள மற்றவர்களில் கேளிக்கையான முகங்களை அல்லது வித்தியாசமான உணர்வுகளை (சந்தோஷம், சோகம், ஆச்சரியம், சோர்வு, கோபம், ஆர்வம் மற்றும் பல) காட்டக் கூடிய முகங்களை படம்பிடிக்க கூறவும்.

இதை செய்வதற்கு பிள்ளைகள் ஒளிப்பட அமைப்பாளர் கதாப்பாத்திரம்/பொருளை பார்த்தபடி நிற்க வேண்டும். முதலாவதாக அகலப்படப்பிடிப்பு: பொருளினிடத்திலிருந்து தொலைவாக நிற்க வேண்டும். அவர்கள் 4 -5 வினாடிகள் படம் பதிவு செய்து பின் நிறுத்தி விட வேண்டும். (5 வரை மனதில் அமைதியான எண்ண வேண்டும்.) பிற்பாடு நடுத்தர படப்பிடிப்பை எடுக்க பொருளுக்கு அருகாமையில் செல்ல வேண்டும். மீண்டும் 5 வினாடிகள் எடுத்தப்பின் நிறுத்திவிட வேண்டும். தலை மற்றும் தோள்பட்டை படப்பிடிப்பை எடுக்க இன்னும் அருகில் சென்று 5 வினாடிகள் பதிவு செய்ய வேண்டும். இன்னும் அருகில் சென்று ஒருப்பொருளை படம்பிடித்து பின் நிறுத்திவிடுங்கள். இந்த செய்முறையை செய்ய ஒவ்வொரு குழந்தைக்கும் ஓர் வாய்ப்பு கொடுக்கப்பட வேண்டும். உங்களுக்கு நேரம் இருந்தால் அவர்களின் படப்பிடிப்பை திட்டக் குழுக்களில் படத்தை காட்டட்டும்.

ஒளிப்படத்தை மதிப்பிடுக (5 நமிடங்கள்)

உங்களால் முடிந்தால், ஒரு குழுவின் ஒளிப்படத்தை தேர்ந்தெடுத்து அதை எல்லோரும் பார்க்கும் படி, ஒளி எறிவுக் கருவி (Projector) மூலம் பெரிய திரையில் திரையிட்டு காட்டவும். படம் எப்படி உள்ளது என்ற கருத்தை கேளுங்கள். உங்களால் முடிந்தால் நல்ல உருப்படம் உருவாக்குவது என்ன என்ற சில கருத்தை சொல்லுங்கள்.

## வேதாகம கருத்துப் பரிமாற்றம். 15 நிமிடம்

**செய்முறை: (10 - 20 நிமிடங்கள்)**

பிள்ளைகளுக்கு சங்கீதம் 8 படியுங்கள்.

சங்கீதத்தை கேட்கும் போது பிள்ளைகள் அதை வரையும்படி அவர்களுக்கு ஓர் காகிதம் கொடுக்கலாம். (தேவைப்பட்டால்)

பின்ஒன்று கூடி இந்த கேள்விகளை கலந்துரையாடவும்.

- கடவுள் எதை எல்லாம் படைத்தார் என்று சங்கீதம் 8 கூறுகிறது. அதை குறிப்பு எழுதுக. (நட்சத்திரம், பறவைகள், மிருகங்கள், செடிகள், இன்னும் பல)
- உங்கள் குறிப்பில் இல்லாத வேறு எவற்றை உஙகளை சூழ்ந்து காண்கிறீர்கள்?
- கடவுளின் படைப்பில் உங்களுக்கு விருப்பமானது எது? ஏன் உங்களுக்கு அது ரொம்ப பிடிக்கும்.
- இந்த சங்கீதத்தில் கடவுளை குறித்து நீங்கள் கற்றுக் கொள்வது என்ன?

## திறனை அப்பியாசப்படுத்துவது 25 நிமிடம்

**செய்முறை: சங்கீதம் 8 ஒளிப்படமாக்குக**

குழுக்களில், சங்கீதம் 8 வரும் பல பொருட்களை படப்பிடிக்க சொல்லவும். அவர்கள் கற்றுக்கொண்ட 4 வித உருப்படங்களை பயிற்சி செய்ய இது உதவும். 4 வித படப்பிடிப்பை ஒவ்வொரு பிள்ளையும் எடுக்க வேண்டும்.

முடிந்தவரை கவணத்தை ஈர்க்கிற வகையில் ஒளிபடத்தை அமைக்க உற்சாகப்படுத்துங்கள். சும்மா நேரடியாக படம் எடுக்காதீர்கள். அவர்கள் கண், மூக்கு, காது அல்லது வாய் பகுதிகளை மிக அருகில் படம்பிடிக்க முயற்சி செய்யவும். பார்கிறவர்களின் கவனத்தை ஈர்க்கும்படி அமைக்கவும்.

**படப்பிடிப்பை மதிப்பிடுக. (எடுத்துக்கொள்ளும் நேரம் 5 - 10 நிமிடம்)**

படத்தை திரையில் பார்த்து, நல்ல படப்பிடிப்பு எப்படிபட்டது மற்றும் கெட்ட படப்பிடிப்பு எப்படிப்பட்டது என்று கலந்துறையாடல் நடத்துங்கள். மற்ற குழுக்களை மதிப்பிட முயற்சியுங்கள், அவர்களுக்கு உங்கள் அபிப்பிராயத்தை கூறி அவர்களது ஒளிப்பட அமைப்பை சீராக்க உதவிடலாம்.

ஒளிபடக் கருவி பதிவு செய்வதை நிறுத்த மறவாதீர்கள்.

ஒளிபடக் கருவின் மின்களத்தை (battery) எப்படி மின்சாரத்தை செலுத்துவது (charge) என்பதை விவரிக்கவும். மின்சாரத்தை செலுத்துவது எப்படி என்பதின் வரிசையை பாருங்கள்.

## மறு ஆய்வு 15 நிமிடம்

**உருப்படம் என்றால் என்ன? - மறு ஆய்வு**

பிள்ளைகளுக்கு மிக ஆருகில் அமர்ந்து, அவகளிடம் பல படங்களை காண்பிக்கவும். (அகலமான, நடுத்தரமான, தலை மற்றும் தோள்பட்டை மற்றும் நெருக்கமான உருப்படங்கள்) படம் எவ்வித உருப்படம் என்பதை பிள்ளைகள் சத்தமிட்டு சொல்லும் விதமான விளையாட்டை விளையாடுங்கள். அகலமான, நடுத்தரமான, தலை மற்றும் தோள்பட்டை மற்றும் நெருக்கமான உருப்படங்கள்

குழந்தைகளின் ஜெபம்

பிள்ளைகளை பெரிய வட்டத்தில் நிற்க சொல்லுங்கள். வெளிநாட்டிலும் நம் நாட்டிலும் உள்ள சம்பவங்களுக்காக ஜெபிக்க சொல்லுங்கள். பிற்பாடு சில அடி நெருக்கமாக வர சொல்லி நம் சமுதாயத்திற்கும் அதன் சம்பவங்களுக்கும் ஜெபிக்க சொல்லுங்கள். இன்னும் சில அடிகள் முன்பாக வந்து நம் தேவைகளுக்காக விண்ணப்பிக்கலாம். நம் குழுக்காவும் அதின் தேவைகளுக்காகவும் ஜெபிக்கலாம். கடைசியாக அமைதியாக அமர்ந்து தேவனோடு தனிமையாக பேசுங்கள்.

குழந்தைகளுக்கான சவால்.

வாரத்தின் நாட்களில் தூரத்தில் உள்ளவர்களுக்கும் அருக்கில் உள்ளவர்களுக்காகவும் ஜெபிக்கவும். பிறருக்காகவும் நமக்காகவும் ஜெபிக்கவும்.

**கலைந்து செல்லுதல்.**

இந்த செய்முறையில் கலந்து கொண்டதற்காக பிள்ளைகளுக்கு நன்றி தெரிவியுங்கள்.
நேரம் இருந்தால், மகிழ்வூட்டும் ஓர் விளையாட்டை விளையாடலாம்.

பாடம் : 3

## ஆக்கக் கூறுகள் - உருப்படத்தை எப்படி உருவரைச்சட்டத்தில் அமைப்பது

**நேர அளவு : 60-90 நிமிடங்கள்**

**வேதாகம பகுதியும் செய்தியும்**

யோவான் 14: 1 -7 தேவனுக்கு எல்லோரும் முக்கியமானதினால் அவரை பின்பற்றுகிற யாவருக்கும் அவருடைய பிதாவின் வீட்டில் இயேசு எல்லோருக்காகவும் ஓர் இடத்தை ஆயத்தப்படுத்துகிறார்.

முக்கிய யோசனை

- பாடத்தின் முடிவில் பிள்ளைகள் 3ஆம் விதியை குறித்து கற்றுக்கொள்வார்கள்.
- 3ஆம் விதியை பயன்படுத்தி பல உருப்படங்களை படம்பிடிக்க கூடும்.

**முக்கிய வார்த்தைகள்**

3 ஆம் விதி
ஆக்கக் கூறுகள்

- ஆயத்தம்
- பிள்ளைகள் வருவதற்கு முன்பே பாடத்தில் உள்ளவற்றை நன்கு அறிந்து கொள்ளுகள்.
- "காணாமல் போன" ஆடு என்ற நகலை www.max7.org எடுத்துக்கொள்ளவும்.

தேவையான கைவேளை பொருள்கள்

ஒளிப்பட கருவி, வரைப்படம், ஒளி எறிவுக் கருவி (Projector) அல்லது தொலைக்காட்சி பெட்டி(பட காட்சியை பார்க), கனிணி, குறிப்பேடு மற்றும் எழுதுகோல் (ஒவ்வொரு பிள்ளைகளுக்கும்) எழுதுப் பலகை (படம் வரைய) ஏற்ற ஒளிப்பட நகலை ஆயத்தம் செய்து கொள், நிறுத்தக் கடிகாரம் மற்றும் அட்டைப் பலகை (தேவைப்பட்டால்)

## பாடத்திட்டம்

கற்பனையை செய்முறைப்படுத்தல் 10 நிமிடங்கள்

பிள்ளைகளை வரவேற்றல் 5 நிமிடம்

பிள்ளைகளை வரவேற்க இணைப்பு பகுதியில் (இக்கையேடின் பின்புறத்தில்) உள்ள ஆயத்த செயல்பாட்டிலிருந்து ஒன்றை தெரிந்து கொள்ளுங்கள்.இது பிள்ளைகள் ஒருவருக்கொருவர் அறிந்து கொள்ள உதவிடும். மகிழ்வூட்டும் விளையாட்டை விளையாடலாம். எ.கா. மக்களுக்கு மக்கள் விளையாட்டு

குழந்தைகள் பேசுகிறார்கள்

உங்களுக்கு அருகாமையில் பிள்ளைகளை அமர செய்யுங்கள். முன்பகுதியிலிருந்து அவர்கள் கற்றுக்கொன்டவைகளைப் பற்றி சொல்லக் கேளுங்கள். ( பலவித உருப்படங்கள்)

பொருட்களை சரியான இடத்தில் வைக்க அவர்கள் செய்ய வேண்டியது உள்ளது. ( சமையல் அறையில் உதவுவது, வீட்டை சுத்தப்படுத்துவது)

பொளுட்களை சரியான இடத்தில் வைப்பதன் காரணங்கள் யாவை.

உடற்பயிற்சி விளையாட்டு: எது நகர்த்தப்பட்டது.

பிள்ளைகளை ஓர் வட்டத்தில் உக்கார சொல்லவும். 10 அல்லது கொஞ்சம் பொருட்களை வட்டத்திற்குள் வைக்கவும். பிள்ளைகளை அந்த பொருட்களை நன்கு கவனிக்க சொல்லவும். குறிப்பாக சம்பந்தப்பட்ட பொருட்கள் எப்படி வைக்கப்பட்டிருக்கிறது என்று பார்க்கவும். பிள்ளைகளிடம் கண்களை மூடச் சொல்லவும். அவர்கள் கண்களை மூடி இருக்க ஒரு பொருளை சற்று நகர்த்தி வையுங்கள். கண்கள் திறந்தவுடன் எந்த பொருள் அல்லது பொருட்கள்

நகர்த்தி வைக்கப்பட்டுள்ளது என்று சொல்ல வேண்டும். சரியான பதிலை சொல்பவர் அடுத்தப் பொருளை நகர்திடலாம். ஒவ்வொரு முறையும் விளையாட்டை கடினமாக்குங்கள்.

**ஊடகத்தை ஆராய்தல் 20 நிமிடங்கள்**


3ஆம் விதியை விளக்குக ( 10 -20 நிமிடங்கள்)

விளக்கம்: 3ஆம் விதிக்கு பின் உள்ள திட்டம் என்னவென்றால் ஒரு ஒளிப்படத்தையோ அல்லது நிழற்படத்தையோ மூன்றாய் பிரிப்பது (இணை நிலையான / செங்குத்தான) ஆகும். ஆக 9 பாகங்கள் உங்களுக்கு இருக்கும். நீங்கள் படப்பிடிக்கும் போது உருப்படத்தை உருச்சட்டத்திற்குள் அமைக்க உதவியாக படத்தின் குறுக்கில் காணப்படாத கோடுகள் இருக்கிறது என்று கற்பனை செய்ய வேண்டும். இந்த குறுக்குக்கோட்டு சட்டத்தை மனதில் கொண்டு "3ஆம் விதி" நாம் கவனம் செலுத்த வேண்டிய 4 முக்கிய பாகங்களை உருசட்டத்திற்குள் அடையாளம் காட்டும். குறுக்குக்கோடு சந்திக்கும் இடத்தில் நாம் கவனம் செலுத்த வேண்டும். கோடுகள் உருச்சட்டத்தில் பொருளின் நிலையை சரிச்செய்யவும் உதவும்.

காட்சி சார்ந்த கலைகள் ஆக்கக் கூறுகளை இணைத்து உருவாக்க பல ஆயிர வருடங்களாக 3ஆம் விதியை பயன்படுத்துகிறார்கள். புது ஒளிப்பட அமைபாளர்கள் தங்கள் உருப்படங்களை சீராக அமைக்கவும் இது உதவும். அனுபவம் அதிகமானதும் நீங்கள் பார்ப்போர் கவனத்தை சிதைக்கும் படியோ அல்லது சிரிக்க வைக்கவோ நீங்கள் 3 ஆம் விதியை மீறியும் எடுக்கலாம். இது பார்வையாளகளிடம் எவ்வித பாதிப்பை ஏற்படுத்த வேண்டும் என்பதை கொண்டே அமையும். புதிய ஒளி அமைப்பாளர்கள், தங்கள் உருப்படத்தை சீராக எடுக்கவும், சிறப்பாக சிந்திக்கவும் உதவி, பார்வையாளருக்கு உருப்படத்தில் என்ன நடக்கிறது என்பதை நன்கு புரிய வைக்கவும் 3ஆம் விதி உதவுகிறது.

இந்த படத்தை வரைந்து பின் குழுவிற்கு விளக்கவும்.

கவனம் ஈர்க்கும் 4 முக்கிய கூறுகள்





சில விளிம்பு சட்டம் வரையுங்கள்

மேலுள்ளது போல 3 விளிம்பு சட்டத்தை பிள்ளைகளை ஒரு காகிதத்தில் வரைய சொல்லுங்கள். ஒவ்வொரு விளிம்பு சட்டத்திலும் பிள்ளைகள் வெவ்வேறு படத்தை வரைவார்கள்.

தலை மட்டும் தோள்பட்டை படப்பிடிப்பு


விளிம்பு சட்டத்திற்குள் ஒரு முகத்தை வரையுங்கள். தலைக்கு மேல் சற்று இடம் விடுங்கள், கண்கள் முதல் கோட்டின் கீழ் இருக்க வேண்டும். தோள் பாகம் அதிகபட்சம் கீழ் 3ஆவது கோட்டின் இருக்கட்டும்.

இவ்விதமாக கண்கள் கவனத்தை ஈர்க்கும் 2 கூறுகளை எடுக்கும் மற்றும் வாய் (அசைவைப் பொறுத்து) பேசும் போது 2 கீழ் கூறுகளை. இது உங்கள் பொருளின் அசைவுக்கு தக்கதாக மாற்றத்தக்கதாக இருத்தல் அவசியம்.



நடுத்தரப் படப்பிடிப்பு


விளிம்பு சட்டத்திற்குள் கீழ்காணுவது போல் 3 நபரை வரையவும். நடுத்தரப் படப்பிடிப்புக்கு முதல் மூன்றாவது இடத்தின் கீழ் தலை இருப்பது போல் வரைய வேண்டும். தலைக்கும் விளிம்பு சட்டத்திற்கும் இடையில் உள்ள இடைவெளி விட்டு வரைய வேண்டும். கவன ஈர்ப்பு கூரில் 2 தலை இருத்தல் வேண்டும்.



நடுத்தரப் படப்பிடிப்பில், வெளியில் உள்ள 2 படமும் 4 கவன ஈர்ப்பு கூற்றில் அமைதல் வேண்டும். படப்பிடிப்பின் போது குவியமைப்பு செயலாக்கத்திற்கு ஏற்ப சாய்வளவை மாற்றி கொள்ளலாம்.

அகலப் படப்பிடிப்பு

அகலப் படப்பிடிப்பிற்கு, மிதிவண்டியில் ஒரு நபர் இருப்பது போல் வரைய வேண்டும். அந்த நபர் நகர்ந்து செல்ல வேண்டிய இடம் கொடுக்க வேண்டும். எந்த பக்கம் அவர்கள் நகர்கிறார்களோ அல்லது அவர்களுடைய கண்கள் எந்த பக்கமாக இருக்கிறதோ அந்த திசையில் இடம் கொடுக்க வேண்டும். உதாரணத்திற்கு உங்கள் பொருள் வலது பக்கமாக இருந்தால் இடதுபுறம் அவர்கள் நகர்வதற்கு இடம் கொடுக்க வேண்டும்.



இந்த அகலப்படப்பிடிப்பின் போது மிதிவண்டி ஓட்டுபவர், கவன ஈர்ப்பு குறைவான இடத்திலிருந்து அதிக கவன ஈர்ப்பு உள்ள வலது புள்ளிவரைக்கும் நகர்ந்து செல்லும் அல்லது படப்பிடிப்பின் கீழ் மூன்றாம் இடத்தில் நின்று பின் இடது கீழ் கவன ஈர்ப்பு புள்ளி வரைக்கும் பயணிக்கும்.

ஒளிப்படத்தை ஆராய்தல்

உங்கள் ஒளிப்படத்தை தேர்ந்து எடுங்கள்: காணாமல் போன ஆடு உவமை அல்லது புத்தியுள்ள அல்லது புத்தியற்ற கட்டிடகாரர்கள் போன்ற ஒளிப்படங்களை *www.max7.org* என்ற இணையத்தளத்திலிருந்து எடுக்கலாம் அல்லது ஒளிப்பட கூறுகளை விளக்கும் படக்காட்சி உள்ள வேறு ஒளிப்படத்தை காட்டலாம். 3ஆம் விதியின் அம்சங்களை மீண்டும் முக்கியத்துவபடுத்தவும்.

**திறனை அப்பியாசப்படுத்தல் 30 நிமிடங்கள்**

ஆராய்தல்: உருப்படத்தை உருவாக்குதல் (கால அவகாசம் 15 - 20 நிமிடங்கள்)

4 அல்லது 5 பிள்ளைகள் உடைய தங்கள் கிட்ஸ்ஹப்ஸ் குழுக்கலை அமைக்க சொல்லுங்கள். அவர்கள் பொருளாகவோ ஒளிப்பட அமைப்பாளராகவோ ஒவ்வொருவரும் வாய்ப்பு எடுத்து கொள்வார்கள். ஒரே பொருளை ஒவ்வொரு நபருக்கும் வாய்ப்பு எடுத்து வெவ்வேறு ஆக்ககூறுகளில் மூன்றுமுறை படம்பிடிக்க சொல்லவும். அவர்கள் அகல, நடுத்தர, தலை மற்றும் தோல்பட்டை மற்றும் நெருக்கமான படப்பிடிப்பு முறைகளிலிருந்து தேர்ந்து எடுத்துக் கொள்ளலாம். ஒவ்வொரு குழுவும் 3 வித்தியாசமான படப்பிடிப்பை 5 நொடி நேரத்தில் எடுக்க வேண்டும். 3ஆம் விதியை பயன்படுத்தி அவர்கள் எடுக்க வேண்டிய பொருளை

உருசட்டத்திற்குள் உள்ளதா என்றும் 4 கவன ஈர்ப்பு குறிகளும் சட்டத்திற்குள் உள்ளதா என்று பார்க்க வேண்டும். நல்ல உருப்படம் அல்லது நல்ல அமைப்பு கிடைக்க பயிற்சி செய்யவும்

காட்சியை மதிப்பீடு ( எடுத்துக் கொள்ளப்படும் நேரம் 15 நிமிடங்கள்)

திரையில் ஒளிப்படத்தை பார்த்து நல்ல உருப்படங்கள் அல்லது கெட்ட உருப்படங்கள் எவை என்பதை கலந்துரையாடவும். வெவ்வேரு குழுக்களை பரிசீலிப்பதன் மூலம் அவர்களில் குறைகளை கண்டறிந்து ஒளிப்பட வேலையில் முன்னேற்றம் அடைய உதவலாம்.

வேலையில் முன்னேற்றம் ஏற்பட பல வழிகள் உண்டு. நல்ல உருப்படம் அமைய ஒளிப்பட கருவியை சற்று நகர்த்த வேண்டி இருக்கலாம். சில நேரம் விளிம்பு சட்டத்தின் படப்பிடிப்பை மாற்றி அமைப்பதின் மூலமாக பார்வைக்கு பெரிய வித்தியாசம் உண்டாக்க முடியும். அவர்களது படப்பிடிப்பின் தரத்தை முன்னேற்ற வேண்டி இருக்குமானால், அல்லது புரிந்து கொள்ள கஷ்டபடுவார்களானால் 3ஆம் விதியை பிள்ளைகளுக்கு நினைவுபடுத்தலாம்.

**வேதாகம கருத்தை பரிமாற்றிக் கொள்ளுங்கள்** 10 நிமிடங்கள்.

செய்முறை - படித்து வரையுங்கள் 5 நிமிடங்கள்

பிள்ளைகளுக்கு வேதாகமம் இருக்குமாயின் அதை திறந்து வைத்துக்கொள்ள சொல்லவும். யோவான் 14:1-7 சேர்ந்து படிக்க சொல்லவும். ஒவ்வொரு பிள்ளைகளுக்கும் ஒரு காகித தாள் கொடுங்கள். 9 விளிம்பு சட்டம் உருவாகும் விதமாக 3 ஆம் விதியை போல் செங்குத்தில் மற்றும் இனைநிலையில் கோடிடு அல்லது மடிக்கவும். (முன்னுள்ள செய்முறையை பார்க்கவும்) பிள்ளைகளை 3 குழுக்கலாக பிரித்திடவும். குழு 1யில் உள்ள ஒவ்வொரு பிள்ளைகளையும் அகலப்படப்பிடிப்பு வரைய சொல்லவும்.

- பல அறைகள் உள்ள தேவனுடைய வீட்டில் அவர்களும் நண்பர்களும் இருப்பது போல்.
- மனமுடைந்த பெண். (வெறும் கையை காண்பிக்கலாம்.)

தோமா குழப்பத்தில் இயேசுவிடம் கேள்வி கேட்பது போல் குழு 2யில் உள்ள ஒவ்வொரு பிள்ளைகளையும் நடுத்தரப்படப்பிடிப்புயை வரைய சொல்லவும் .

இயேசு சிரித்துக் கொண்டு "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாய் இருக்கிறேன்" என்று கூறுவதுப்போல் குழு 3யில் உள்ள ஒவ்வொரு பிள்ளைகளையும் நெருக்கமானப்படப்பிடிப்பை வரைய சொல்லவும். அவர்கள் வரையும் போது நான்கு கவன ஈர்ப்பு குறிப்புகளையும் 3 ஆம் விதியையும் மனதில் வைத்து செய்ய வேண்டும்.

கொடுக்கப்பட்ட சிறிதளவு நேரத்தில் அவர்கள் வரையும் போதே வேதாகம பகுதியை மீண்டும் படியுங்கள். அவர்கள் குழுக்கள் ஆயத்தம் ஆனவுடன், வேதாகம பகுதியை 3ஆவது முறையாக மீண்டும் படிப்பதை கேட்கும் போது அவர்கள் வரைந்த சித்திரத்தை உயர்த்தி காண்பிக்க சொல்லுங்கள்.

கலந்துரையாடல் (யோவான் 14: 1-7) 5 நமிடங்கள்

- உங்கள் கனவு இல்லம் / இடம் எப்படி இருக்கும்.
- உங்களோடு யார் அங்கு இருப்பார்கள்?
- இயேசு சொல்லவற்றில் ஆச்சரியமானவை எது?
- இயேசு எங்கு போகிறார்? (பரலோகம் - பிதாவாகிய தேவனோடு இருக்கும் படியாக)
- வசனம் 6யில் இயேசு அவரைப்பற்றி என்ன சொல்லியிருக்கிறார். (நானே வழியும் சத்தியமுமாய் இருக்கிறேன். என்னையன்றி ஒருவரும் பிதாவினிடத்தில் சேரான்)
- அது உங்களை எப்படி உணரவைக்கிறது?

**ஆய்வு** 10 நிமிடங்கள்.

விளையாட்டு: முன்று (5 நிமிடங்கள்)

குழுவாக, மூன்று, மூன்று, மூன்று, என்று சத்தம் எழுப்புக. உள்ளங்கை ஒன்றொடு ஒன்று பார்த்தபடி கை மூட்டு மடக்கி உங்களுக்கு முன்பாக கரத்தை உயர்தவும். நீங்கள் மூன்றை படம்பிடிக்கிறீர்கள் என கற்பனை செய்துக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு முறை நீங்கள் 3 என்று சொல்லும் போது உங்கள் கரத்தை இடது பக்கத்திலிருந்து வலது புறமாக கைகளை நீட்டிக் கொள்ள வேண்டும். உங்கள் இனை நிலையான கரங்களை செங்குத்தாக உங்கள் முன் வைத்துக் கொள்ளுங்கள். 3 கற்பனை மூன்றில் உங்கள் கரங்களை மேலும் கீழுமாக அசைத்து உருசட்டத்தை மாற்றி அமைக்கவும். பலவகையில் மாற்றி செய்யுங்கள். குறைந்த சத்தத்தில், உரத்த சத்தத்தில், மெல்லிய சத்தத்தில் இன்னும் பல.

பிள்ளைகளின் ஜெபம் 5 நிமிடங்கள்

ஜெப வளை அமைக்க ஒரு தாளை 9 பகுதியாக பிரிக்க பிள்ளைகளிடம் சொல்லுங்கள். அவர்கள் ஜெபிக்க கூடிய குறிப்புகளை கட்டத்திற்குள் வரையவோ அல்லது எழுதவோ சொல்லுங்கள். குழுக்களின் மற்ற நபரின் ஜெபக் குறிப்பை கேட்கலாம். பின் அந்த குறிப்புகளுக்காக சில நிமிடங்கள் ஜெபிக்கலாம்.

குழந்தைகளுக்கான சவால். 5 நிமிடங்கள

வாரத்தின் நாட்களில் தூரத்தில் உள்ளவர்களுக்கும் அருக்கில் உள்ளவர்களுக்காகவும் ஜெபிக்கவும். பிறருக்காகவும் நமக்காகவும் ஜெபிக்கவும்.

கலைந்து செல்லுதல் 5 நிமிடங்கள்

இந்த செய்முறையில் கலந்து கொண்டதற்காக பிள்ளைகளுக்கு நன்றி தெரிவியுங்கள். நேரம் இருந்தால், மகிழ்வூட்டும் ஓர் விளையாட்டை விளையாடலாம்.

பாடம் - 4

# பொருளுக்கு எப்படி ஒளி அமைப்பது

எடுத்துக் கொள்ளப்படும் நேரம் 60 -90 நிமிடங்கள்

| வேதப்பகுதியும் செய்தியும் |
| --- |
| யோவான் : 9-1-7- இயேசுவே உலகத்தின் வெளிச்சம் |
| **முக்கிய சிந்தனை** |
| • இந்த பாடத்தின் முடிவில் பிள்ளைகள் தங்கள் பொருளுக்கு சீரான வெளிச்சம் அமைக்க கற்றுக்கொள்வார்கள்.<br>• பொருளுக்கு வெளிச்சம் அமைக்கும் போது விளக்கு எங்கு இருக்க வேண்டும் என்பதை விளக்குக. |
| **முக்கிய வார்த்தை** |
| பொருள்<br>வெளிச்சம் அமைத்தல் |
| **ஆயத்தம்** |
| பிள்ளைகள் வருவதற்கு முன்பே பாடத்தில் உள்ளவற்றை நன்கு அறிந்து கொள்ளுகள் |
| **தேவையான பொருட்கள்** |
| ஒளிப்பட கருவி, வரைப்படம், ஒளி எறிவுக் கருவி (Projector) அல்லது தொலைக்காட்சி பெட்டி(பட காட்சியை பார்க), கண் கட்ட தேவையான சாதனம், உரையிட்ட இனிப்பு அல்லது எடுத்திடும் படியான பொருட்கள், வேதாகமம் (எல்லா பிள்ளைகளுக்கும் பகிர்ந்திட போதுமானஅளவு) மெழுகுவத்தி. |

## பாடத்திட்டம்

கற்பனையை செய்முறைப்படுத்தல் 10 நிமிடங்கள்

**பிள்ளைகளை வரவேற்றல்** 5 நிமிடம்

பிள்ளைகளை வரவேற்க இணைப்பு பகுதியில் (இக்கையேடின் பின்புறத்தில்) உள்ள ஆயத்த செயல்பாட்டிலிருந்து ஒன்றை தெரிந்து கொள்ளுங்கள்.இது பிள்ளைகள் ஒருவருக்கொருவர் அறிந்து கொள்ள உதவிடும். மகிழ்வூட்டும் விளையாட்டை விளையாடலாம். எ.கா. மக்களுக்கு மக்கள் விளையாட்டு

விளையாட்டு: புதைப்பொருள் மறைத்து வை

பிள்ளைகளை ஓர் பெரிய வட்டமாக உட்கார வையுங்கள். 3 தன்னார்வ தொண்டர்களை கண்கட்ட சொல்லவும். அவர்கள் கண்கட்டிய நிலையில் இருக்கையில் உரையிலிட்ட 20 இனிப்புகளை (கீழ் இருந்து எடுப்பது போன்ற பொருட்கள்) கீழே போட்டு 3 தன்னார்வ தொண்டர்களை எடுக்க சொல்லவும். (அவர்கள் சற்று கஷ்டப்படுவார்கள்.)

மீண்டும் விளையாடுங்கள். ஆனால் இந்த முறை கண் கட்டப்பட்ட நபர்களுக்கு உதவிட உதவியாளர்கள் இருப்பார்கள்.

விளையாட்டின் முடிவில் கண் கட்டப்பட்ட பிள்ளைகளிடம் அவர்களின் உணர்வு எப்படி இருந்தது என்று கேளுங்கள். ஏன்?

குழந்தைகள் பேசுகிறார்கள்

உங்களுக்கு அருகாமையில் பிள்ளைகளை அமர செய்யுங்கள். கலந்துரையாடலை ஆரம்பிக்கும் படி பிள்ளைகளை கீழ்வரும் கேள்விகளை கேட்கலாம்.

- எவ்விதமான விளக்கு உங்களுக்கு பிடிக்கும்? (பட்டாசு, சூரியன், நிலா, மெழுகுவத்தி, மற்றவை)
- படப்பிடிப்பில் ஏன் விளக்குகள் முக்கியமானவை?
- நம் ஒளிப்படத்தில் வெளிச்சம் என்ன செய்யும். ( நிழலை தவிற்கும், நிழலை ஏற்படுத்தும். பொருட்களை பார்க்க உதவிடும்.)

## ஊடகத்தை ஆராய்தல் 10 நிமிடங்கள்

செய்முறை: என்ன செய்ய கூடாது ( 10 நிமிடங்கள்)

ஓர் பிள்ளையை விளக்கு, ஜன்னல், கைவிளக்கு போன்றவைகளை முன்பாக நிறுத்தி ஒலிப்படக் கருவியை பார்க்க சொல்லவும். ( குறிப்பு: விளக்கு பிள்ளைகளுக்கு பின்பாக இருக்க வேண்டும்) அவர்களைப்பற்றி உங்களிடம் எதாவது சொல்வதுப் போல் பதிவு செய்யுங்கள். (எ.கா. சமீப அனுபவம்). 15 நொடிக்கு பின் நிறுத்தவும். தொலைகாட்சியிலோ ஒளி எறிவுக் கருவிலோ ஒலிப்படக் கருவியை இனைத்து உங்கள் படதொகுப்பை குழுவிற்கு காட்டவும். கேள்வி எழுப்புக

- இந்த படப்பிடிப்பில் என்ன தவறு இருக்கிறது?
- ஏன் அவர்கள் முகம் இருட்டாக இருக்கிறது?
- பேசுகிறவர்களின் முகம் தெரிய வேண்டிய அவசியம் என்ன?

ஒரு நபர் ஒளிப்பட கருவியை பார்த்து பேசும் போது அவர்களுடைய நிழல் குறைந்த அளவாகவும் முகம் நன்றாக தெரிவது அவசியம் என்பதை எடுத்துரையுங்கள், சூரியன் அல்லது விளக்கு தலைக்கு பின்பாக இருக்குமானால், முகம் இருட்டாக இருக்கும். இதற்கு பின்வெளிச்சம் என்பதாகும், எதார்த்தமற்ற படத்தொகுப்பை ஏற்படுத்துவதால் கூடுமானவரை இதை தவிர்க்க வேண்டும். பின்வெளிச்சத்தை தவிர்க்க சூரியன் அல்லது விளக்கு ஒளிப்பதிவாளருக்கு பின்பாகவும் பதிவு செய்யபட வேண்டிய பொருளின் முகத்தின் மேல் வெளிச்சம் படுவது போல் இருத்தல் வேண்டும். சூரியனையோ விளக்குகளையோ நடிக்கும் நபர் நேராக பார்த்தால் கண் கூசும், தவிர்கவும்.

நீங்கள் வெளியில் இருந்தால், விளக்கு எங்கு இருக்க விரும்புகிறீர்கள்?

(பொருளுக்கு 45 கோண அலகுக் கூற்றில் சூரியன் இருப்பதை விரும்புவீர்கள். சூரியன் பொருளின் கண்களில் அடிக்காமல் முகத்தில் அதிகபட்சமாக வெளிச்சம் படும்.)

வார்த்தை ஒன்றை கற்றுக்கொள் : பொருள்

**பொருள்:** ஒரு நபர், மிருகம் அல்லது நீங்கள் படம்பிடிக்கும் பொருள். கலை விதிமுறையில் இதை பொருள் என்றழைக்கபடும்.

## வேதாகம தகவல்கள் 30 நிமிடங்கள்

**யோவான் 9: 1-7** பிள்ளளைகளுக்கு படியுங்கள். 10 நிமிடங்கள

அவர்கள் கவனித்துக் கொண்டிருக்கும் போது கண்களை மூடி கதையில் நடப்பது என்ன என்பதை கற்பனை செய்ய சொல்லவும். கதை படித்து முடித்தபின் அவரவரை மீண்டும் படிக்க சொல்லவும் பின் வேதாகமத்தை மூடி வைத்து தங்கள் பங்காளியிடம் கதையை சொல்லட்டும். விடுப்பட்ட சம்பவங்களை ஏதாகிலும் இருந்தால் பங்காளி நினைவூட்டட்டும்.

- குருடனாய் இருப்பதின் மோசமான நிலை என்ன என்று நினைக்கிறீர்கள்.
- இந்த கதையில் நீ ஆச்சரியப்படுவதாக எதை காண்கிறாய்.
- இந்த மனிதனின் பெரிய பிரச்சனை என்ன?
- இயேசு எப்படி அவரை சுகப்படுத்தினார்
- கடவுளை பற்றி இந்த கதை சொல்வது என்ன?

"நானே உலகத்தின் ஒளி" என்று இயேசு ஏன் சொன்னார்? (கடவுள் எப்படிப் பட்டவர் என்பதை இயேசு காட்டுகிறார். இருளில் உள்ள பாவம் நிறைந்த உலகத்திற்கு ஒளியாக இயேசு வந்தார். அவருடைய வழியில் எப்படி நடப்பது என்பதை காட்டவும் வழி நடத்தவும் வந்தார். இயேசு நேரடியாக நமக்குள் பார்க்க முடியும். நமது நன்மை தீமை இரண்டையும் அவர் பார்க்க முடியும். இருள் நிறைந்த இந்த உலகில் அவர் நீதியின் வெளிச்சத்தை பிரகாசிக்கிறார். அவராலே நாம் கடவுளை அறிய முடிகிறது )

நடித்து காட்டு 10 நிமிடங்கள்

4 அல்லது 5 நபர்கள் கொண்ட குழுவாக பிள்ளைகள் அமைக்க சொல்லவும். பயிற்சி செய்து குழுகளுக்கு முன்பாக நடித்து காட்ட அவர்களுக்கு 10 நமிடங்கள் எடுத்துக்கொள்ளலாம்.(யோவான் 9:1-7). ஒவ்வொரு குழுக்கும் வித்தியாசமான துணி மற்றும் நாடகத்தில் பயன்பட கூடிய பொருட்களை கொடுங்கள

வேதாகம கதை உள்ள நாடகத்தை ஒவ்வொரு குழுவும் வந்து நடித்து காட்ட வாய்பளியுங்கள்.

**திறனை அப்பியாசப்படுத்துவது 30 நிமிடம்**

விளையாட்டு: சூரியன் எங்கு இருக்க வேண்டும். (5 நிமிடங்கள்)

*படம்பிடிக்கும் போது சூரியனை நாம் நகர்த்த முடியாது ஆனால் சிறந்த ஒளிக்கிடைக்க நடிப்பவரை (பொருளை) நாம் நகர்த்த முடியும் என்று பிள்ளைகளுக்கு சொல்லவும*

அவர்கள் சூரியனாக இருக்க போகும் ஒர் விளையாட்டை விளையாட போகிறார்கள் என்று பிள்ளைகளுக்கு சொல்லவும். படம்பிடிக்க ஒர் பொருளை ஆயத்தப்படுத்தவும். நீங்கள் தான் (நடத்துபவர்/ தலைவவர்) ஒளி அமைப்பாளர். பொருளை படம்பிடிக்க ஒரு இடத்தில் நில்லுங்கள். பிள்ளைகளை உங்களுக்க சூரியன் போல் இருக்க சொல்லுங்கள். சூரியன் எங்கு இருந்தால் பொருளுக்கு ஒளி கிடைக்கும் என்று யோசனை செய்து நீங்கள் படம் பிடிக்கும் போது பிள்ளைகளை உங்களுக்கு சூரியனாக நிற்க சொல்லுங்கள்.

அறையின் பல இடங்களுக்கு நகர்ந்து பின் நிற்கவும். ( பொருளுக்கு ஒளி கிடைக்கும் சிறந்த இடத்தை பிள்ளைகள் புரிந்து கொள்ள அங்கும் இங்கும் நகர்ந்து பயிற்சி செய்து கொள்வார்கள்.)

செய்முறை: வெளிச்சத்தில் ஓர் நேர்காணலை படம்பிடிப்பு (நேரம் 15 - 20 நமிடங்கள்)

பிள்ளைகளை கிட்ஸ்ஹப்ஸ் குழுயோடு இனைய சொல்லுங்கள். அவாகளுடைய இலக்கு குழுவில் உள்ள ஒவ்வொரு பிள்ளைகளின் நேர்காணலை படம் பிடிக்க வேண்டும். ஒவ்வொரு நேர்காணலும் வெவ்வேறு இடங்களில் 30 நொடிகள் இருக்கலாம். சரியான வெளிச்சத்தில் பொருளை நிறுத்தி படம்பிடிக்க வேண்டும். சூரிய வெளிச்சம் இருக்கும் இடத்தில் நிறுத்தி படம் பிடிக்க சொல்லவும். நேர்காணல் குடும்பத்தை பற்றியோ, வீட்டைப் பற்றியோ அல்லது பள்ளியை பற்றியோ இருக்கலாம். பிள்ளைகள் நடிக்கும் சவால் எடுக்க வேண்டும் என்றால் அவர்களை இயேசு சுகமாக்கிய கண் பார்வையற்றவரை நேர்காணல் எடுக்க சொல்லுங்கள். கதாப்பாத்திரத்தை மாற்றியும் ஒளி அமைப்பையும் மாற்றி எடுக்கலாம்.

விளக்குக: சூரிய வெளிச்சம் பயன்படுத்தி பொருளுக்கு ஒளி அமைப்பது எப்படி என்று ஏற்கனவே படித்திருக்கிறீர்கள். நேர்காணலை படம்பிடிக்கும் போது, நீங்கள் பொருளை நகர்த்த வேண்டுமா அல்லது ஒளிப்பட கருவியை நகர்த்த வேண்டுமா என்று தீர்மானிக்க வேண்டும். ஒளிப்பட கருவியை ஓர் நிலையில் வைத்திருக்க வேண்டும். பேசும் போது பேசுபவரிடத்திலிருந்து 1 மீட்டர் இடைவெளி விடவும்.

*நேர்காணலைக்கு பின் பொதுமான அளவு வெளிச்சம் உள்ளதா என்று படபிடிப்பை பார்க்கவும். நன்றாக இல்லாத பட்சத்தில் குழுவை மீண்டும் படப்பிடிக்க சொல்லவும்.*

படப்பிடிப்பை மதிப்பிடுக:

ஒவ்வொரு குழுவும் தங்கள் ஒளிப்பட கருவியை மற்ற குழுவிடம் மாற்றி கொள்ளட்டும். ஒவ்வொரு குழுவும் மற்ற குழுக்களின் நேர்காணலை பார்த்து சிறந்த ஒளி அமைப்பு கொண்ட நேர்காணல் எது என்று தேர்ந்து எடுக்க வேண்டும். ஒவ்வொரு குழுவும் தேர்ந்து எடுத்த பின் எல்லோரும் பெரிய குழுவாக அமர வைத்து தேர்ந் தெடுத்த நேர்காணலை பார்கவும்

**ஆய்வு 5 நிமிடம்**

ஆய்வு:

இன்றைக்கு என்ன கற்றுக் கொண்டார்கள் என்று பிள்ளைகளிடம் கேளுங்கள். ஏன் வெளிச்சம் முக்கியம்.

குழந்தைகளின் ஜெபம்

பிள்ளைகளை ஓர் வட்டத்தில் உட்கார வைக்கவும். ஓர் மெழுகுவத்தியை கொளுத்தி நடுவில் வையுங்கள். பிள்ளைகளை கண்கள் திறந்த நிலையில் மெழுகுவத்தியை பார்த்து ஜெபிக்க சொல்லவும். இருளில் வாழும் மக்கள் வெளிச்சத்திற்கு வர பிள்ளைகளை ஜெபிக்க சொல்லவும். ஒவ்வொரு நபரின் ஜெபத்திற்கு பின் கீழ் வரும் வசனத்தை பின் மொழிய சொல்லவும். **நீங்களெல்லாரும் வெளிச்சத்தின் பிள்ளைகளும் பகலின் பிள்ளைகளுமாயிருக்கிறீர்கள். நாம் இரவுக்கும் இருளுக்கும் உள்ளானவர்களல்லவே. 1 தெச 5:5**

குழந்தைகளுக்கான சவால்.

இந்த வாரத்தில் வெளிச்சம் எப்படி நாம் பார்க்கிற பொருட்களை பாதிக்கிறது என்று கவனிக்க சொல்லவும். இயேசு ஒளியாய் இருப்பதற்காக நன்றி சொல்ல உற்சாகப்படுத்துங்கள். ஜனங்கள் இருளிலிருந்து வெளிச்சத்திற்கு அழைத்து வர ஜெபியுங்கள்.

கலைந்து செல்லுதல் 5 நிமிடங்கள்

இந்த செய்முறையில் கலந்து கொண்டதற்காக பிள்ளைகளுக்கு நன்றி தெரிவியுங்கள். நேரம் இருந்தால், மகிழ்வூட்டும் ஓர் விளையாட்டை விளையாடலாம்.

பாடம் - 5

# கதையை புரிந்துக் கொள்ளுதல்

எடுத்துக் கொள்ளப்படும் நேரம் 60 -90 நிமிடங்கள்

| வேதப்பகுதியும் செய்தியும் |
|---|
| லூக்கா 15: 8-10 - தேவனுக்கு எல்லோருமே முக்கியமானவர்கள். அவருடைய இராஜ்ஜியத்தில் எல்லோரும் வரவேண்டும் என்று விரும்புகிறார். |
| **முக்கிய சிந்தனை** |
| • இந்த பாடத்தின் முடிவில் பிள்ளைகள் கதையில் வரும் 4 ஆக்க கூறுகளை விளக்கிட முடியும்..<br>• ஒளிப்படத்தில் ஒரு கதையை விவரிக்க முடியும். |
| **முக்கிய வார்த்தை** |
| • தொகுத்தல்<br>• திரைகதை |
| **ஆயத்தம்** |
| • பிள்ளைகள் வருவதற்கு முன்பே பாடத்தில் உள்ளவற்றை நன்கு அறிந்து கொள்ளுகள்<br>• பிறப்பாடத்தில் எடுக்கப்பட்ட படக்காட்சியில் ஒன்றை எடுத்து அதை சீறமைக்க வேண்டும். இல்லாவிட்டால் காணாமல் போன ஆடு www.max7.org என்ற இனையத்தளத்திலிருந்து எடுத்து பயன்படுத்தவும் |
| **தேவையான பொருட்கள்** |
| ஒளிப்பட கருவி, வரைப்படம், ஒளி எறிவுக் கருவி (Projector) அல்லது தொலைக்காட்சி பெட்டி(பட காட்சியை பார்க), குறிப்பேடு மற்றும் எழுதுகோல் (ஒவ்வொரு பிள்ளைகளுக்கும்) எழுதுப் பலகை (படம் வரைய) வேதாகமம் |

## பாடத்திட்டம்

கற்பனையை செய்முறைப்படுத்தல் 10 நிமிடங்கள்

### பிள்ளைகளை வரவேற்றல் — 5 நிமிடம்

பிள்ளைகளை வரவேற்க இணைப்பு பகுதியில் (இக்கையேடின் பின்புறத்தில்) உள்ள ஆயத்த செயல்பாட்டிலிருந்து ஒன்றை தெரிந்து கொள்ளுங்கள்.இது பிள்ளைகள் ஒருவருக்கொருவர் அறிந்து கொள்ள உதவிடும்.

### குழந்தைகள் பேசுகிறார்கள் — 5 நிமிடம்

உங்களுக்கு அருகாமையில் பிள்ளைகளை அமர செய்யுங்கள். முன்பகுதியில் அவர்கள் கற்றுக்கொண்டது என்ன என்று கேளுங்கள். (ஒளி மற்றும் நேர்காணல்)

உங்களுக்கு மிக மதிப்புள்ள ஓர் சிறிய பொருளை காட்டவும். முக்கியமான ஓர் பொருளை காணாமல் போட்ட உண்மை சம்பவத்தை அவர்களிடம் சொல்லவும். கீழ்வரும் கேள்விகளை பிள்ளைகளிடம் கேட்கவும்.

காணாமல் போனவை மற்றவர்களுக்கு மதிப்பில்லாதவை போன்று தோன்றலாம் ஆனால் உங்களுக்கோ மதிப்புள்ளவை யாகும்?

### உடற்பயிற்சி விளையாட்டு: அனல் மற்றும் குளிர் — 7 நிமிடம்

இரண்டு பிள்ளைகளை தன்னார்வளர்களாக இருக்க சொல்லுங்கள். ஒருவர் கண்கட்டப்பட்டு தேடுபவராக இருக்க வேண்டும் மற்றவர் எங்கு செல்லவேண்டும் என்று அறிவுருத்துபவராக இருக்க வேண்டும். கண்கட்டப்பட்டவர் தவிர எல்லோரும் பார்க்க கூடிய வகையில் ஒரு பொருளை மறைத்து வைக்கவும். அவர்கள் பயன்படுத்த கூடிய ஒரே வார்த்தை அனல் அல்லது குளிர். அனல் என்றால் மறைத்து வைக்கப்பட்டுள்ள பொருளுக்கு அருகில் செல்கிறார் குளிர் என்றால் அவர்கள் தூரமாக இருக்கிறார்.

மாற்று விதிமுறை: எல்லோரும் சேர்ந்து அனல் அல்லது குளிர் என்று சத்தம் எழுப்பலாம்.

## ஊடகத்தை ஆராய்தல் 25 நிமிடங்கள்

### பல உருப்படங்களை இனைந்ததே ஓர் கதையாகும். — 15 நமிடங்கள்

பல உருப்படங்களை இனைந்து ஓர் கதை எப்படி உருவாகிறது என்று பிள்ளைகளுக்கு விவரிக்கவும். ஓர் சிறிய காட்சியை அல்லது பகுதியை காட்டவும். (உங்களால் முடிந்தால் முந்தின பாடத்தில் எடுத்த காட்சிகளை வெட்டி காட்டவும் அல்லது *www.max7.org* என்ற இனையத்தளத்திலிருந்து "காணாமல் போன மகன்" ஒளிப்படத்தை எடுத்துக்கொள்ளவும்.


குழுவை, திரைப்படத்தை கவனிக்க சொல்லி எத்தனை காட்சிகள் வருகிறது என்று எண்ண சொல்லவும் மற்றும் என்தனை உருப்படங்கள் உள்ளது என்று சோதிக்க சொல்லவும். (அதிகம் உள்ளது)

இனைப்புகளில் உள்ள வித்தியாசமான உருப்படங்களை கருப்பலகையில் வரையவும். கதை பகுதிகளுக்கு சன்று 7 படங்களை கொண்டு கதையை விவரிக்கவும்.



### தொகுப்பாக்கம் (விரைவான விளக்கம்) — 2 நிமிடங்கள்

வித்தியாசமான உருப்படங்கள் எப்படி படமாக்கப் பட்டு பின் தொகுத்து சரியான வரிசையில் அமைப்பது எப்படி என்று காட்டவும். பலவித உருப்படங்களை தேர்ந்தெடுத்து கதை உருவாகும்விதம் தேவைப்படும் நீளத்திற்கு வெட்டவும்.



மூல உருப்படம் நாம் பயன்படுத்துவதை விட நீளமானதாக இருக்க வேண்டும் என்பதை விளக்க மேலே உள்ள படத்தை பயன்படுத்தலாம் அல்லது மீண்டும் வரையலாம். குறிப்பு 1 மற்றும் 2 வெட்டப்பட்டதை காண்பிகிறது அல்லது முடிவில் தொகுப்பதற்கு தேவையான அளவிற்கு 10 நொடி உள்ள உருப்படத்தை தொகுக்கும் குறியை காட்டுகிறது.

என்ன மற்றும் எங்கு படத்தை எடுக்கிறோம் என்று சிந்தித்து தேவைக்கு சற்று அதிகமாகவே படம்பிடிப்பது பின் தொகுப்பதற்கு எளிதாக இருக்கும். தொகுக்கும் போது உருப்படத்தின் நிளத்தை குறைத்து கொள்ளலாம் ஆனால் படப்பிடிப்பு எடுத்து முடித்தப்பின் சேர்த்துக் கொள்ள முடியாது.

குழந்தைகள் பேசுகிறார்கள். 3 நிமிடங்கள்.

கீழ்வரும் கேள்விகளை பிள்ளைகளிடத்தில் ஓர் கலந்துரையாடல் ஆரம்பிக்கும் விதமாக கேட்கவும்

- உங்களுக்கு விருப்பமான கதை எது?
- உலகத்தில் ஏன் கதை இன்றும் உள்ளது? அல்லது ஏன் நாம் கதை சொல்கிறோம்?
- எவ்விதமான கதைகள் உள்ளன?(உண்மை, கற்பனை, நகைச்சுவை/ கவலைக்குறிய, அறிவியல் புனைகதை, வரலாறு, உவமைகள், நீதிக்கதைகள்)
- நீங்கள் அதை சிறிதாக வெட்ட வேண்டிய சில பகுதிகள் மெதுவாக ஓட செய்யுங்கள். எந்த பாகம் - சில உதாரணங்களை சிந்திக்கவும்.

விளக்குதல் (ஓடும் நேரம் 5 - 10 நிமிடங்கள்)

கதை என்றால் என்ன? முக்கிய கதாப்பாத்திரத்திற்கு நடக்கும் வரிசைப்படுத்தப்பட்ட நிகழ்வுகளே கதை எனப்படும். கதைகள் பொதுவாக மூன்று பாகங்களை உள்ளடங்கியது. ஆரம்பம் (நோக்குநிலை), பிரட்சனை அல்லது தடைகள் மற்றும் தீர்மானம் என்பவைகளே.

ஆரம்பம்: - நோக்குநிலை. முக்கிய நபரை சந்திக்கிறோம். அவர்கள் எங்கு வாழ்கிறார்கள், என்ன செய்கிறார்கள் என்றும் அவர்களுடைய நோக்கமும் தேவையும் பற்றி அறிந்து கொள்ளலாம்.

நடுவில் - கதாப்பாத்திரத்தின் பிரட்சனை அல்லது தடைகள். ஓர் பிரச்சனையை தீர்வுக்கு கொண்டு வர அல்லது தடைகளை மேற்கொள்ளும் விதத்தில் ஏதோ ஒன்று நடக்கிறது ஆர்வத்தை தூண்ட கூடியதாக உள்ளது. கதாபாத்திரம் தீர்வுக்கு பல முறைகளை கையாளலாம். தீர்வுக்கு சில நேரம் எடுக்கலாம்.

முடிவு- பிரச்சனை முடிவுக்கு வந்து தீர்வு காணப்படுகிறது. பார்வையாளர்கள் திருப்தியடைய கதையின் முடிவில் அதிக விஷயங்கள் ஒன்றினைக்கப் பட்டுள்ளது.

எல்லா கதைகளும் இவ்வித வழிமுறைகளையே பின்பற்றுகிறது.

## வேதாகம தகவல்கள் 30 நிமிடங்கள்

"காணாமல் போன காசு" கதையை பிள்ளைகளுக்கு படியுங்கள் லூக்கா 15: 8-9

கலந்துரையாடல் 5 நிமிடங்கள்

பிள்ளைகளுடன் அமர்ந்து கீழ்வரும் கேள்விகளை கலந்துரையாடவும்.

- இந்த கதையில் வரும் பெண்ணை குறித்து நாம் என்ன தெரிந்து கொள்கிறோம்?.
- கடவுளை குறித்து இந்த கதை என்ன சொல்கிறது?
- இயேசு ஏன் உவமையை கூறினார்?
- இந்த கதையின் 3 பகுதிகள் யாவை?

பயிற்சி: திரைகதை (நேரம் 15 - 20 நமிடஙக்ள்) 15 நிமிடங்கள்

லூக்கா 15: 8-9 மீண்டும் படித்து இந்த கதையின் திரைக்கதையை உருவாக்க போகிறோம் என்று விவரிக்கவும். பல உருப்படங்களைக் கொண்டு எப்படி நாம் கதையை படமாக்க போகிறோம் என்பதின் திட்டமே திரைக்கதை ஆகும். (பாடம் 7யில் விரிவாக எடுத்துரைக்கப் படும்)

கிட்ஸ்ஹப்ஸ் செயற்குழுக்கலாக பிள்ளைகளை பிரிந்துக் செல்ல சொல்லவும். இந்த கதைக்கு ஒவ்வொரு குழுகளும் திரைக்கதையை வரைய வேண்டும். (அதிகபட்சம் 8 உருப்படங்கள்) பிள்ளைகள் காணாமல் போன காசு கதையை 8 உருப்படங்களில் முடிக்க வேண்டும். ஒவ்வொரு குழுவும் இதைப்பற்றி பேசி தங்கள் சொந்த திரைக்கதையை வரைய வேண்டும். மிக விவரமாக சித்திரம் தீட்ட வேண்டிய அவசியம் இல்லை. குச்சி உருவ படங்கள் போதுமானது.

துவங்கிடும்விதமாக நீங்கள் செய்துக்காட்டலாம்

உருப்படம் 1 (***Shot 1):*** கதாப்பாத்திரம் எங்கு இருக்கிறார் என்பதாகும்.

உருப்படம் 2 (***Shot 2):*** 10 வெள்ளிக் காசுகள் எண்ணும் நெருக்கமான படப்பிடிப்பு.

உருப்படம் 3 (***Shot 3):*** காணாமல் போனதை கண்டுபிடிப்பதில் பெண்ணின் உணர்வுகளை வெளிப்படுத்த வேண்டும்.

உருப்படம் 4-7 ***(shot 4-7):*** வெவ்வேறு/ மாறுப்பட்ட இடங்களில் பெண் தேடுவது போல் பல உருப்படங்களை எடுக்கலாம்.

உருப்படம் 8 ***(shot 8):*** காசு கண்டுப்பிடித்து சந்தோஷப்படுகிறார்.

*முதல் 2 காட்சிகள் ஆரம்பமாகும். 3-7 காட்சிகள் பிரச்சனையை. கடைசி காட்சி தீர்வுகாணுதல் ஆகும்.

## திறனை அப்பியாசப்படுத்துவது 20 நிமிடம்

படமாக்குதல்: காணாமல் போன காசு (நேரம் 20- 30 நமிடங்கள்)

பிள்ளைகளை வெளியில் சென்று தங்கள் கிட்ஸ்ஹப்ஸ் திட்ட குழுவாக இணைந்து காணாமல் போன காசு உவமையை படமாக்க சொல்லவும். படம்பிடிக்க அவர்கள் வரைந்த திரைகதை பயன்படுத்தி திட்டமிடலாம். குழுவில் உள்ள ஒவ்வொரு நபருக்கும் ஒரு வேலையை கொடுக்கவும். இயக்குனர், ஒளிப்பதிவாளர், நாடகத்துறையினர், கதாப்பாத்திரம்(பெண்)

ஆய்வு: 10 நமிடங்கள்

பிள்ளைகளிடம் கேளுங்கள்.

- இன்றைக்கு என்ன கற்றுக் கொண்டார்கள்
- படம்பிடிப்பில் எவ்விதமாக பங்கு எளிதாக அல்லது கடினமாகவோ இருந்தது?

லூக்கா 15: 8-10 வரை மீண்டும் படியுங்கள். வசனம் 10 முக்கியத்துவப்படுத்துங்கள். பிள்ளைகளிடம் கேளுங்கள்:

- காசை இழந்த பெண்னைக்குறித்தான கதையை இயேசு ஏன் கூறினார். (வசனம் 10: கடவுளுக்கு எல்லோரும் முக்கியமானவர்களே. எல்லோரும் அவரிடத்திற்கு வந்து அவரின் இராஜ்ஜியத்தினல்/ குடும்பத்தில் பங்குள்ளவர்களாக வேண்டும். ஒருவர் மனம்திரும்பினால் பரலோகத்தில் இயேசுவில் மிகுந்த சந்தோசமடைவார்கள்.

குழந்தைகளின் ஜெபம்

பிள்ளைகளிடம் அவர்களுக்கு முக்கியம் என்று நினைக்கிறவர்களை குறித்து சிந்திக்க சொல்லவும். மற்றவருடன் இனைந்து அவர்களிடம் முக்கியமானவர்களை குறித்து சொல்லுங்கள். அந்த நபர்களுக்காக இனைந்து ஜெபிக்கவும். இயேசு அவர்களையும் கண்டுபிடிக்க ஜெபிக்கலாம். அவர்களும் பின்பற்ற வேண்டியும் ஜெபியுங்கள்.

குழந்தைகளுக்கான சவால்

சிறுக் குழுக்களாக ஒன்று சேரச் சொல்லுங்கள். ஒரே மதிப்புள்ள பணத்தை பிள்ளைகளிடம் காட்டவும். ஒன்று புதிதும் மிருதுவானதாகவும் மற்றொன்று பழையதும் கிழிந்த போனதாகவும் காட்டவும். பிள்ளைகளிடம் எந்த பணம் அதிக மதிப்புள்ளது என்று கேட்கவும்.

(இரண்டும் ஒரே மதிப்புள்ளது) நாம் எல்லோரும் தேவனுடைய பார்வையில் மிகவும் மதிக்கத்தக்கவர்கள் ஆனால் நாம் குறைந்த மதிப்புள்ளவர்களாக சிலரை நடத்துகிறோம். இந்த வாரத்தின் சவால் தேவன் மக்களை நடத்துவது போல் நாம் நடத்த வேண்டும்.

கலைந்து செல்லுதல் 5 நிமிடங்கள்

இந்த செய்முறையில் கலந்து கொண்டதற்காக பிள்ளைகளுக்கு நன்றி தெரிவியுங்கள். நேரம் இருந்தால், மகிழ்வூட்டும் ஓர் விளையாட்டை விளையாடலாம்.

பாடம் - 6

# பொருளுக்கு எப்படி ஒலி அமைப்பது

எடுத்துக் கொள்ளப்படும் நேரம் 60 -90 நிமிடங்கள்

| வேதப்பகுதியும் செய்தியும் |
| --- |
| 1 சாமுவேல் 3: 1-10 -  கடவுள் சாமுவேலை அழைத்தல் |
| **முக்கிய சிந்தனை** |
| • இந்த பாடத்தின் முடிவில், பிள்ளைகள் ஒளிப்படக் கருவியில் பேசும் போது தெளிவான உரத்த சத்தம் எழுப்ப வேண்டும் என்று அறிந்துக் கொள்வார்கள்<br>• பின்னனி ஒலி எப்படி படக்காட்சியை பாதிக்கிறது என்றும் படப்பிடிப்பின் போது ஏன் அமைதிக்காக்க வேண்டும் என்றும் அறிந்துக் கொள்வார்கள். |
| **முக்கிய வார்த்தை** |
| • ஒலிப்பெருக்கி<br>• பின்னனி ஒலி |
| **ஆயத்தம்** |
| • பிள்ளைகள் வருவதற்கு முன்பே பாடத்தில் உள்ளவற்றை நன்கு அறிந்து கொள்ளுகள் பயன்படுத்தவும் |
| **தேவையான பொருட்கள்** |
| ஒளிப்பட கருவி,  ஒளி எறிவுக் கருவி (Projector) அல்லது தொலைக்காட்சி பெட்டி(பட காட்சியை பார்க), குறிப்பேடு மற்றும் எழுதுகோல் (ஒவ்வொரு பிள்ளைகளுக்கும்) எழுதுப் பலகை (படம் வரைய)  வேதாகம் |

## பாடத்திட்டம்

**கற்பனையை செய்முறைப்படுத்தல் 15 நிமிடங்கள்**

### பிள்ளைகளை வரவேற்றல் — 3 நிமிடம்

பிள்ளைகளை வரவேற்க இணைப்பு பகுதியில் (இக்கையேடின் பின்புறத்தில்) உள்ள ஆயத்த செயல்பாட்டிலிருந்து ஒன்றை தெரிந்து கொள்ளுங்கள்.இது பிள்ளைகள் ஒருவருக்கொருவர் அறிந்து கொள்ள உதவிடும். உதாரணம்: மக்களுக்கு மக்கள் விளையாட்டு.

### செய்முறை: எதிரொலி

தங்கள் உடலிருந்து என்னவிதமான ஒலி எழுப்ப முடியும் என்று கேளுங்கள். ஒவ்வொருவராக வந்து குழுவிற்கு முன் செய்து அதை குழுவின் மற்ற நபர்கள் அதையே பின் தொடர்ந்து செய்ய வேண்டும்.

பிள்ளைகள் பார்த்து அதை அவர்கள் செய்து காட்டும் விதத்தில் கைகள் தட்டி அல்லது கால் தட்டி தாளம் உருவாக்குங்கள்.

### நீங்கள் கேட்பது என்ன? — 3 நிமிடங்கள்

அமைதியாய் இருந்து அவர்களை சுற்றி எழும்பும் சிலவகை ஒலி கவனிக்கவும். என்ன என்ன சத்தம் அவர்களுக்கு கேட்கிறது? ஒரு நமிடம் செலவிட்டு, என்ன என்ன சத்தம் கேட்கிறது என்பதை தங்கள் கைவேளை கையேட்டில் அல்லது ஒரு தாளில் எழுதவும். உடன் குழுவினர் எழுதியவற்றோடு நீங்கள் எழுதியவற்றை ஒப்பிட்டு பார்க்கவும்.

- மொத்தம் எத்தனை விதமான சத்தம் கேட்கிறது?
- உங்கள் பங்காளருடன் ஒப்பிட்டால் நீங்கள் கவனிக்காத சத்தம் என்ன?
- மவுனமான சத்தம் உங்களுக்கு கேட்கிறதா?

### கவனிப்பதில் ஆராய்ச்சி — 2 நிமிடம்

கேட்பதற்கு எளிதாக இருக்க கூடிய சூழல் எது என்பதை கவன ஆராய்ச்சி செய்ய போகிறோம் என்று குழுவினருடன் சொல்லுங்கள். ஜோடி ஜோடியாக செயல்பட சொல்லுங்கள். பல சூழ்நிலைகளில்15 நொடிகள் தங்கள் ஜோடியுடன் உறையாடல் வைத்துக் கொள்ளப் போகிறீர்கள் என்று சொல்லுங்கள். ஒருவர் கேள்வி எழுப்ப மற்றவர் பதில் சொல்லலாம்.

சூழுல்கள்:

- ஒருவருக்கொருவர் பின்புறம்பாக அமர்ந்து
- ஒருவர் நின்ற நிலையிலும் மற்றொருவர் அமர்ந்த நிலையிலும்.
- ஒரு மீட்டர் இடைவெளியில் நின்றபடி ஒருவருக்கொருவர் பார்த்தபடி.
- 10 மீட்டர் இடைவெளியில் ஒரு அறையை தாண்டி உள்ள நிலையில்

### குழந்தைகள் பேசுகிறார்கள். — 5 நிமிடங்கள்

உங்களுக்கு அருகாமையில் பிள்ளைகளை அமர செய்யுங்கள். கலந்துரையாடலை ஆரம்பிக்கும் படி பிள்ளைகளை கீழ்வரும் கேள்விகளை கேட்கலாம். (முக்கியமான வழிமுறைகளை பின்பற்றாமல் போன உங்கள் தனிப்பட்ட அனுபவத்தை கூறுங்கள்.)

- நீங்கள் கேட்பதற்கு கடினமாக இருந்த சூழல் எது? ஏன்?
- நீங்கள் கேட்பதற்கு எளிதாக இருந்த சூழல் எது?
- முக்கியமான ஏதாவது நீங்கள் கவனிக்க கூடாதபடி கடினமான சூழல் இருந்ததா? என்ன நடந்தது?
- யாராவது நீங்கள் சொல்வதை கேட்கிறார்கள் என்று உங்களுக்கு எப்படி தெரியும்.

## ஊடகத்தை ஆராய்தல் 25 நிமிடங்கள்

### விளக்கம் — 1 நமிடம்

ஒலிவாங்கி என்றால் என்ன? ஒளிப்பட கருவி ஒலியை பதிவு செய்யும் இடம் இதுவே. பேசுகிற நபருக்கு சத்தம் தெளிவாக பதிவு செய்ய அந்நபருக்கு அருகாமையில் இருப்பது அவசியம்.

*ஒளிப்பட கருவியில் ஒலிவாங்கி இருக்கும் இடத்தை காட்டவும். பிள்ளைகள் ஒலிவாங்கி மேல் தங்கள் விரல்களை வைத்துவிடாமல் இருத்தல் அவசியம் காரணம் ஒலி தெளிவில்லாமல் செய்துவிடும்.*

### ஒலிப்பட கருவியுடன் பேசுதல் — 4 நமிடம்

கலந்துரையாடல் ஆரம்பிக்கும் வகையில் கீழ்வரும் கேள்விகளை கேளுங்கள்.

- நீங்கள் மெல்லிய குரலில் ஒளிப்படத்தில் பேசினால் மக்களுக்கு கேட்குமா? ஏன் கேட்காது.
- நீங்கள் கூச்சலிட்டால், அவர்கள் புரிந்துக் கொள்ள முடியுமா? ஏன்?
- ஒளிப்படத்தில் தெளிவாக உங்கள் குரல் கேட்க வேண்டும் என்றால் எப்படி பேச வேண்டும்.? (உ.தா. தெளிவாக சத்தமாக)
  (தேவைப்பட்டால்:- யூ டியும் ஒளிப்படத்திலிருந்த தெளிவற்ற மற்றும் தெளிவான/ சிறப்பான ஒலியுடன் பேசிய ஒளிப்படங்களை எடுத்துக் காட்டவும். உ. தா. செய்தி கொடுப்பவர்.

### செய்முறை - ஒளிப்பட கருவிக்கு எவ்வளவு நெருக்கமாக இருந்தால் நல்லது? — 10 நமிடம்

பங்காளர்களுடன் வேலை செய்ய சொல்லுங்கள். மற்ற குழுவினர்களுக்கு எளிதாக கேட்காதபடி தள்ளி நில்லுங்கள்( பெரிதளவு அறை இல்லாத பட்சத்தில் 2 தன்னார்வளரை மற்ற குழுவினருக்கு முன் செய்ய சொல்லுங்கள்.)

அவர்களுடைய குழலை பதிவு செய்ய ஒளிப்பட கருவியிலிருந்து எவ்வளவு தூரம் அவர்களால் நிற்க முடியும் என்று கேளுங்கள். ஒருவர் பேச்சாளர் மற்றவர் ஒளிபட பதிவாளர். பேச்சாளர் "என்னுடைய வாழ்வின்ஒரு நாள்" அல்லது "சாமுவேலின் வாழ்வில் ஒரு நாள்" எங்கு செல்கிறார்கள்? என்ன சாப்பிடுகிறார்கள்? என்ன பார்கிறார்கள்? என்ற தலைப்பில் ஒளிப்பட கருவியை பார்த்து பேசுவார்கள்?

பேசுபவர் வாய் மாத்திரம் உருச்சட்டத்தில் தெரிவது போல நெருக்கமான படப்பிடிப்பிலிருந்து ஆரம்பிக்கவும். 10 நொடிகளுக்கு பதிவு செய்யவும். பின் வேறு 2 இடங்களுக்கு சென்று பதிவு செய்யவும். தூரமாக நின்று பேசும் நபரின் முழு உருவம் தெரியும் அளவுக்கு பின்பாக நகர்ந்து 10 நொடி பதிவு செய்யவும். ஒளிப்பட கருவியை பார்த்து பேசும் நபர் எல்லா நேரமும் ஒரே ஒலி அளவில் பேச வேண்டும்.

மதிப்பிடுதல் 10 நமிடங்கள்

பிள்ளைகளை ஒன்று சேர்த்து, தொலைகாட்சியிலோ ஒளி எறிவுக் கருவியிலோ பார்க்க சில உதாரணங்களை தேர்ந்து எடுத்துக் கொள்ளுங்கள். நீங்கள் பார்த்த உதாரணத்தில் எந்த அளவு துரத்திலிருந்து ஒளிப்படம் பிடிப்பது சிறந்தது என்றும் அதன் பாதிப்புகளைப் பற்றியும் மதிப்பிடுங்கள்.

## திறனை அப்பியாசப்படுத்துவது 20 நிமிடம்

செய்முறை : சத்தம் நிறைந்த சூழுல்: 10 நமிடம்

கிட்ஸ்ஹப்ஸ் திட்ட குழுக்கலாக பிள்ளைகளை பிரித்திடுங்கள். ஒவ்வொரு குழுக்களும் அவர்களுடைய உருப்பினர்களை வெவ்வேறு பொறுப்பு கொடுத்து பிரிக்க வேண்டும். ஒருவர் ஒளிப்பட அமைப்பாளராகவும் மற்றொருவர் பேச்சாளராகவும் இருக்கலாம். மற்றவர்கள் சத்தம் எழுப்பிக் கொண்டு இருக்கலாம். ஒவ்வொரு குழுவிலும் ஒருவர் பேசிக்கொண்டிருப்பதை பதிவு செய்யும் போது மற்றவர்கள் பதிவு செய்துக் கொண்டு இருக்கிற இடத்தில் இருந்தபடி ஏதாகிலும் சத்தம் எழுப்பிக் கொண்டு இருக்கலாம். பின்னனி சத்தம் அதிக அளவில் இருக்கும் படி, குழுவில் எல்லோரும் ஒரே அறையில் சிதரியபடி நிற்கவும்.

ஒளிப்படத்தின் முன் பேசுபவர் "என் வாழ்வில் ஒரு நாள்" அல்லது "தேவாலயத்தில் இருந்த சாமுவேலின் வாழ்கையின் ஒரு நாள்" என்பதைப் பற்றி மீண்டும் பேசலாம். ஒவ்வொறு நாளும் அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதை விவரிக்கலாம். உதாரணத்திற்கு: வீட்டில் செய்கிற வேலை, அல்லது பள்ளியில் அவர்கள் செய்வதைப்பற்றி, என்ன விளையாட்டு விளையாடுவார்கள், எப்போழுது, அவர்கள் நண்பர்கள் யார் இன்னும் பல.

விளக்கம். 3 நிமிடங்கள்

உங்கள் ஒளிப்படத்திற்கு பின்னனியில் உள்ள ஒலி கவன சிதறல் உண்டாக்கும். படம்பிடிக்கும் நேரத்தில் அமைதலான சூழலில் படம்பிடிக்க முயற்சிக்கவும். அமைதலாக இடம் கண்டுப்பிடிக்க முடியாவிட்டால் பரவாயில்லை, சில நேரங்களில் அது சாத்தியமாவதில்லை. நீங்கள் படம்பிடிப்பது எது என்பதை வைத்து, பின்னனி ஒலி உதவியாக இருக்க கூடும். நீங்கள் விரு விருப்பான, நடைமுறையில் உள்ளபடியான, அமைதலில்லாத சூழலை படம்பிடிக்கும் போது பின்னனி ஒலி மிகவும் உதவியாக இருக்கும். பின்னனி ஒலியைவிட பேசும் நபர்/நபர்களோ அதிக சத்தம் எழுப்பி பேச வேண்டும் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளவும். பேசும் நபரின் சத்தம் தெளிவாக கேட்கவோ அல்லது புரியும்படி இருக்க வேண்டும் என்றால் அமைதலான இடத்தை தேர்வு செய்து கொள்ளவும்.

முறையான படபிடிப்பின் போது, இயக்குநர் அல்லது உதவி இயக்குநர் "காட்சி அமைப்பில் அமைதிகாக்கவும்" என்று படம்பிடிக்கும் முன் சத்தமிட்டு சொல்வார். அப்பொழுது அமைப்பில் உள்ள எல்லோரும் அமைதியாக இருப்பார்கள்.

குழுவாக கலந்துரையாடல் 7 நமிடங்கள்

சிறுக்குழுக்கலாக தங்கள் பங்காளிகளை நேர்காணல் செய்யும் போது நீண்ட தூர படம்பதிவு செய்யும் போது இருந்த கஷ்டங்களை குறித்து கலந்துரையாடவும்.

- பங்காளரின் குரலை கேட்க முடிந்ததா?
- மற்ற நேர்காணலை கேட்க முடிந்ததா?
- உங்கள் பங்காளருடன் நேர்காணல் செய்ய சிறந்த இடம் எது என்று நினைக்கிறீர்கள்? ஏன்?

## வேதாகம தகவல்கள் 10 நிமிடங்கள்

வேதாகம பகுதி 3 நமிடங்கள்

பிள்ளைகளுக்கு, சிறுவன் சாமுவேலின் அழைப்பை குறித்தான வேதாகம கதையை படியுங்கள் 1 சாமுவேல் 3:1-10 பிள்ளைகளை ஒரு வட்டத்தில் நெருக்கமாக உட்கார சொல்லவும். ஒவ்வொரு நபரும் தங்கள் இடது கரத்தில் உள்ளங்கை மேலே தெரிவது போல் தொடையில் வைக்க வேண்டும். தங்கள் வலது பக்கத்தில் உள்ளவரின் தலைமேல் அவர்களின் வலது கையின் ஆள்காட்டி விரலை வைக்க வேண்டும். கதையை மீண்டும் படிக்க போகிறோம் என்று

சொல்லுங்கள். ஆனால் இந்த முறை சாமுவேல் என்ற பெயர் வரும்போது எல்லாம் உங்களுக்கு அடுத்து உள்ளவரின் கையை பிடித்துவிட வேண்டும்.

கலந்துரையாடல் 7 நமிடங்கள்

பிள்ளைகளுடன் உட்கார்ந்து இந்த கேள்விகளை கலந்துரையாடல் செய்யவும்.

- இந்த கதையில் உற்சாகமான பகுதி எது?
- கடவுளை குறித்து இந்த கதையில் என்ன கற்றுக்கொள்கிறோம்
- கடவுளின் சத்தத்தை கேட்க எது சரியான நேரம். (எல்லா நேரமும், நாம் எங்கிருந்தாலும்)
- ஏன் நாம் அமைதியான இடத்தை தேர்வு செய்ய வேண்டும். கடவுளின் சத்தத்தை கேட்க முடியும். உங்களுக்கு அமைதியான இடம் எது?

## ஆய்வு 15 நிமிடங்கள்

பிள்ளைகளின் ஜெபம்

கடவுள் எல்லோருக்கும் கவனம் செலுத்துகிறார் என்று பிள்ளைகளுக்கு நினைவுப்படுத்தவும். பல் வேறு இடத்தில் உள்ள, வித்தியாசமான வயது, வித்தியாசமான மொழி மக்களுக்கு ஒரே நேரத்தில் செவிக் கொடுக்கிறார். "இந்த நேரத்தில் தானே எத்தனை மக்கள் ஜெபித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று ஆச்சரியப்படுகிறேன்"

பிள்ளைகளை ஓர் அறையில் தனியாக உட்கார சொல்லி தாங்களாகவே கடவுளிடம் பேச/ஜெபிக்க சொல்லவும்.

மறுஆய்வு கேள்விகள்

பிள்ளைகளுக்கு அருகில் அமர்ந்து இன்றைய தின கருத்திலிருந்து கலந்துறையாடவும்.

- ஒலி ஏன் மிக முக்கியம்.
- படம்பிடிக்கும் போது இடத்தை தேர்ந்து எடுக்கும் நிலையில்  சிந்திக்க வேண்டியது என்ன? (எவ்வளவு சத்தம் இருக்கிறது, அமைதியான இடத்தை கண்டுபிடிக்க இயலுமா?)
- ஒளிப்பட கருவிக்கும் படம்பிடிக்கப்படும் நபருக்கும் இடையில் உள்ள எவ்விதமான இடைவெளி தெளிவான ஒலியை பதிவு செய்யப்படுகிறது.

பிளளைகளுக்கான சவால்

பிள்ளைகளை சுற்றி கேட்கப்படும் வித்தியாசமான ஒலியை கவனிக்க சொல்லவும். (அவர்களிடம் பேசும் நபர் அல்லது தொலைக்காட்சி, கனிணி, வானொலிப் பெட்டி மற்றும் பலவகை ஒலியை கவனிக்க சொல்லவும்) அதிக அளவு சத்தம் கேட்க அவர்கள் என்ன செய்ய வேண்டும்.குறைந்த அளவு சத்தம் கேட்க அவர்கள் என்ன செய்ய வேண்டும்.?

கலைந்து செல்லுதல்

இந்த செய்முறையில் கலந்து கொண்டதற்காக பிள்ளைகளுக்கு நன்றி தெரிவியுங்கள்.
நேரம் இருந்தால், மகிழ்வூட்டும் ஓர் விளையாட்டை விளையாடலாம்.

பாடம்-7

# திரைப்பலகை

எடுத்துக் கொள்ளப்படும் நேரம் 60 -90 நிமிடங்கள்

### வேதப்பகுதியும் செய்தியும்

1 கொரிந்தியர் 12:12-20 நாம் எல்லோரும் தேவ குடும்பத்தினர். இயேசு கிறிஸ்துவின் சரீரத்தின் ஒரு பகுதியினர். செயல்படும்படி நமக்கு ஓர் பங்கு அதில் உண்டு

### முக்கிய சிந்தனை

- இந்த பாடத்தின் முடிவில், பிள்ளைகள் ஓர் கதையை திரைகதையாக மாற்ற முடியும்
- இந்த பாடத்தின் முடிவில் பிள்ளைகள் வேதாகமத்திலிருந்து ஒரு கதையை தேர்ந்து எடுத்து கிட்ஸ்ஹப்ஸ் குழுவாக படம்பிடிப்பார்கள்..

### முக்கிய வார்த்தை

- படகுழு

### ஆயத்தம்

- பிள்ளைகள் வருவதற்கு முன்பே பாடத்தில் உள்ளவற்றை நன்கு அறிந்து கொள்ளுகள் பயன்படுத்தவும்

### தேவையான பொருட்கள்

ஒளிப்பட கருவி,  ஒளி எறிவுக் கருவி (Projector) அல்லது தொலைக்காட்சி பெட்டி(பட காட்சியை பார்க), தேவையான அளவு கயிறு அல்லது பொருள் (குழு விளையாட்டுக்கு தேவைபடும்) குறிப்பேடு மற்றும் எழுதுகோல் (ஒவ்வொரு பிள்ளைகளுக்கும்) எழுதுப் பலகை (படம் வரைய)  வேதாகமம் (கிட்ஸ்  ஹப்ஸ் குழு எல்லோருக்கும்)

## பாடத்திட்டம்

**கற்பனையை செய்முறைப்படுத்தல் 15 நிமிடங்கள்**

**பிள்ளைகளை வரவேற்றல்** — 3 நிமிடம்

பிள்ளைகளை வரவேற்க இணைப்பு பகுதியில் (இக்கையேடின் பின்புறத்தில்) உள்ள ஆயத்த செயல்பாட்டிலிருந்து ஒன்றை தெரிந்து கொள்ளுங்கள்

**உடற்பயிற்சி விளையாட்டு : குழு** — 7 நிமிடம

இந்த செய்முறை படப்பிடிப்பில் எல்லோரும் முக்கியம் என்று புரிந்துக் கொள்ள உதவும்.

6 -8 நபர் கொண்ட குழுவாக பிள்ளைகளை பிரிந்துக் கொள்ள சொல்லுங்கள். ஒவ்வொரு குழுவும் வரியை நின்று ஒவ்வொருவரும் முன்னுள்ள நபரின் தோள்பட்டையை பிடித்துக்கொள்ள வேண்டும். பின்பாக உள்ளவர் அல்லது கடைசியில் உள்ளவரிடம் ஒரு "வால்" (துண்டு கயிறு அல்லது ஒரு துணி) கொடுக்கப்படம். அதை அவர்கள் பெல்ட்யில் சொருகி கொண்டால் வால் போன்று தெரியும். "போ" என்று சொல்லும் போது குழு சுற்றி வர வேண்டும். முன் வருசையில் உள்ள நபர் மற்ற குழுவின் வாலை பிடிக்க முயற்சி செய்ய வேண்டும். ஒவ்வொரு குழுவும் ஒன்றாக இனைந்தபடி இருந்து அவர்கள் வாலை காப்பாற்ற வேண்டும். அவர்கள் வாலை இழுந்தாலோ இணைப்பு துண்டிக்கப்பட்டாலோ விளையாட்டில் தோற்றுவிடுவார்கள்.

இறுதிவரை வாலுடன் இருக்கும் குழுவே வெற்றிப் பெறுவார்கள். 2 அல்லது 3 முறை இந்த விளையாட்டை விளையாடவும். சிறிது நேரம் விளையாடிய பின் பிள்ளைகளை ஒன்று கூடி வர சொல்லுங்கள். விளையாட்டை குறித்து சில கேள்விகளை கேட்கலாம்.

- யாருக்கெல்லாம் விளையாட்டு மகிழ்ச்சியாக இருந்தது.?

குழுவில் முக்கியமான நபர் யார்? (முன்பாக உள்ளவரா, பின்புறம் உள்ளவரா, நடுவில் உள்ளவரா) அதிகபட்சமாக எல்லோரும் குழுவில் எல்லோரும் முக்கியம் என்று உணர்ந்து கொள்வார்கள். ஒருவர் மாத்திரம் அல்ல

ஒரு வார்த்தையை கற்றுக்கொள்வோம் : குழு

குழுவாக இருக்கும் போதே செயற்குழு என்றால் என்ன என்பதை பிள்ளைகளுக்கு விவரிக்கவும்.

செயற்குழு: படப்பிடிப்பின் போது அல்லது ஒளிப்படத்தின் போது ஒன்றாக இனைந்து வேளை செய்யும் குழு. ஒரு செயற்குழு என்பது பல்வேறு வேலை செய்யும் மக்களை கொண்டது. (உதாரணத்திற்கு இயக்குனர், ஒளிப்பட பதிவாளர், ஒளி அமைப்பாளர், ஒலி அமைப்பாளர், தேவையான பொருட்களை ஒருங்கிணைப்பவர், அலங்கிரிப்பவர். மற்றும் பல)

குழந்தைகள் பேசுகிறார்கள். 5 நிமிடங்கள்

கலந்துரையாடலை ஆரம்பிக்கும் படி பிள்ளைகளை கீழ்வரும் கேள்விகளை கேட்கலாம். நீங்கள் குழுவில் வேலை செய்த ஒர் சூழ்நிலையை விளக்கவும்.

- குழுவாக செயல்படுவதில் ஏற்படும் நன்மைகள் யாவை?
- படம் ஆக்குவதில் என்ன என்ன வித்தியாசமான பங்குகள் உள்ளன?

## வேதாகம தகவல்கள் 10 நிமிடங்கள்

வேதாகம பகுதி 3 நமிடங்கள்

1 கொரிந்தியர் 12 : 12-20 : பிள்ளைகளுக்கு, வேதாகமத்தைப் படித்து அவர்களுடன் கலந்துரையாடவும். இதை பல்வேறு வழிகளில் செய்யலாம்.

- வேதாகமத்தை ஒரு வட்டத்தில் கொடுத்து ஒவ்வொரு பிள்ளைகளும் ஒவ்வொரு வசனத்தை வாசிக்க சொல்லலாம். 1 கொரிந்தியர் 12 : 12-20 முடியும் வரை படியுங்கள். ஒருவர் ஒரே நேரத்தில் ஒரு வசனத்தை தெளிவாக மெதுவாக வாசியுங்கள்.
- அல்லது பிள்ளைகளை 3 குழுக்கலாக பிரிக்கவும். ஒவ்வொரு குழுவும் சரீரத்தின் ஒரு பகுதியை பிரதிலிக்க வேண்டும். "பாதம்" (வசனம் 15) காது (வசனம் 16, 17) மற்றும் கண் (வசனம் 17) பிள்ளைகளை நெருக்கமாக உட்கார வைத்து வசனம் 12 - 13 படிக்கவும். வசனம் 14 படிக்கும் போது பிள்ளைகளை நகர்ந்து 3 குழுக்கலாக போக சொல்லவும். பாதம் குழுவை 15ஆம் வசனத்தை தொடர்ந்து படிக்க சொல்லவும். காது குழுவை வசனம் 16 என்ன சொல்லியிருக்கிறது என்று வாசிக்க சொல்லவும். கண் மற்றும் காது குழுகளையும் வசனம் 17 முடியும் வரை வாசிக்க சொல்லவும். பின் எல்லோரும் உங்களை சுற்றி நெருங்கி வர சொல்லி வசனம் 18 - 20 வரை படிக்க சொல்லவும்..

கலந்துரையாடல் 5 நமிடங்கள்

பிள்ளைகளுடன் உட்கார்ந்து இந்த கேள்விகளை கலந்துரையாடல் செய்யவும்.


- இந்த கதையில் உங்களுக்கு பிடித்த பகுதி எது?
- முன் விளையாடிய குழு விளையாட்டு எப்படி இருந்தது (அல்லது அவர்கள் வேதாகம பகுதியை வாசித்தது எப்படி இருந்தது.) வேத சத்தியத்தை அவர்கள் கேட்டது போல?
- நம்மை குறித்து வேதப் பகுதி என்ன சொல்கிறது?
- கடவுளை குறித்து வேதப் பகுதி கூறுவது என்ன?

## ஊடகத்தை ஆராய்தல் 20 நிமிடங்கள்

ஊடகத்தை விளக்கவும் 5 நிமிடம்

நீங்கள் உருவாக்க இருக்கும் படத்தை திட்டமிட, திரைக்கதை உதவியாக இருக்கும். ஒவ்வொரு உருப்படத்தின் வரைப்படம் படக்காட்சியின் மிக முக்கிய குறிப்புகளை குறித்து விளக்குவதாக இருக்கும். கதாப்பாத்திரம் சொல்லும் குறிப்புகளும் திரைப்பலகையில் இருக்கும். திரைப்பலகை சித்திர

சுருள் போன்று காட்சிக் கொடுக்கும். ஆனால் அது அதிக நீளமாக இருக்கும். அது நீங்கள் படம்பிடிக்க வேண்டிய உருச்சட்டம் கொண்டுள்ளதாக இருக்கும்.



[திரைப்பலகைக்கான வரைப்படம்]

திட்டத்தை விவரிக்கவும் 5 நிமிடங்கள்

பிள்ளைகள் அவர்களுடைய கிட்ஸ்ஹப்ஸ் திட்ட குழுவோடு வேலை செய்வார்கள். திரை மேடையில் அவர்கள் 3-4 நிமிட குறும்படம் ஒன்றை எடுத்து காண்பிக்க போகிறார்கள் என்று விவரிக்கவும். (பாடம் 10 பார்க்கவும்) இந்த பகுதியில் நாம் திரைப்பலகையை திட்டமிடபோகிறோம். பின் நாம் இதை படமாக்குவோம். இதை சீர் படுத்தி நாம் நண்பர்களுக்கும் குடும்பத்திற்கும் இதை திரை மேடையில் திரையிட்டு காட்டுவோம்.

5 ஆம் பாடத்தில் "காணாமல் போன காசு" ஒளிப்படத்திற்கு திரைப்பலகைக்கான வரைப்படத்தை குறித்து சுருக்கமாக பார்த்தோம். இன்று குறும்படத்திற்கான திரைப்பலகையை உருவாக்க போகிறோம். உங்கள் குழுக்களில் குறுப்படத்திற்கு வேண்டிய உருப்படங்களுக்கும் திரைப்பலகையை ஆயத்த பணியை முடிக்க வேண்டும்.

உங்கள் திட்டக்குழுவிற்காக தேர்ந்து எடுத்த கதையை உங்கள் குழுவில் படிக்க வேண்டும். கீழ்வரும் குறிப்புகளை கவனமாக பார்த்துக் கொள்ளவும்.

- எப்படி திரைகதை அமைக்கபடும். (மக்கள் என்ன சொல்வார்கள்)
- நீங்கள் எவ்விதமான படப்பிடிப்பை பயன்படுத்துவீர்கள்.?
- நீங்கள் என்ன படமாக்க போகிறீர்கள்?

யார் ஒளியமைப்பாளர், இயக்குனர், நடிகர்கள் என்று தீர்மானம் செய்யுங்கள்.
ஒரு திட்டக்குழுவாய் நீங்கள் கதையை பலமுறை படிக்க வேண்டி இருக்கும். ஒவ்வொரு குழுவினர்களும் அவாக்கள் கண்ணோட்டதிற்கு தக்கதாக கதையையும்/ திரைப்பலகையும் பார்க்க வேண்டும்.
ஒளியமைப்பாளர், இயக்குநர், நடிகர்கள் (தேவைப்படும் பொருட்கள். ஒளியமைத்தல், ஒலியமைப்பு)

சிறுக்கதையை தேர்ந்து எடுத்தல் 10 நிமிடங்கள்

கீழ்வரும் குறிப்புகளில் இருந்து ஒரு வேதாகம கதையை தேர்ந்து ஒவ்வொரு திட்ட குழுக்களும் தேர்ந்து எடுத்து கொள்ள வேண்டும். அல்லது ஒவ்வொறு குழுவினர்களுக்கும் ஒரு கதையை ஒதுக்குங்கள். முடிந்தால் ஒவ்வொரு குழுவினர்களுக்கும் ஒரு வேதாகமத்தையோ அல்லது படம்மாக்க உள்ள வேதாகம கதையின் பிரதியை எடுத்து கொடுக்கவும்.

- சகேயு - லூக்கா 19:1-1-
- காணாமல் போன மகன் - லூக்கா 15:11-31
- பார்வையற்ற பர்தலமேயு - மாற்று 10:46-52
- சீலோவாம் குளம் - யோவான் 9- 1-11
- நல்ல சமாரியன் - லூக்கா 10:25-37
- இயேசு கடல் சீற்றத்தை அமைதிபடுத்துதல் - மத்தேயு 8: 23-27

*ஒரு தலைவராக, பிள்ளைகள் படம் பிடிக்கும் படி வேதாகமத்தில் வேறு சிறிய கதையை நீங்கள் யோசித்தால் அதையும் குறிப்பில் எழுதி கொள்ளலாம்.*

## ஆய்வு 25 நிமிடங்கள்

கிட்ஸ்ஹப்ஸ் திட்டக்குழுவிற்கான நேரம்

பிள்ளைகளை தங்கள் திட்ட குழுவில் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட கதையை திட்டமிட்டு திரைபலகையை (திரைக்கதையை) ஆயத்தப்படுத்தி, கேள்விகளுக்கான பதிலை கொடுத்து குழுக்களில் பங்கினை முடிவுசெய்யுங்கள். (மேலே குறிக்கப்பட்டுள்ளது)

இதன் முன்னேற்றதிற்கு எல்லா பிள்ளைகளும் பங்களிக்க உற்சாகப்படுத்துங்கள்.

## மறுஆய்வு 10 நிமிடங்கள்

### பிள்ளைகளின் ஜெபம்

தங்கள் குழுக்களில் ஜெபிக்க பிள்ளைகளிடம் அறிவுறுத்தவும். கதையின் உண்மையான அர்த்தத்தையும் காண்போர் அதின் கருப்பொருளை புரிந்துக்கொள்ளவும் திட்டகுழுவிற்கு வேண்டிய ஞானத்திற்காகவும் தேவனிடம் கேட்க வேண்டும்.

### மறுஆய்வு கேள்விகள்

பிள்ளைகளுக்கு அருகில் அமர்ந்து இன்றைய தின கருத்திலிருந்து கலந்துறையாடவும்.

- ஏன் ஒரு குழு மிக முக்கியம்.?

ஒவ்வொரு பிள்ளைகளையும் தாங்கள் ஆயத்தம் செய்த திரைகதையையும் அந்த வேதாகம கதையை எப்படி படமாக்க போகிறார்கள் என்பதையும் விவரிக்க சொல்லவும்.

### பிளளைகளுக்கான சவால்

பிள்ளைகளிடம் அவர்கள் சார்ந்து இருக்கும் குழுவை நினைத்து பார்க்க சொல்லுங்கள். எப்படி அவர்கள் குழுவில் சிறந்து செயல்படுவது என்பதே இந்த வாரத்தின் சவால் ஆகும்.

### கலைந்து செல்லுதல்

இந்த செய்முறையில் கலந்து கொண்டதற்காக பிள்ளைகளுக்கு நன்றி தெரிவியுங்கள்.
நேரம் இருந்தால், மகிழ்வூட்டும் ஓர் விளையாட்டை விளையாடலாம்.

# பாடம் - 8

# அடிப்படை சீர்படுத்தல் (எடிட்டின்)

எடுத்துக் கொள்ளப்படும் நேரம் 60 -90 நிமிடங்கள்

### வேதப்பகுதியும் செய்தியும்

லூக்கா : 15.8-10, நம்மை தேடி காப்பாற்ற பூரணமான குமாரனை தேவன் அனுப்பினார்

பாடம் 5யில் உள்ள பகுதியை இன்னும் அதிகமாய் பிள்ளைகள் ஆராய தொடங்குவார்கள்

### முக்கிய சிந்தனை

- இந்த பாடத்தின் முடிவில், பிள்ளைகள் அடிப்படை படகாட்சியில் எப்படி வெட்டிவிடுவதற்கும் சாதரணமாக தொகுத்தலுக்கும் இடையே என்ன செய்ய வேண்டும் என்று தெரிந்து கொள்வார்கள்.
- வித்தியாசமான படக்காட்சிகளை கையாள்வதில் கால அளவை புரிந்து கொள்வார்கள்

### முக்கிய வார்த்தை

- உண்மையாக கால அளவு
- தொகுத்தல் (எடிட்)

### ஆயத்தம்

- பிள்ளைகள் வருவதற்கு முன்பே பாடத்தில் உள்ளவற்றை நன்கு அறிந்து கொள்ளுகள் பயன்படுத்தவும்.
- "காணாமல் போன காசு" கிட்ஸ்ஹப்ஸ் திட்ட குழு ஒளிப்படத்தின் ஒன்றையாவது அதை 2 வித்தியாசமான முறையில் வெவ்வேறு இசையோடு தொகுக்க(எடிட்) வேண்டும்

### தேவையான பொருட்கள்

ஒளிப்பட கருவி, ஒளி எறிவுக் கருவி (Projector) அல்லது தொலைக்காட்சி பெட்டி(பட காட்சியை பார்க), தேவையான அளவு கயிறு அல்லது பொருள் (குழு விளையாட்டுக்கு தேவைபடும்) குறிப்பேடு மற்றும் எழுதுகோல் (ஒவ்வொரு பிள்ளைகளுக்கும்) எழுதுப் பலகை (படம் வரைய) வேதாகம் (கிட்ஸ் ஹப்ஸ் குழு எல்லோருக்கும்)

## பாடத்திட்டம்

கற்பனையை செய்முறைப்படுத்தல் 15 நிமிடங்கள்

**பிள்ளைகளை வரவேற்றல்** — 3 நிமிடம்

பிள்ளைகளை வரவேற்க இணைப்பு பகுதியில் (இக்கையேடின் பின்புறத்தில்) உள்ள ஆயத்த செயல்பாட்டிலிருந்து ஒன்றை தெரிந்து கொள்ளுங்கள்

**ஆயத்த விளையாட்டு: பின்புறத்தில் வரையுதல் ( நேரம் 5 நிமிடம்)**

10 நபர் உள்ள குழுக்கலாக இனைந்து நேர் கோட்டு அமைக்கவும். ஒவ்வொரு குழுவின் முனையில் இருக்கும் நபருக்கு சாதரணமான வரைப்படத்தை காட்ட வேண்டும் (உதாரணத்திற்கு முக்கோணம், நச்சத்திரம், மேகம்) தொடங்கு என்று சொன்னவுடன் பின்பாக உள்ள நபர் தனக்கு முன் உள்ள நபரின் முதுகில் விரலினால் வரைய வேண்டும். அவர்கள்

இரண்டுமுறை மாத்திரம் தான் வரைய வேண்டும். அந்த நபர் தனக்கு முன் உள்ளவரின் முதுகில் வரைய வேண்டும், அப்படியே தொடர வேண்டும். வரிசையின் முதல் நபருக்கு சரியான உருவத்தை பரிமாறி கொள்கிற குழுவே வெற்றிப் பெறுவர்.

முதல் முறை விளையாடிய பின்பு கீழ்வரும் கேள்விகளை கேட்கலாம்:

- இந்த செய்தி வரிசையில் எங்கு எப்படி மாறியது? ஏன்?
- இந்த செய்தியானது மிகவும் கடினமானது என்று நினைக்கிறீர்களா?
- எப்படி இன்னும் சிறப்பாக நீங்கள் இதை செய்ய கூடும்?

இந்த விளையாட்டை மீண்டும் விளையாடுங்கள் வேறு உருவத்தை காட்டி மற்றவர்களிடம் அனுப்புங்கள்.

### குழந்தைகள் பேசுகிறார்கள். 5 நிமிடங்கள்

உங்களுக்கு அருகில் குழுவாக பிள்ளைகளை உட்கார வையுங்கள். உங்கள் வாழ்வில் நடைப்பெற்ற ஏதேனும் ஆர்வமூட்டிய ஒன்றை பிள்ளைகளிடம் சொல்லுங்கள். பிள்ளைகள் வாழ்வில் நடைப்பெற்ற ஏனேனும் 3 விஷேசங்களை சொல்ல கேள்ளுங்கள். அவர்களிடம் ஒர் கலந்துரையாடலை துவங்கிடுங்கள்.

- உங்கள் வாழ்வில் ஏதேனும் ஒன்று மிக வேகமாக முன்செல்ல செய்திடனும் என்று உண்டா?
- உங்கள் வாழ்வில் எதை சீர்படுத்த வேண்டும் (எடுத்துவிட)

### ஒர் வார்தையை கற்றுக் கொள்ளுங்கள்: உண்மை நேரம் மற்றும் சீர்படுத்துவது (எடிட்) 3 நிமிடங்கள்

உண்மையான நேரம்: நாம் அனுபவிக்கும் நேரம். தொலைகாட்சியில் அல்லது திரைப்படத்தில் காண்பிக்கபடுவது உண்மையான நேரத்திலிருந்து குறைந்த நேரத்திற்கு தொகுக்கப்பட்ட நடிப்பாகதான் இருக்கும்.

தொகுத்தல்/சீர்செய்தல் (எடிட்): முழுமையடைந்த நிகழ்வுயாக திரைகதைக் ஏற்ப ஒளிப்பட பொருட்களை இணைக்கும் செயல்பாடே தொகுத்தல் (எடிட்டின்) ஆகும். மின்பொருள் தொகுத்தல் என்பது மென்பொருள் பயன்படுத்தி கணிணி மூலம் செய்வதாகும்.

## வேதாகம தகவல்கள் 10 நிமிடங்கள்

### வேதாகம பகுதி 5 நமிடங்கள்

லூக்கா 15: 8-10: தன்னார்வமுள்ள ஒருவரை பாடம் 5 பார்த்த "காணாமல் போன காசு" கதையை படிக்க சொல்லவும். பாடம் 5யிருந்து கிட்ஸ்ஹப்ஸ் திட்டகுழுவின் ஒருவரின் காணாமல் போன காசு ஒளிப்படத்தை பார்க்கவும்.

### கலந்துரையாடல் 5 நமிடங்கள்

பங்காளர்களோடு பிள்ளைகளை அமர்ந்து கீழ்வரும் கேள்விகளை குறித்து கலந்துரையாட சொல்லுங்கள்

- தேவன் எப்படி பூமிக்கு வந்தார் என்று நினைக்கிறீர்கள்?
- ஏன் அவர் மக்களை தேடி வந்தார்?
- மக்களை கண்டுப்பிடிக்க கடவுள் என்ன செய்தார்?

பெரிய குழுவாக பிள்ளைகளை ஒன்று கூடி வர சொல்லி அவர்களது பதில்களை பகிர்ந்து கொள்ள சொல்லுங்கள்

இயேசுவை குறித்தும் அவர் நம்மை எப்படி மதிப்பிடுகிறார் என்பதை குறித்து பேசுங்கள். நாம் எவ்வளவு சிறியவர்கள் என்பது அவருக்கு ஒரு பொருட்டு அல்ல அவர் நம்மை தேடி காப்பாற்ற வருகிறார். நம்முடைய பாவத்திற்காய் இயேசு சிலுவையில் மரித்தார் என்று விளக்கி சொல்லுங்கள். நாம் சீர்பட்டு அவருடைய பிள்ளையாக என்றென்றும் வாழு தேவன் தன்னுடைய குமாரனை இதற்காக அனுப்பினார். இப்படிதான் தேவன் நம்மை தேடி வந்தார்.

## ஊடகத்தை ஆராய்தல் 25 நிமிடங்கள்

### கலந்துரையாடல் (எடுத்துக்கொள்ளும் நேரம் 5 - 10 நிமிடங்கள்) 5 நிமிடங்கள்

கீழ்வரும் கேள்விகளை பிள்ளைகளிடம் கேளுங்கள்.

- படபிடிப்பு எடுத்தவுடன் ஏன் நாம் அதை சீர் செய்ய வேண்டும்.?
- சீர்செய்தல் (எடிட்டின்) என்றால் என்ன? (ஒளிப்படத்தை அழித்தல், ஒருங்கிணைத்தல், வரிசைப்படுத்தல், வெட்டுதல், ஒலியை படத்துடன் சம்மந்தபடுத்தல் போன்ற செயல்களின் மூலம் அயத்தப்படுத்தல்
- யார் ஒரு திரைப்படத்தை பார்த்திருக்கிறீர்கள்? அது உண்மையான நேரம் இல்லை என்பதை கவனித்திருக்கிறீர்களா? (உண்மையான நேரம் என்பதை விவரிக்கவும். உண்மையான நேரத்தில் ஓர் கதை எடுக்க ஒரு வருடம் பிடித்திருக்கும் ஆனால் படத்திலோ 15 நிமடம்தான் எடுத்திருக்கும்.)

பார்க்க: கிட்ஸ்ஹப்ஸ் திட்ட குழுவின் "காணாமல் போன காசு" ஒளிப்படத்தை பார்கவும் 20 நமிடங்கள்

அவர்கள் ஆயத்தம் செய்த படத்தை பிள்ளைகளே விமர்சனம் செய்யும் நேரம் இது. "காணாமல் போன காசு" ஒளிப்படத்தை பிள்ளைகளிடம் ஒருமுறை பார்க்க சொல்லி பின் அவர்கள் ஒளிப்பட விமர்சியாளர்கள் என்று சொல்லி,

- எடுத்த் படக்காட்சி சிறப்பாக உள்ளதா இல்லையா என்று முடிவு எடுக்க வேண்டும?
- எந்த உருப்படம் (shots) நீளமாக உள்ளதா?
- எந்த உருப்படமாவது மிக குறைந்த அளவு உள்ளதா?
- கதை தெளிவாக புரிகிறதா?

எப்படி இசை ஒளிப்படத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது என்று பேசுங்கள். ஒளிப்படத்தின் சூழலை எப்படி பலதரப்பட்ட இசை மாற்றுகிறது என்று சிந்திக்கவும். "காணாமல் போன காசு" ஒளிப்படத்தை இரண்டு வித்தியாசமான இசையுடன் காண்பியுங்கள். இசை ஒளிப்படத்தை உணர்வு எப்படி மாற்றுகிறது என்று கலந்துரையாடவும்.

## திறனை அப்பியாசப்படுத்துவது 20 நிமிடம்

சீர்செய்தலின் வழிமுறைகளை கவணிக்கவும் 20 நிமிடம்

காணாமல் போன காசு படம் எப்படி தொகுக்கப்பட்டது என்ற பட அமைப்பை பிள்ளைகளுக்கு காட்டவும். குழு பார்க்கும் படியாக சாதாரண தொகுக்கும் மென்பொருள் உள்ள ஓர் கணிணி ஒன்றை ஆயத்தம் செய்யவும். சீர் செய்யப்படாத எல்லா ஒளிப்படங்களும் கணிணி மென்பொருளில் வைத்திருக்கவும். நீங்கள் படத்தை சீர்செய்யும் போது எல்லோரும் பார்க்கும்படி உங்கள் கணிணியை ஒளி எறிவுக் கருவியுடன் இனைத்து கொள்ளுங்கள். குழுவிற்கு எப்படி ஓர் ஒளிப்படம் சீர் செய்யப்படுகிறது என்று காட்டவும். எல்லா ஒளிப்பட பிரதிகளையும் ஒருப்படமாக (shots) மாற்றுவதிலிருந்து ஆரம்பியுங்கள். பின் தேவையான ஒளிப்பட நீளத்தை முடிவு செய்து ஒன்றன்பின் ஒன்றாக நேரவரிசையில் சேர்க்கவும். மூல ஒளிப்படத்தை எங்கு வெட்ட வேண்டும் என்று குழு தீர்மானம் செய்து கொள்ளலாம்.

சீர்செய்யும் போதே அவ்வபோது ஆரம்பத்திற்கு சென்று படத்தையும் அதின் வரிசையையும் பார்க்கவும்.

## மறுஆய்வு 10 நிமிடங்கள்

பிள்ளைகளின் ஜெபம்

தங்கள் குழுக்களில் ஜெபிக்க பிள்ளைகளிடம் அறிவுறுத்தவும். திட்டகுழுவிற்கு வேண்டிய ஞானத்திற்காக தேவனிடம் கேட்க சொல்லிக்கொடுங்கள்

மறுஆய்வு கேள்விகள்

பிள்ளைகளுக்கு அருகில் அமர்ந்து இன்றைய தின கருத்திலிருந்து கலந்துறையாடவும்.

- சீர்செய்யபடுவதின் வழிமுறைகள் ஏன் முக்கியம்

பிளளைகளுக்கான சவால்

பிள்ளைகளிடம் அவர்களது வாழ்வில் சீர்செய்யபட வேண்டியவைகள் என்ன என்ன உள்ளது என்று சிந்துத்து பார்க்க சொல்லுங்கள். அதை எப்படி கையாள்வது?

கலைந்து செல்லுதல்

இந்த செய்முறையில் கலந்து கொண்டதற்காக பிள்ளைகளுக்கு நன்றி தெரிவியுங்கள். நேரம் இருந்தால், மகிழ்வூட்டும் ஓர் விளையாட்டை விளையாடலாம்.

எடுத்துக் கொள்ளப்படும் நேரம் 3 மணி நேரம்

| வேதப்பகுதியும் செய்தியும் |
|---|
| ▪ சகேயு - லூக்கா 19:1-1-<br>▪ காணாமல் போன மகன் - லூக்கா 15:11-31<br>▪ பார்வையற்ற பர்தலமேயு - மாற்று 10:46-52<br>▪ சீலோவாம் குளம் - யோவான் 9- 1-11<br>▪ நல்ல சமாரியன் - லூக்கா 10:25-37<br>▪ இயேசு கடல் சீற்றத்தை அமைதிபடுத்துதல் - மத்தேயு 8: 23-27 |
| முக்கிய சிந்தனை |
| • இந்த பாடத்தின் முடிவில், பிள்ளைகள் அவர்களுடைய சிந்தனையை ஒன்றினைத்து பாடம் 7யில் திரைபலகையில் செய்திருப்பதை படம்பிடிப்பார்கள்.<br>• அவர்கள் குழுவாக செயலபடுவதையும் வெவ்வேறு பொருப்புகளையும் உணருவார்கள். |
| ஆயத்தம் |
| • பிள்ளைகள் வருவதற்கு முன்பே பாடத்தில் உள்ளவற்றை நன்கு அறிந்து கொள்ளுகள் பயன்படுத்தவும். |
| தேவையான பொருட்கள் |
| ஒளிப்பட கருவி, ஒளி எறிவுக் கருவி (Projector) அல்லது தொலைக்காட்சி பெட்டி(பட காட்சியை பார்க), தேவையான அளவு கயிறு அல்லது பொருள் (குழு விளையாட்டுக்கு தேவைபடும்) குறிப்பேடு மற்றும் எழுதுகோல் (ஒவ்வொரு பிள்ளைகளுக்கும்) எழுதுப் பலகை (படம் வரைய) வேதாகம் (கிட்ஸ் ஹப்ஸ் குழு எல்லோருக்கும்) |

## பாடத்திட்டம்

### கற்பனையை செய்முறைப்படுத்தல் 15 நிமிடங்கள்

**பிள்ளைகளை வரவேற்றல்** 5 நிமிடம்

பிள்ளைகளை வரவேற்க இணைப்பு பகுதியில் (இக்கையேடின் பின்புறத்தில்) உள்ள ஆயத்த செயல்பாட்டிலிருந்து ஒன்றை தெரிந்து கொள்ளுங்கள். முன்தின பாடங்களில் விளையாடிய விளையாட்டில் எது மீண்டும் விளையாட ஆசையாக உள்ளது என்று கேட்கலாம். அல்லது அவர்களுக்கு பிடித்த ஒர் விளையாட்டை விளையாடலாம்.

**குழந்தைகள் பேசுகிறார்கள்.** 10 நிமிடங்கள்

உங்களுக்கு அருகில் குழுவாக பிள்ளைகளை உட்கார வையுங்கள். உங்கள் வாழ்வில் நடைப்பெற்ற ஏதேனும் ஆர்வமூட்டிய ஒன்றை பிள்ளைகளிடம் சொல்லுங்கள். பிள்ளைகள் வாழ்வில் நடைப்பெற்ற ஏனேனும் 3 விஷேசங்களை சொல்ல கேள்ளுங்கள். அவாக்களிடம் ஓர் கலந்துறையாடலை துவங்கிடுங்கள்.

- உங்கள் வாழ்வில் ஏதேனும் ஒன்று மிக வேகமாக முன்செல்ல செய்திடனும் என்று உண்டா?
- உங்கள் வாழ்வில் எதை சீர்படுத்த வேண்டும் (எடுத்துவிட)

### வேதாகம தகவல்கள் 10 நிமிடங்கள்

குழந்தைகளின் ஜெபம் 5 நமிடங்கள்

தங்கள் திட்டகுழுவிற்காக ஜெபிக்க பிள்ளைகளிடம் அறிவுறுத்தவும். இன்றைய தினத்தில் அவர்கள் தேர்ந்து தெடுத்த வேதாகம பகுதியின் படப்பிடிப்பிற்காக ஒன்றினைந்து ஜெபிக்க சொல்லுங்கள். அவருடைய வார்த்தையில் உள்ள (வேதத்தில்) சத்தியத்தை துள்ளியமாக எடுத்து சொல்ல தேவனின் உதவியை நாட வேண்டும். காண்போர் இந்த ஒளிபடத்தை பார்க்கவும், கேட்கவும், சத்தியத்திற்கு செவிக்கொடுக்கவும் ஜெபிக்கவும்.

இதை அவர்கள் செய்தவுடன், அவர்கள் செய்வதின் (தேவனுடைய வார்தையை ஒளிப்படமாக்கும்) முக்கியத்துவதை எடுத்துரைக்கவும். அவர்களின் திரைகதையும் திரைபலகையில் உள்ளவைகளும் சரியாக உள்ளதா என்று தேர்ந்து எடுத்த வேத பகுதியை மீண்டும் ஜாக்கிரதையாக படிக்க சொல்லுங்கள்.

வேத வாசிப்பு

5 நமிடம்

- சகேயு - லூக்கா 19:1-1-
- காணாமல் போன மகன் - லூக்கா 15:11-31
- பார்வையற்ற பர்தலமேயு - மாற்று 10:46-52
- சீலோவாம் குளம் - யோவான் 9- 1-11
- நல்ல சமாரியன் - லூக்கா 10:25-37
- இயேசு கடல் சீற்றத்தை அமைதிபடுத்துதல் - மத்தேயு 8: 23-27

## ஊடகத்தை ஆராய்தல் 25 நிமிடங்கள்

படப்பிடிப்பின் வழிமுறைகளை எடுத்துரைக்கவும் 2 நமிடங்கள்

நிறைவு நிகழ்ச்சியில் காட்ட கூடிய திரைப்படத்தை நாம் இன்று கிட்ஸ்ஹப்ஸ் திட்டகுழுவில் படம்பிடிக்க போகிறோம் என்பதை நினைப்பூட்டுங்கள்.

பாடம் 7 அவர்கள் திரைபலகையினை அயத்தம் செய்திருக்க வேண்டும்.

படம்பிடிப்பில் ஒவ்வொரு நபரின் பங்கு என்ன என்பதை தெரிந்திருக்க வேண்டும். (இயக்குநர், ஒளிப்பட அமைப்பாளர், நடிகர்)

படபிடிப்பு பகுதி முழுவதும் முடிக்கவும், சிறிதளவு சீர்படுத்தும் பணியும் இன்று முடிக்க நேரம் இருக்கும் என்று விளக்கவும்.

## **திறனை அப்பியாசப்படுத்துவது 120 நிமிடம்**

செயல்: குறுப்படம் எடுத்தல்

ஒவ்வொரு குழுவை அவர்களுடைய சிறிய வேதாகம கதையை படம்பிடிக்க அனுபவும். அகல, நடுத்தர, தோல்பட்டை, நெருக்கமான படப்பிடிப்பை அப்பியாசப்படுத்த மறவாதபடி அவர்களுக்கு நினைவுப்படுத்தவும். அதிகமான சில காட்சிகளை எடுக்க மறக்க கூடாது. (கழித்து விட கூடிய - இதை அவர்களிடம் சொல்லாமலே தானாகவே எடுக்கிறார்களா?என்று பார்க்வும் அதிக உருப்படம்கள் எடுத்தால் கதையை தொகுக்கும் போது எளிதாக இருக்கும்.

தலைவாராக இருக்கிறவர் அந்த நாளின் முடிவில் நீங்கள் எல்லா ஒளிப்பட கருவிகளையும் பெற்றுக்கொண்டு அதின் ஒவ்வொரு கதையின் ஒவ்வொரு பகுதியையும் தொகுத்து நிறைவு நிகழ்வில் காண்பிக்கலாம். இது சற்று நேரம் எடுக்கும். ஆகையால் ஆயத்தமாக இருங்கள் அல்லது மற்றவர்களின் உதவியை நாடலாம்.

## ஆய்வு 10 நிமிடங்கள்

குழந்தைகளின் ஜெபம் 5 நமிடங்கள்

ஒரு பெரிய குழுவாக பிள்ளைகளை ஒன்றாக உட்கார சொல்லுங்கள். கிட்ஸ்ஹப்ஸ் ஊடக பயிற்சியின் போது நடைப்பெற்ற எல்லாவற்றிக்காகவும் கடவுளுக்கு நன்றி சொல்ல பிள்ளைகளை அனுமதிக்கவும்.

### மறுஆய்வு கேள்விகள்

கீழ்வரும் பிரச்சனைகளை கலந்துறையாடவும்.

- படப்பிடிப்பு செயல்முறைகளை குறித்து நீங்கள் சந்தோஷப்படுகிறீர்களா?
- அவர்கள் உற்பத்தி செய்ததை குறித்து சந்தோஷப்படுகிறீர்களா?
- கடினமாக இருந்ததாக எதை கண்டார்கள்?
- நிகழ்ச்சி பெட்டகத்தில் அவர்களது குறுப்படத்தை வெளியிடுவதில் எது எல்லாம் அவர்களை பெரு மகிழ்ச்சி ஏற்படுத்தியது.

### கலைந்து செல்லுதல்

இந்த செய்முறையில் கலந்து கொண்டதற்காக பிள்ளைகளுக்கு நன்றி தெரிவியுங்கள்.
நேரம் இருந்தால், மகிழ்வூட்டும் ஓர் விளையாட்டை விளையாடலாம்.

## பாடம் - 10

## காட்சிப்படுத்தல்

எடுத்துக் கொள்ளப்படும் நேரம் 60 -90  நிமிடங்கள்

பிள்ளைகளுடன் பயிற்சி செய்யவும், நிகழ்ச்சிக்கு ஆயத்தம் செய்வதும், ஒளிப்படத்தை சீர்செய்வதும் காட்சிப்படுத்தல் நிகழ்ச்சியை நடுத்துவதற்கான நேரத்தை நீங்கள் தான் முடிவு செய்யவேண்டும்.

**முக்கிய சிந்தனை**

- காட்சிப்படுத்தல் என்பது கிட்ஸ்ஹப்ஸ் ஊடக பயிற்சியில் கலந்து கொண்ட பிள்ளைகளின் குடும்பத்தாரையும் நண்பர்களையும் வரவேற்று அவர்கள் செய்த பயிற்சியையும் பிள்ளைகள் தயாரித்த குறுப்படத்தை காண்பிக்கும் ஓர் சிறப்பான நிகழ்வு.
- பிள்ளைகள், குடும்பத்திற்கும் நண்பர்களுக்கும் அவர்கள் கற்றுக்கொண்ட எல்லாவற்றையும் செய்து காட்டிட உற்சாக படுத்த வேண்டும்.
- திரையிடப்போகும் படத்தை குறித்து அவர்கள் ஓர் முன்னொட்டம் கொடுக்க வேண்டும்.

**ஆயத்தம்**

- திரையிடப்போகும் எல்லா கிட்ஸ்ஹப்ஸ் ஊடக பயிற்சியில் எடுக்கப்பட்ட வேதாகம கதைகளையும் தொகுத்து வைக்கவும்.
- குடும்பத்தினரையும் நண்பர்களையும் வரவேற்க உறுதி செய்துக்கொள்ளுங்கள்.
- காட்சிப்படுத்த போகும் இடத்தை ஆயத்தம் செய்யுங்கள் (அலங்கரித்தல், இருக்கைகள், ஒலிபெருக்கி, கிறித்துவ செய்தியை சொல்லும் சூழுல் இருக்கிறதா)

**தேவையான பொருட்கள்**

ஒளிப்பட கருவி, ஒளி எறிவுக் கருவி (Projector) அல்லது தொலைக்காட்சி பெட்டி(பட காட்சியை பார்க), பேசுவதற்கு அல்லது செய்தி கொடுப்பதற்கு தேவையான ஒளிப்படங்களை பிரதி எடுத்து வைத்துக்கொள்ளவும். எல்லா படங்களும் தொகுகப்பட்டுள்ளதா என்று பார்த்துக் கொள்ளவும். சிற்றுண்டி ஆயத்தம் செய்யவும்

## பாடத்திட்டம்

முந்தய காட்சி: அறையை அலங்கரித்தல்/நிகழ்வு மற்றும் நிகழ்ச்சி நிரலை ஆயத்தம் செய்தல்

### காட்சிப்படுத்தலுக்கு ஆயத்தம் ஆகுதல்

நிகழ்ச்சி நடைப்பெறும் இடத்தை பிள்ளைகளுடன் இனைந்து அலங்கரியுங்கள். நிகழ்வில் சில பிள்ளைகளை பேச அழையுங்கள். பெரிய பார்வையாளர்கள் மத்தியில் பேச இந்த பிள்ளைகள் நம்பிக்கை உள்ளவர்களாக இருக்க வேண்டும். கீழே பிள்ளைகள் பங்களிக்கவும் அவர்கள் பேச வேண்டிய தலைப்புகளையும் ஆலோசனையாக கொடுக்கப்பட்டுள்ளது.

- விழாவை தலைமை தாங்குதல் (காட்சிப்படுத்தலின் என்ன நடக்கிறது என்பதை அறிவிப்பதும் அறிமுகப்படுத்துதலும்)
- நாம் என்ன கற்றுக்கொண்டோம்
- எதிர்கொண்ட சவால்கள் என்ன?
- அடுத்த நிகழ்வு என்ன? (உதாரணத்திற்கு: குழுவாக செய்ய போகும் அடுத்த ஒளிப்பட செயல் திட்டம்)
- ஜெபம்
- வேத வாசிப்பு

*அவர்கள் என்ன சொல்ல வேண்டும் என்று தெரியாமல் இருப்பார்களானால் நீங்கள் உதவி செய்திட வேண்டும்.*

### அமைப்பு

இடத்தை அலங்கரிக்கம் போது ஒளிப்படத்தை திரையிட தேவையான வசதிகள் செய்யபட்டுள்ளதா என்பதை கவனிக்கவும். எல்லா திரைப்படமும் சீர்செய்து தொகுத்து காண்பிக்கும் நிலையில் உள்ளதா என்று கவனிக்கவும். நீங்கள் பவர்பாயின் மென்பொருளை பயன்படுத்துவதில் பழுக்கம் இருந்தால் எல்லா ஒளிப்படமும் தொகுத்து வழங்கும் படி ஒரு பக்கத்தை ஆயத்தம் செய்யலாம்.

## காட்சிப்படுத்தல்

காட்சிப்படுத்தலின் மாதிரி நிகழ்ச்சி

- ஆரம்ப ஜெபம் - (நீங்கள் பயிற்சி கொடுக்கும் பிள்ளைகளின் மேற்பார்வையாளர் பொருப்பில் உள்ள ஊழியரை, போதகரை அல்லத தலைவர்களை அழைக்கலாம்.
- பயிற்சியின் போது எடுக்கப்பட்ட சில நிழற்படம் கொண்ட ஒளிப்படம்.
- காணாமல் போனகாசு கதையின் அறிமுகம்.( குழந்தைகள்)
- காணாமல் போனகாசு ஒளிப்படம். (பாடம் 5யில் இருந்து 7 வரையில் ஆன ஏதேனும் 1 ஒளிப்படம்)
- கிட்ஸ்ஹப்ஸ் திட்ட குழுவின் ஒளிப்படங்கள் (ஒவ்வொரு குழுவின் ஒளிப்படத்தை குறித்து பிள்ளைகள் அவர்களுடைய படக்காட்சியை விவரிக்க வேண்டும்.
- **2** பிள்ளைகள் என்ன கற்றுக்கொண்டார்கள் என்பதை பகிர்ந்து கொள்ளுதல்
- செய்தி/ கிறிஸ்தவ பேச்சு
- சான்றிதல் கொடுப்பது.(கிட்ஸ்ஹப்ஸ் ஊடக பயிற்சியை நிறைவு செய்த பிள்ளைகளுக்கு - பொருத்தமாக இருக்குமானால்)
- முடிவான படக்காட்சி (வேதாகம அனிமேஷன் ஒளிப்படமாகவோ கிட்ஸ்ஹப்ஸ் குழுவின் ஒளிப்படமாகவோ இருக்கலாம்.)
- முடிவு ஜெபம்

# பிற்சேர்க்கை

## ஓர் குழுவின் ஊக்கமூட்டும் விளையாட்டு

| | |
|---|---|
| கண்ணாடி | ஜோடிகளில், ஒருவர் கண்ணாடி போல நடிப்பார்கள். உதாரணத்திற்கு காலையில் நடப்பது போல, கோமாளி வேடம் இடுவது போல |
| உன் பெயர் எழுதவும் | விரல், மூட்டு, பாதம் பயன்படுத்தி |
| சூடான உருளைக்கிழங்கு | கோமாளிப்போல வட்டமிடவும், கற்பனையின் பொருள் மாற்றுப்படுவது. |
| ஹலோ ஹாய் | ஹலோ (கையாட்டு) பதில் கொடுத்தல் ஹாய் (கைபேசி காதில் வைத்திருப்பது போல். வேறு விதமான சுறுதி மற்றும் தொனியில் |
| காலனி கையிரை கட்டுதல் | ஜோடிகளில், ஒவ்வொருடைய ஒரு கையைப் பயன்படுத்தி மற்றவரின் காலனி கயிரை கட்டவும். |
| வாழைப்பழ பாட்டு | பாடல் (செய்கையுடன்) பாட்டு (செய்கையுடன்). பாடுங்கள்/உற்சாகமுடன் பாடுங்கள் செய்கையின் வார்தையை ஒவ்வொருமுறையும் மாற்றுங்கள்.<br>உலகத்தில் உள்ள வாழைப்பழங்கள் ஒன்று சேரட்டும்.<br>தோளை உறிங்கள், உறி உறி தோளை உறி பின் தோளை உறித்து உறி உறி தோளை உறி.<br>பின் அதை துண்டாகவும். துண்டு துண்டு வாழைப்பழம் பின் அதை துண்டாகவும். துண்டு துண்டு வாழைப்பழம்<br>தோள் உறி (வலது கை கீழ் நோக்கி சென்ற பின் இடது கையும் )<br>நொறுக்கு (மணிக்கட்டை அடிப்பது)<br>வருவல் (இந்தோனேசியா- கைகளால் கிண்டுவது போன் கிண்டலாக கலக்கவும். )<br>குலுக்கு (உக்கிரேன்- பால் மற்றும் பழம் கலந்த பானத்தை கிண்டலாக கலக்கவும்.)<br>சாப்பிடு: (வாய் நேராக கைகளை வேகமாக உயரமாக உயர்தலாம்- வேறு பக்கமும் செய்யலாம்)<br>வாழைப்பழத்துடன் போ: (பைதியகாரதனமாக) |
| செயலிழக்க செய்தல் | செயலிழந்து, கட்ட விரல் திரந்து, மணிக்கட்டு ஒன்றாக, முழங்கை ஒன்றாக, முட்டி,கால் விரல்கள், கீழ்பகுதி வெளியில், தலை பின்பாக, நாக்கு வெளியில் |
| Dum dum dee-dum<br>டம் டம் டி-டம் | டம் டம் டி-டம் (ஒரு கை மூக்கை இறுக்கி, மற்ற கை குறுக்காக சென்று மற்ற காதைப் படிக்க வேண்டும்.<br>டம் டம் டி-டம் (விரைவு படுத்து மற்றும் கடினமாக்கு - இந்தோனேசியா)<br>யுக்ரேன், ஒரு வட்டத்தில் நின்று முட்டியை தட்டி பின் நம் அருகில் உள்ளவரின் முட்டியை தட்டுவார்கள். |
| இது அது | தலைவர் ஒரே விதமான செய்கையை சொல்லிக்கொண்டே இருப்பார் இது, இது, இது------பிள்ளைகள் இது என்று சொல்லி செய்வதை அவர்களும் செய்வார்கள் ஆனால் அது என்று சொல்லி செய்வதை செய்ய கூடாது. ”சைமன் சொல்கிறார்” என்ற விளையாட்டை போன்று. ) |
| இயக்கத்தில் மூலக்கூறுகள் | நகர்ந்து செல் ஆனால் யாரையும் இடிக்க அனுமதி இல்லை: நீந்தி செல், நொண்டி அடி, பக்கவாட்டாக நகருங்கள். நண்டு போல் இருங்கள். (தலைவர் படிபடியாக எல்லையை கொண்டு வர முடியும்.) |

| | |
|---|---|
| Mexican karate<br>மெக்சிகன் கராதே | ஜோடியாக, 1-2-3- "போ" - ஒவ்வொரு நபரும் சில விரல்களை விரித்து வைப்பார்கள். ஜோடியின் மற்ற நபரின் விரல் எண்ணிக்கையும் தனது விரல் எண்ணிக்கையும் சேர்ந்து வந்தால் அவர்கள் வெற்றிப் பெறுவார்கள். |
| காகிதம்,<br>கத்திரிக்கோள்,<br>பாறை | ஜோடியாக அல்லது குழுவாகவோ.<br>காகிதம் (கைகள் விரித்தபடி) பாறை (கைகள் மூடிய நிலையில்) கத்திரிக்கோள் (குறியீடு மற்றும் நடுவிரல் கத்தியை போல ஒரு ஜோடி கத்திரிக்கோள் போல் வைக்கவும். 3 என்று சொல்லும் போது இருவரும் அவர்ரவர் விருப்பம் போல் கையை காட்டவும பாறை கத்திரிக்கோளை வெல்லும் (மொக்கையாகிவிடும்) கத்திரிக்கோள் காகிதத்தை வெல்லும் (வெட்டிவிடும்) காகிதம் பாறையை வெல்லும் (முடிவிடும) குழுவாக விளையாடும் போது ஒரு ஜோடி காகிதம், கத்திரிக்கோள், பாறை விளைாடுவார்கள் மற்ற ஜோடி ஒருவரை ஓடி துரத்தி தொடும் விளையாட்டை விளையாடுவார்கள். வெற்றிப் பெற்றவர்கள் தோல்வி அடைந்தவரை துரத்துவார்கள்.<br>விளையாட்டு ஒரு குழுவில் விளையாட யாரும் இல்லை என்ற நிலை வந்ததும் முடியும் அல்லது தலைவர் நிறுத்து என்று சொன்னால் நிறுத்தி விட வேண்டும். |
| மெதுவாக இயங்குவது - உண்மையில் வேகமாக | உயர் குழுக்கள் -குறைந்த குழுக்கள் - முடக்கம் |
| மனித இயந்திரம் | ஒரு நபர் ஒரு இயக்கத்தையும் அதற்கு ஒலியையம் கண்டுபிடிக்கிறார். அடுத்த நபர் அதனோடு என்ன சத்தையும் அதற்குறிய செயலையும் சிந்தித்து செய்கிறார். மற்ற நபர் மெதுவாக இந்த மனித இயந்திரத்தோடு இணைகிறார். எல்லோரும் அதின் ஒரு பகுதியாக வரும் வரை இது தொடரும் |
| ஒருவரை ஒருவர் இழுக்க வேண்டும் | ஜோடியாக, 3, 4, 5, 6?!! கைகளை பிடித்து கொள்ளுங்கள், கால் நடுவில் தொட வேண்டும் |
| மற்றவரிடம் அனுப்பு | ஒரு செய்தியை வரிசையில் முன்பாக உள்ள நபரின் முதுகில் எழுதி அனுப்பு அந்த நபர் என்ன வரையப்பட்டது என்று சிந்தித்து அதை அடுத்த நபரின் முதுகில் வரைந்து அனுப்ப வேண்டும் இப்படி தொடர வேண்டும். முன்பாக உள்ள நபர் அவரது கையை வைத்து என்ன அவர் முதுகில் வரையப்பட்டது என்பதை கணிக்க வேண்டும். (உதாரணம்: முக்கோணம், சிரித்த முகம், வாழைப்பழம், சேவல்) |
| நாணயத்தின் தேதி | ஒவ்வொரு நபரிடமும் ஒரு நாணயத்தை கொடுங்கள். ஒவ்வொரு நபரும் மற்ற யாரிடமாவது சென்று அந்த நபரின் கையில் உள்ள நாணயத்தின் வருடத்தில் தன் வாழ்வில் நடைப்பெற்ற நினைவில் உள்ள ஏதாவது ஒன்றை சொல்ல வேண்டும். இதை செய்தபின் அவர் நகர்ந்து வேறு புதிய நபரை கண்டு நம் வாழ்வில் நடைப்பெற்ற ஒன்றைப் பற்றி சொல்லலாம். 5 நிமிடம் அவருக்கு கொடுங்கள். |
| செய்கை பெயர்கள் | பெரிய வட்டத்தில் நிற்கவும். ஒவ்வொரு நபரும் அவர்களுடைய பெயர் அழைக்கப்படும் போது ஏதாவது ஒரு செய்கையை செய்ய யோசித்து வைக்க வேண்டும். முதல் நபர் அவரின் பெயரை சொல்லி விட்டு ஏதாவது ஒரு செய்கை செய்ய வேண்டும். வட்டத்தில் உள்ள எல்லோரும் அந்த பெயரை சொல்லி செய்கையையும் செய்ய வேண்டும். தனக்கு இடது புறத்தில் உள்ள நபர் தன் பெயரை சொல்லி அவருடைய செய்கையை செய்ய வேண்டும். இப்படி குழுவில் உள்ள எல்லோரும் பெயர் சொல்லி செய்கை செய்து முடிக்கும் வரை தொடரவும். விளையாட்டு விறுவிறுப்பாகவும் வேகமாகவும் இருக்கும். |
| ஒரே மொழி சிரிப்பு | சிரிப்பு மாத்திரமே மக்கள் பேசும் ஒரே மொழி என்ற சிந்தித்து கொள்ளுங்கள. அறையில் உள்ள ஒவ்வொருவரு மற்றொருவருடன் கை குலுக்கி தன் பானியில் சிரிக்க வேண்டும். பேச அனுமதி இல்லை. எல்லோரும் அறையில் நகர்ந்து மற்றவர்களுடன் செய்ய 1 நிமிடம் அனுமதியுங்கள். |
| சிரிப்பை மற்றவர்களிடம் அனுப்பு | இந்த நீட்டுதலில், உங்களை ஒருவர் வாழ்த்தியபின்தான் மற்றவரை நீங்கள் வாழ்தலாம். ஒரு நபர் கிண்டலான முறையில் கை குலுக்கி சிரிக்க வேண்டும. யாரெல்லாம் இந்த வாழ்தை பெற்றுக் கொண்டார்களோ அவர்கள் மற்ற நபரை அதே முறையில் வாழ்த்தை அனுப்ப வேண்டும். குழுவில் உள்ள மற்றவர்களை வாழ்த்த எவ்வளவு நேரம் எடுக்கும் என்று நினைக்கிறீர்கள். |

<table>
<tr>
<td>மெழுகுவர்த்தியை கண்டுப்பிடியுங்கள்</td>
<td>உறையில் போடப்பட்ட மெழுகுவர்த்திளை தரையில் பரப்பி வையுங்கள். ஒருவரின் கண்களை கட்டிவிட்டு மெழுகுவர்த்தி எங்குள்ளது என்று யாருடைய உதவியும் இல்லாமல் கண்டுப்பிடிக்க சொல்லவும்.<br>60 நொடிக்குபின், கண்கட்டியுள்ள நபர்களுக்கு தொடாமல் ஒருவரை உதவி செய்ய சொல்லுங்கள்.<br>60 நொடிக்குபின், கண்கட்டியுள்ள நபருரை கைபிடித்து மெழுகுவர்த்தி இருக்கும் இடத்திற்கு செல்ல உதவி செய்யுங்கள்.</td>
</tr>
<tr>
<td>எனக்கு விருப்பமானது என்ன</td>
<td>ஒவ்வொரு முறையும் ஓர் அறிக்கையை பயிற்சியாளர் சொல்லும்போது பங்காளர்கள் தனக்கு விருப்பமான பக்க அறையில் நகர்ந்த செல்ல வேண்டும். உதாரணத்திற்கு: உங்களுக்கு ஐஸ்கீரீம் பிடித்தால் இடது பக்கமாக செல்லவும் அல்லது பழங்கள் பிடித்தால் வலது பக்கமாக செல்லவும் கீழ்காணும் பட்டியலை பயன்படுத்து விளையாடலாம். உங்கள் சொந்த கருத்தையும் கூறலாம்..
<table>
<tr><th>உங்களுக்கு பிடித்தால் இடதுபுறம் செல்லவும்.</th><th>உங்களுக்கு பிடித்தால் வலதுபுறம் செல்லவும்.</th></tr>
<tr><td>உயிரியல் பூங்காவிற்கு போக விருப்பமா?</td><td>விளையாட்டு பொருள் கொடுக்கபட விருப்பமா?</td></tr>
<tr><td>சொந்த சொப்பு செய்தீர்களா?</td><td>அதிகபட்சம் வாங்குவீர்களா?</td></tr>
<tr><td>உங்கள் குழந்தை பருவத்தை நினைவில் வைத்திருக்கிறீர்களா?</td><td>சிறிதளவே நினைவிருக்கிறது</td></tr>
<tr><td>திருச்சபைக்கு செல்ல பிடிக்கும்</td><td>பிடிக்காது அல்லது போனதே இல்லை</td></tr>
<tr><td>தனிமை பிடிக்கும்.</td><td>மற்றவர்களோடு இருக்க பிடிக்கும்</td></tr>
</table></td>
</tr>
<tr>
<td>தொற்றும்</td>
<td>ஒருவரை உள் நிறுத்தி மற்ற எல்லோரையும் அறையில் சுற்றி நிற்க சொல்லுங்கள். எல்லோரும் மரித்து போய் விட்டது போல் நடிக்க சொல்லுங்கள் (ஆனால் அவர்கள் நின்றுக்கொன்டிருப்பார்கள்.) அசைவோ சத்தமோ இருக்க கூடாது. ஒருவருக்கு மாத்திரம் மற்றவர்களை பாதிக்கும் தொற்று இருக்கிறது ஆனால் தொடுவதில் மூலமாகதான் அவர்களை அதை மற்றவர்களுக்கு பரவி விட முடியும் என்ற எடுத்துரைக்கவும். ஒருவரை தொடும் போது அந்த நபர் உயிர் பெறுகிறார் அனால் சில நிலையில் தான். எல்லோரும் உள் உள்ள நபர் செய்யும் செயலையும் சத்தத்தையும் பின்பற்ற வேண்டும். உள்ளே உள்ளவர் கைதட்டுவதில் தொற்று உள்ளவதாக இருக்கலாம். அவர் நகர்ந்து மக்கள் மேல் மோதும் போது அந்த நபர் உயிருடன் வந்து கைதட்ட ஆரம்பித்து விடுவார். இதை 2 அல்லது 3 முறை முயற்சி செய்யவும். நீங்கள் இதை புன்னகையுடன் செய்யலாம். பைத்தியகாரதனமான நடை, பாடலை பாடலாம், தும்பலாம். ஆடலாம் அல்லது அப்படியே வரலாம்.</td>
</tr>
</table>